பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 தை 04 சனிக்கிழமை (18-01-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:53

# எதிரணித் தலைவர்கள் குழு

# விரைவில் வடக்கே விஜயம்

## மக்களின் அவலத்தை நேரில் கண்டறிவர்

கொழும்பு,ஜனவரி18

**எதிர்க்கட்சிகளின் மூத்த தலைவர்களைக் கொண்ட உயர் மட்டக்குழு ஒன்று விரைவில் யாழ். குடாநாட்டுக்கு வரவிருக்கின்றது.**

**அங்கு மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் அவர்கள் அனுபவிக்கும் அவலங்கள், கஷ்டங்கள் என்பவற்றை இக்குழு நேரில் கண்டறியும் எனத் தெரியவருகின்றது.**

உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினையால் இடம்பெயர்ந்துள்ள மக்கள் அனுபவித்துவரும் கஷ்டங்கள், மீனவர்கள் மற்றும் விவசாயிகள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள், நெடுந்தீவு மக்களின் போராட்டம் ஆகியவை குறித்து இக்குழுவினர் விசேட கவனம் செலுத்துவர் எனக் கூறப்படுகின்றது.

இக்குழுவில் பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த மூத்த தலைவர்கள் இடம்பெறுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குழுவில் இடம்பெறும் தலைவர்களின் விவரம் ஓரிரு நாள்களில் தெரியவரும் என்றும் -

அநேகமாக அடுத்த வாரத்தில் இக்குழு யாழ்.வரும் என்றும் - எதிர்பார்க்கப்படுகின்றது.

நெடுந்தீவு, குருநகர், தச்சன்

(16ஆம் பக்கம் பார்க்க)

## 'பொங்கு தமிழ்' நிகழ்வின் 2ஆம் ஆண்டு நிறைவுவிழா

### யாழ்.பல்கலையில் நேற்று நடந்தது

யாழ்ப்பாணம்,ஜன.18

யாழ் பல்கலைக்கழக சமூகத்தால முன்னெடுக்கப்பட்ட 'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வின இரண்டாம் ஆண்டு நிறைவுவிழா நேற்று இடம்பெற்றது.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மாணவர் ஒன்றியத் தலைவர் க.பரணிதரன் தலைமையில் இந்த விழா இடம்பெற்றது. சுடரேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது. நுண்கலைப்பீட விரிவுரையாளர் கலாநிதி க.சிதம்பரநாதன் சுடரினை ஏற்றினார். அதனைத் தொடர்ந்து துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மங்கல விளக்கேற்றினார். பின்னர் அகவணக்கம் இடம்பெற்றது. அகவணக்கம் இடம்பெற்ற வேளையில் நினைவுப் பாடலும் இசைக்கப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானின் விசேட பிரதிநிதியை ஜனாதிபதி சந்திக்க மறுப்பு

### வேலைப்பளு காரணமாம்

கொழும்பு,ஜன.18

இலங்கைக்கான ஜப்பானின் விசேட பிரதிநிதி யுசுசி அகாஷியை சந்திக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மறுத்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. வேலைப்பளு காரணமாகவே ஜப்பானின் விசேட பிரதிநிதியை ஜனாதிபதி சந்திக்கவில்லை என்று கூறப்பட்டது.

இதேவேளை, விசேட பிரதிநிதி யசுசி அகாஷி நேற்றுக் காலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அலரி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினார். எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, வெளிநாட்டமைச்சர் டிரோன் பெர்ணாண்டோ, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் ஆகியோரையும் ஜப்பானின் விசேட பிரதிநிதி யசுசி அகாஷி நேற்றுச் சந்தித்து உரையாடினார்.

(ஒ)

#### தமிழர் எண்ணத்தை உலகுக்குச் சொல்ல

## வடக்கு - கிழக்கு மக்களைத் திரட்டி திருமலையில் பெரும் எழுச்சி நிகழ்வு!

### 'பொங்குதமிழ்' ஏற்பாட்டாளர்கள் தயாராகின்றனர்

யாழ்ப்பாணம்,ஜன.18

தங்கள் தாயக மண்ணை ஆக்கிரமித்துள்ள சக்திகளை வெளியேற்ற ஈழத்தமிழர்கள் ஒரே தலைமையின் கீழ் அணிதிரண்டுள்ளனர். இதனை உலகின் செவிகளுக்கு உரத்துச் சொல்லும் வகையில் வடக்கு - கிழக்கு மக்களை ஒன்றிணைத்து திருகோணமலையில் பெரும் மக்கள் எழுச்சி நிகழ்வு ஒன்று வெகுவிரைவில் நடத்தப்படவுள்ளது. யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் 'பொங்குதமிழ்' ஏற்பாட்டுக்கான மாவட்டக் குழுக்களின் பிரதிநிதிகள் இதனைக் கூட்டாக அறிவித்தனர்.

இது பற்றி அவர்கள் கூறியதாவது:-

'பொங்குதமிழ்' ஏற்பாட்டுக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் தத்தமது மாவட்டங்களில் பல தரப்பட்டவர்களையும் சந்தித்து அவர்களின் எண்ணங்களை சேகரித்து வருகின்றனர்.

எமது சொந்த மண்ணில் ஆழ வேரூன்றியுள்ள ஆ[illegible]ரமிப்புச் சக்திகளை வெளியேற்ற[illegible] என்பதே மக்கள் அனைவ[illegible]ம் பெரு விருப்பமாகும்.

மக்களின் [illegible]த எண்ணத்தை பிரதிபலிக்கும் வகையில் பெரும் எழுச்சிநிகழ்வை திருமலையில் நடத்த ஏற்பாடுகளை மேற்கொண்டுவருகிறோம். தமிழினம் பலம்மிக்க ஒரே

(16ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் தூதர் வவுனியா விஜயம் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்

கொழும்பு,ஜன.18

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் ஸ்ரீபன் எவான் வவுனியாவுக்கு நேற்று விஜயம் செய்தார்.

வவுனியாவில் அரச அதிபர் கே. கணேஷ் உட்பட பல அரச உயர் அதிகாரிகளை அவர் சந்தித்து தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராய்ந்தார்.

குறிப்பாக அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த பின்னர் ஏற்பட்ட மாற்றங்கள், மக்களின் வாழ்க்கை நிலை ஆகியவை தொடர்பாக அரச அதிகாரிகளிடம் பிரிட்டிஷ் தூதுவர் கேட்டறிந்து கொண்டார்.

இராணுவ உயரதிகாரிகளுடனும் அவர் பேச்சுக்களில் ஈடுபட்டார்.

இதேவேளை, நேற்றுமாலை அவர் கிளிநொச்சிக்கு செல்லவிருந்தார். அங்கு புலிகளின் முக்கிய பிரதிநிதிகளை அவர் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பிரிட்டிஷ் தூதுவர் இன்றுகாலை கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கான சூழ்நிலை தொடர்பாக இங்கு அவர் ஆராய்வார்.

(ஒ-4)

## நிவாரண அரிசி தரமானதென சோதனையில் முடிவு

வடமராட்சி,ஜன.18

யாழ்குடாநாட்டில் நிவாரணத்துக்கு விநியோகிக்கப்பட எடுத்துவரப்பட்டுள்ள அரிசி தரமானதா என யாழ். செயலக பிரதி உதவித்திட்டப் பணிப்பாளரால் நேற்று பரிசோதனை செய்யப்பட்டது.

'சஜிந்த'என்ற கப்பலில் அரிசி உட்பட நிவாரணத்துக்கு விநியோகிக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். கல்விப் பணிப்பாளராக விக்னேஸ்வரன் இட[illegible]ற்றம்

யாழ். கல்வி நிர்வாகப் பதவிகளில் பெரும் மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

இதுவரை காலமும் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் பணிப்பாளராகப் பதவி வகித்து வந்த திருமதி எஸ். மகாலிங்கம் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்த்தப்பட்டிருக்கிறார். அவரது இடத்திற்கு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் இடமாற்றப்பட்டிருக்கிறார்.

வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திருமதி றெஜினா இருதயநாதன் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளராகவும் -

தென்மராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளராக பதவி வகித்த எஸ்வேணுகோபால் தீவக வலயக் கல்விப் பணிப்பாளராகவும் இடமாற்றம் பெறுகின்றனர்.

இந்நியமனங்கள் அனைத்தும் உடனடியாக நடைமுறைக்கு வரவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-8)

## கொட்டாஞ்சேனையில் ஒருவர் சுட்டுக்கொலை!

கொட்டாஞ்சேனைப் பகுதியில் இனந்தெரியாத நபர்களால் ஒருவர் சுட்டுக்கொலைசெய்யப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றது.

கொட்டாஞ்சேனை சென். பெனடிக் விளையாட்டு அரங்கின் பிரதான வாயிலில் வைத்து அன்ரனி ரொசாரியோ (வயது 43) என்ற நபரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

புளூமெண்டல் வீதியில் வசிக்கும் இவர் வர்த்தக போட்டியின் காரணமாக கொலை செய்யப்பட்டிருக்கலாம் என பொலீஸார் சந்தேகிக்கின்றனர் வாகனம் ஒன்றில் வந்த நபர்களே அவரைச் சுட்டுக்கொலை செய்துள்ளதாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன.

(ஒ)

#### சென்னையிலிருந்து சுயவிருப்பின் பேரில்

## 34 இலங்கைத் தமிழ் அகதிகள் கொழும்புக்கு அனுப்பிவைப்பு

சென்னை,ஜன.18

சென்னைக்கு அருகேயுள்ள அகதிகள் முகாமில் தங்கியிருந்த 34 இலங்கையர்கள் நேற்றுக் காலை விமானம் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அமைதிச் சூழலை அடுத்து சென்னை அருகே புலல் பகுதியில் உள்ள அகதிகள் முகாமில் இருந்து 11 குடும்பங்களைச் சேர்ந்த 34 தமிழ் அகதிகள் தாங்கள் நாடுதிரும்ப விரும்புவதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கூறினர். இதனை அடுத்து அவர்களை இலங்கைக்கு அனுப்பும் பணிகளில் அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயத்தினர் ஈடுபட்டனர். அதன்படி நேற்றுக் காலை அந்த 34 தமிழ் அகதிகளும் சென்னையில் இருந்து விமானம் மூலம் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரச, தனியார் ஊழியர்களுக்கு நான்கு மாதங்களில் சம்பள உயர்வு

கொழும்பு,ஜன.18

அரச, தனியார் துறைகளில் தொழில்புரிபவர்களுக்கான சம்பளம் அடுத்த நான்கு மாதங்களுக்குள் அதிகரிக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்வதைக் கவனத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நிதியமைச்சர் கே.என். சொக்ஸி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஆண்டில் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவு காரணமாக அரசினால் சம்பளத்தை அதிகரிக்க முடியவில்லை. ஆனால், இந்த ஆண்டு குறிப்பிட்ட அளவு பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளதால் சம்பளத்தை அதிகரிக்கக்கூடிய நிலை உருவாகியுள்ளது.

வர்த்தக சபைகள், தொழிற் சங்

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வின் இரண்டாம் ஆண்டு நிகழ்வுகள் நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றன. இந்நிகழ்வுகளின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை



நுண்கலைத்துறை விரிவுரையாளர் கலாநிதி என்.சிதரம்பரநாதன் 'பொங்கு தமிழ்' சுடர் ஏற்றுகிறார்.



துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மங்கள விளக்கேற்றுகிறார்.



'பொங்கு தமிழ்' எழுச்சிப்பாடல் பாடப்பட்டபோது...



நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்.

படங்கள் : வசந்தன்











நிகழ்வையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சியின் சில காட்சிகள்.

## எமது சொந்த மண்ணில்

# நிம்மதியாக வாழும்நிலை வரும்வரை நாங்கள் ஓய்ந்திருக்க முடியாது!

## 'பொங்கு தமிழ்' ஆண்டு விழாவில் வண.பிதா தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,ஜன.18

'எமது சொந்த மண்ணில் நாம் நிம்மதியாக வாழும் நிலை ஏற்படும் வரை நாங்கள் ஓய்ந்திருக்க முடியாது' - இவ்வாறு தெரிவித்தார் வண. பிதா எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகளார்.

'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வின் இரண்டாம் ஆண்டு நிறைவை ஒட்டி நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்த மண்ணுக்கும், மக்களுக்கும் இனத்துக்கும அவசியமான 'பொங்கு தமிழ்' நிகழ்வு சரியான ஒரு தருணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டமை பாராட்டுக்குரியது. இப்பொழுது எம் மக்கள் ஒன்றிணைந்து விட்டார்கள். ஒரே இலட்சியம், ஒரேதலைமை என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள்.

"ஆனாலும், சமாதானத்துக்கான பயணம் மிகவும் நீண்டது.

சமாதானத்தை அடைவதற்கு இன்னும் பல படிகள் தாண்டவேண்டும். எமது அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவே போராட்டம் ஆரம்பமானது. அதனை எவரும் மறுக்க முடியாது.

இந்த மண்ணில் இருந்து பிறக்கும் குரல் எங்கும் ஒலிக்கவேண்டும். அதன் மூலம் எமக்கு உரிமைகள் கிட்டவேண்டும்.

"எமது உரிமைகள் மறுக்கப்பட்டதால் ஆரம்பமான போராட்டம் இது. இதில் எமக்காக உயிர் கொடுத்தவர்கள் அநேகர். அவர்கள் எம்முடன் பிறந்து, எம்முடன் வாழ்ந்தவர்கள். அவர்களின் சடலங்கள் மீதுதான் நாம் இப்போது வாழ்ந்து கொண்டு இருக்கிறோம் என்பதை எவரும் மறந்து விடக்கூடாது. எனவே, எமது மண் எமக்குக் கிடைக்கும் வரை நாம் அனைவரும் ஓய்ந்திருக்க முடியாது" - என்றார் அவர்.

திருகோணமலை மாவட்ட மக்களின் சார்பில் கலந்து கொண்டு உரையாற்றிய வங்கி அலுவலரான எஸ்.விக்னேஸ்வரன் தனது உரையில் கூறியதாவது:-

"தமிழர் தாயகத்தின் தலைநகரான திருகோணமலை மெல்ல மெல்ல தமிழர்களிடமிருந்து பறிபோய்க் கொண்டிருக்கிறது. அந்த அளவிற்கு அங்கு குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. தமிழ் மக்களின் நிலங்களை அபகரித்து அதில் பிறர் குடியேறிவருகின்றனர். இவர்களை அங்கிருந்து அகற்ற எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை.

"1931 ஆம் ஆண்டில் கந்தளாயில் சிங்கள இனத்தவரில் 832 பேர் மட்டுமே இருந்தனர் என புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால், இப்பொழுது அங்கு தமிழர்கள்தான் 832 பேர் உள்ளனர். சிங்களவர்கள் பெரும் எண்ணிக்கையில் அதிகரித்து விட்டனர்.

தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் காரணமாக அவர்கள் சற்று உறங்கிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், திருந்தவில்லை. ஆகவே, முற்றாக திருமலை பறிபோவதற்கு முன்னர் அது காப்பாற்றப்படவேண்டும். தமிழர்களுக்கு உரிமைகள் கிடைக்க பேரினவாதிகள் தடையாக இருந்தால் நாடு துண்டாடப்படுவதை எவராலும் தடுக்கமுடியாது - என்றார்.

(ஒ-10-5)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள கூட்டுறவுத் திணைக்களங்களின் உதவிக் கணக்காய்வாளராகளாகக் கடமையாற்றுபவர்களுக்கான கலந்துரையாடல் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் கூட்டுறவுத் திணைக்கள உதவிக் கணக்காய்வாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட கூட்டுறவுத் திணைக்கள கணக்காய்வாளர் சங்கத் தலைவர் சு.சுகிர்ததாஸ் கேட்டுள்ளார். (ஒ-8)

## கௌரவிப்பு விழா

மிருதங்கத்துறையில் பொன்விழாக் காணும் மிருதங்க வித்துவான் கலாபூஷணம் பசுபதிரத்தினம் செல்வராசாவின் கௌரவிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முன்னாள் கல்விப் பணிப்பாளர் கோ.சி.வேலாயுதம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதமவிருந்தினராகவும், யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை, இந்து கலாசார அமைச்சின் யாழ். பிராந்திய உதவிப்பணிப்பாளர் சிவமகாலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.(எ-5)

# அதிரடிப்படையினரின் பஸ் கவிழ்ந்து 15பேர் காயம்; 5பேருக்கு ஆபத்து!


கொழும்பு,ஜன.18

பொலீஸ் விசேட அதிரடிப் படையினர் பயணஞ்செய்த பஸ் ஒன்று மிகுந்தலைப் பகுதியில் நேற்று விபத்துக்குள்ளானதில் 15படையினர் காயமடைந்தனர். இவர்களில் 5பேரின் நிலை ஆபத்தானதாக இருந்ததால் அவர்கள் உடனடியாக அநுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

களனி கோணபொல விசேட அதிரடிப்படைமுகாமைச் சேர்ந்த 50 படையினர் வவுனியாவை நோக்கி இந்த பஸ்ஸில் பயணம் செய்திருக்கின்றனர். சீரகேடடைந்திருக்கும் வீதியில் பஸ் பயணம் செய்து கொண்டிருக்கையில் சக்கரம் ஒன்று காற்றுப் போனதாலேயே இவ்விபத்து நடந்திருக்கிறது. நள்ளிரவு தாண்டியவேளையில் இவ்விபத்து நடைபெற்றதாக மிகுந்தலைப் பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர். (ஒ)

### பரதநாட்டிய அரங்கேற்றத்தில் பங்குகொள்ள

# அடையாறு லக்ஷ்மணன் யாழ்ப்பாணம் வருகின்றார்



யாழ்ப்பாணம்,ஜன.18

பரதக்கலை விற்பன்னர் அடையாறு லக்ஷ்மணன் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெறவிருக்கும் நாட்டிய கலாகேந்திராவின் பரதநாட்டிய அரங்கேற்ற விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வதற்காகவே அவர் இங்கு வருகைதருகிறார்.

யாழ்.கொமர்ஷல் வங்கியின் முகாமையாளர் இரவீந்திராவின் புதல்வியான துஸ்யந்தி இரவீந்திராவின் அரங்கேற்ற நிகழ்வு நாளை அங்கு நடைபெறவிருக்கிறது.

'பரத சூடாமணி' என்னும் நாட்டிய நிறுவனத்தை சென்னை அடையாற்றில் ஆரம்பித்து பரதக்கலை வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றி வருபவர் அடையாறு லக்ஷ்மணன். இவரது நாட்டிய நிறுவனத்தில் பயின்ற பல யாழ்ப்பாணத்துப் பெண்கள் இன்று குடாநாட்டிலும் உலகின் பல பகுதிகளிலும் பரதக்கலை வளர்ப்பதில் பெரும் பங்காற்றி வருகின்றனர். (ஐ)

## மருந்துவ வார நிகழ்ச்சித் தொகுப்பு 'ஐ' அலைவரிசையில்

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களால் அண்மையில் நடத்தப்பட்ட மருத்துவ வார இறுதி நாள் நிகழ்வுகளின் தொகுப்பு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ரூபவாஹினியின் 'ஐ' அலைவரிசையில் ஒலிபரப்பாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மருத்துவ மாணவர்களின் நாடகம், நடனம், இன்னிசை போன்ற கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)







சூரிச் சிகரம் நிறுவனத்தின் ஆதரவில் ரீ.ரீ.என். நடத்திய பொங்கல் விழா நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. 'உதயன்' பத்திரிகை ரீ.ரீ.என். நிறுவனத்துடன் இணைந்து நடத்திய மாவீரர் தினக் கவிதைப் போட்டி, அறிவுச் செல்வம், பாடும் சுரங்கள் ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்றோர்களுக்கான பரிசில்களும் இந்நிகழ்வில் வழங்கப்பட்டன. பரிசளிப்பு நிகழ்வு மற்றும் கலை நிகழ்ச்சிகளின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

# ஈராக்கைத் தாக்க முயல்வோருக்கு அதில் தோல்விதான் கிடைக்கும்

## அதிபர் சதாம் எச்சரிக்கை

பக்தாத்,ஜன.18

ஈராக் மீது எவராவது தாக்குதல் நடத்த முயன்றால் அவர்கள் தோல்வியையே சந்திக்க நேரும்.

- இவ்வாறு எச்சரித்துள்ளார் ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைன். வளைகுடாப் போர் நடைபெற்றதன் 12ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வையொட்டி நாட்டு மக்களுக்கு அவர் உரையாற்றினார். அப்போதே மேற்கண்ட எச்சரிக்கையை அவர் வெளியிட்டார்.

பக்தாத்தின் வாயில்களை ஆக்கிரமிப்பவர்கள் தற்கொலைக்கு ஒப்பான செயலில் ஈடுபடுகின்றார்கள் என்பதை ஈராக் மக்கள் நிரூபிப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்கள் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதேசமயத்தில் ஈராக்கைத் தாக்க அமெரிக்கா முழு மூச்சில் முயற்சிகளை மேற்கொண்டுவருவதற்கான பதிலாகவே அதிபர் சதாம் இப்படிக் கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பல நாடுகள் சேர்ந்து 12ஆண்டுகளுக்கு முன்னர் ஈராக் மீது நடத்திய ஆக்கிரமிப்பை ஈராக்கிய மக்கள் முறியடித்துள்ளனர். அமெரிக்கா தனது வலிமையினால் ஈராக்கை அடக்க கடந்த முறை எடுத்த முயற்சி தோல்வியில் முடிவடைந்தது. ஆனால், அது தனது பழைய தவறுகளில் இருந்து இன்னும் பாடம் கற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. யாராவது பக்தாத்தின் மதில்களின் மேலாக பாய்வதற்கு முயற்சி செய்தால் அது தோல்வியில்தான் முடிவடையும். - என்றார் சதாம்.



ஈராக்கில் கண்டுபிடிக்கப்பட்ட ஏவு ஆயுதம் ஒன்றின் வெற்றுக் கவசம்

இதற்கிடையில் -

ஈராக்கில் இரசாயன ஆயுதங்களைச் சேகரித்து வைக்கக் கூடிய பொருள்கள் சிலவற்றை - அதாவது இரசாயன ஆயுதங்களின் வெளிக் கவசங்கள் - ஐ.நா. ஆயுதக் கண்காணிப்புக் குழுவினர் கண்டுபிடித்துள்ளனர். இவை தற்போதும் மிக நல்ல நிலையிலேயே இருக்கின்றன என்று அவர்கள் தெரிவிக்கின்றனர். இதனால், அவை மிக அண்மைக் காலம் வரை அவை பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று பரிசோதகர்கள் நம்புகின்றனர்.

தெற்கு ஈராக்கில் உள்ள இராணுவக் களஞ்சியம் ஒன்றிலேயே இந்த ஆயுத வெளிக் கவசங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வாறான 12 வெளிக்கவசங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதில் அடைக்கப்பட்டிருந்ததாக நம்பப்படும் இரசாயன ஆயுதங்கள் மிகவும் சக்திவாய்ந்தவை என்றும்-

இந்தக் குண்டுகள் ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலி வாங்கிவிடும் என்றும் அமெரிக்கா கூறியுள்ளது.

ஆனால், அவை தாம் பயன்படுத்திய ரொக்கெட்டுக்களின் வெளிக் கவசங்கள் என்று ஈராக் தெரிவித்தது.

பரிசோதனை செய்வதற்காக அவற்றை ஐ.நா.பரிசோதகர்கள் எடுத்துச்சென்றுள்ளனர். (ம)

# பாகிஸ்தானில் வெளிநாட்டு தூதர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு தனிப்படை அமைப்பு

இஸ்லாமாபாத்,ஜன.18

பாகிஸ்தானில் உள்ள வெளிநாட்டுத் தூதர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காகத் தனிப்படை ஒன்றை அந்த நாட்டு அரசு அமைத்துள்ளது.

பாகிஸ்தானில் உள்ள வெளிநாட்டுத் தூதர்கள் மீது அடிக்கடி தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

தலிபான், அல்கெய்டா தீவிரவாதிகள் மீது அமெரிக்கா நடவடிக்கை எடுத்ததைத் தொடர்ந்து பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகள் மேலை நாட்டு தூதர்கள் மீதும் அவர்கள் குடும்பத்தினர் மீதும் தங்கள் ஆத்திரத்தைத் திருப்பி உள்ளனர்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் அமெரிக்கத் தூதரகம் அருகே கிறிஸ்தவ தேவாலயத்தின் மீது தீவிரவாதிகள் வெடிகுண்டுகளை வீசினர். இதில் 5 பேர் கொல்லப்பட்டனர்; 45 பேர் காயமடைந்தனர்.

இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்கவும் தூதர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் அந்நிய நாட்டினருக்கும் பாதுகாப்பு அளிக்கவும் பாகிஸ்தான் அரசு தனிப்படை ஒன்றை அமைத்துள்ளது. இதற்காகத் தனித் துறையும் தொடங்கப்பட்டுள்ளது. தூதர்கள் பாதுகாப்புத் துறை என்று அதற்குப் பெயர்.

இந்தத்துறை இஸ்லாமாபாத் நகரில் அமெரிக்கத் தூதரகம் அருகே அமைக்கப்படும்.

இத்துறையில் பணியாற்றும் அதிகாரிகள் அனைவரும் பொலீஸ் துறையிலிருந்து மாற்றப்பட்டவர்கள். அவர்களுக்கு தீவிரவாதத்தை எதிர்ப்பதற்குப் பயிற்சியளிக்கப்படவிருக்கிறது.

தீவிரவாதத்தை ஒழிப்பதுதான் பாகிஸ்தான் எதிர்நோக்கியிருக்கும் மிகப் பெரிய சவால் என்று பாகிஸ்தான் உள்துறை மந்திரி பைசல் ஹயாத் கூறினார். (ம)

# சதாம் மாளிகையில் மீண்டும் சோதனை

பக்தாத்,ஜன.18

பெருவாரியான மக்களுக்கு பேரழிவை ஏற்படுத்தக்கூடிய பயங்கர ஆயுதங்கள் ஈராக்கில் பதுக்கி வைக்கப்பட்டு இருக்கின்றனவா என்பதை கண்டுபிடிப்பதற்காக ஐ.நா.கண்காணிப்புக்குழு ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் மாளிகையில் மீண்டும் சோதனை நடத்தியுள்ளது. 7 கார்களில் கண்காணிப்புக் குழுவினர் அல்-ஜாம் ஹவுதி மாளிகைக்குச் சென்று சோதனையிட்டனர். அவர்களுக்கு எந்த இடையூறும் ஏற்படுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

சதாமுக்கு மொத்தம் 8 மாளிகைகள் உள்ளன. அவற்றில் 3 மாளிகைகள் பக்தாத்தில் இருக்கின்றன.

ஈராக்கில் 8 வாரங்களாக நடக்கும் ஆயுத சோதனையில் அதிபர் மாளிகையில் சோதனை செய்யப்படுவது இது இரண்டாவது முறையாகும்.

இது 1950ஆம் ஆண்டு கட்டப்பட்டது. வளைகுடா போரின்போது அமெரிக்கப் போர்விமானங்கள் இந்த மாளிகை மீது குண்டு வீசித் தாக்கின.

ஆளும் வர்க்கத்தினருக்குப் பாதுகாப்பு அளிக்கும் தனிப் பாதுகாப்புப் படை, குடியரசுப்படை ஆகியவற்றின் அலுவலகங்கள் இந்த மாளிகையில் செயல்பட்டு வருகின்றன.

இங்கு கண்காணிப்புக்குழு 4 மணிநேரம் சோதனை நடத்தியது. (ம)

## உலக அரங்கில்

### டாம் குரூசிக்கு ஒரு கோடி டொலர் நஷ்டஈடு

மிஷின் இம்பாசிபிள் உட்பட பல படங்களில் நடித்த பிரபல ஹொலிவூட் நடிகர் டாம்குரூசிக்கு 1கோடி டொலர் நஷ்டஈடு வழங்க லொஸ் ஏஞ்சல் நீதிமன்றம் உத்தரவிட்டு இருக்கிறது. டாம் குரூசியுடன் ஓரின சேர்க்கையில் ஈடுபட்டதாக இன்னொரு நடிகர் கடந்த 2001ஆம் ஆண்டு கூறியிருந்தார்.

இது டாம் குரூசியின் புகழுக்கு இழுக்காகப் போய்விட்டது. அதைத் தொடர்ந்து அந்த நடிகர் மீது டாம் குரூசி அவதூறு வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கில்தான் நீதிபதி இந்தத் தீர்ப்பை வழங்கினார். (ம)

### நேட்டோ படையில் புதிய தளபதி

வடஅட்லாண்டிக் ஒப்பந்த நாடுகள் அமைப்பான நேட்டோவுக்கென தனி இராணுவம் உள்ளது. இந்த நாடுகளின் கூட்டு படைக்கு தளபதியாக ஜேம்ஸ் எல்ஜோன்ஸ் நியமிக்கப்பட்டு இருக்கிறார். அடுத்த வாரம் இவர் பதவி ஏற்றுக்கொள்கிறார்.

அமெரிக்காவில் இவர் ராணுவ திணைக்கள பதவியிலும் தொடர்ந்து நீடிப்பார். 59 வயதான ஜேம்ஸ் ஜென்ஸ் ஜேர்மனியில் நடக்கும் நிகழ்ச்சியில் தனது பொறுப்பை ஏற்றுக்கொள்வார்.

# ஒரு நாடு; இரு அதிபர்கள் திணறும் அதிகாரிகள்

ஒக்லண்ட்,ஜன.18

மத்திய பசுபிக் குடியரசு நாடான நௌருவில் அதிபர் பதவிக்கு இருவர் சொந்தம் கொண்டாடி வருவது நீடிப்பதால் அங்கு பெரும் குழப்பங்களும் பொருளாதாரப் பாதிப்புக்களும ஏற்பட்டுள்ளன. நாட்டின் நிர்வாகத்திலும் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

நியூஸிலாந்து நாட்டின் ஒக்லண்ட நகருக்கு 4ஆயிரத்து 400 கிலோ மீற்றர் தொலைவில் நௌரு நாடு உள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக ரெனே ஹரிஸ் என்பவர் இந்த நாட்டின் அதிபராக இருந்து வருகின்றார். அதிபர் மாளிகையில் தங்கியிருந்து அவர் பணிகளை மேற்கொண்டு வருகின்றார்.

இவருக்குப் போட்டியாக ஏற்கனவே ஐந்து முறை பதவிவகித்த முன்னாள் அதிபர் பெர்னாட் டோவியோகோவும் அதே அதிபர் மாளிகையில் தங்கியிருந்து பணியாற்றி வருகின்றார்.

இவ்விருவரும் சிறுநீரகக் கோளாறால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு நிரந்தர சிகிச்சை தேவைப்படுகின்றது. எனவே, இவர்கள் எவ்வாறு நிர்வாகத்தைக் கொண்டு நடத்தப்போகின்றார்கள் என்று அதிகாரிகள் குழம்பிப்போயுள்ளார்கள்.

நோயாளியான அதிபர் ஹரிஸ், கடந்த ஆண்டின் பெரும் பகுதியை ஆஸ்திரேலிய மருத்துவமனை ஒன்றிலேயே கழித்தார். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவருக்கு எதிரான செயற்றிட்டங்களை வகுத்தார் முன்னாள் அதிபர் டோவியோகோ. கடந்த 5ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அதிபருக்கு எதிராகக் கண்டனத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்த அவர், ஹரிஸைப் பதவி நீக்கம் செய்துவிட்டு தானே நாட்டின் அதிபர் என்று அறிவித்துக்கொண்டார்.

ஆனால், உடனடியாக ஆஸ்திரேலியாவிலிருந்து திரும்பிய அதிபர் ஹரிஸ், தான் தொடர்ந்தும் பதவியில இருப்பதாக அறிவித்துள்ளார். இதனால், ஜனாதிபதி மாளிகை வளாகத்தில் இருந்தவாறே இருவரும் செயற்பட்டு வருகின்றார்கள். இவர்களில் யாருடைய சொற்படி நடப்பது என்று தெரியாமல் அதிகாரிகள் மண்டையைப் பிய்த்துக்கொண்டுள்ளனர். (ம)

# விமானத்தில் பிறந்த பென்குயின் குஞ்சு



ஓடும் பஸ்சிலும் ரெயிலும் பெண்ணுக்கு பிரவசம் ஏற்படுவது போல பறக்கும் விமானத்தில் முட்டையிலிருந்து பென்குயின் பறவைக் குஞ்சு வெளியே வந்திருக்கிறது. பிரான்ஸ் நாட்டின் ஆன்டிபிஸ் உயிரியல் பூங்காவுக்கு அன்டார்ட்டிக்கா பனிக் கண்டத்திலிருந்து ராக்ஹாப்பர் என்ற பென்குயின் பறவையின் 11 முட்டைகள் கொண்டுவரப்பட்டன.

அந்த முட்டைகள் உயிரியல் பூங்காவில் பொரிக்கப்பட்டு குஞ்சுகள் வெளியே வந்தன. விமானத்தில் வரும்போது ஒரு முட்டையில் இருந்து மட்டும் குஞ்சு வெளியே வந்துவிட்டது. அந்த அவசர பென்குயின் குஞ்சையும் உயிரியல் பூங்காவுக்கு கொண்டு வந்தனர்.

# உலகிலேயே விலைவாசி மிகுந்த நகரம் டோக்கியோ

உலகிலேயே விலைவாசி அதிகம் உள்ள நகரங்களாக ஜப்பானைச் சேர்ந்த டோக்கியோ, ஒசாகா ஆகியவை தொடர்ந்து நீடிக்கின்றன.

3ஆவது இடத்தில் இருந்த ஹொங்கொங்கை அப்புறப்படுத்திவிட்டு அந்த இடத்தை நோர்வேத் தலைநகர் ஒஸ்லோ கைப்பற்றியுள்ளது.

ஹொங்கொங் 4ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டது. லண்டன் 7ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டது. இருந்தபோதிலும் ஐரோப்பிய ஒன்றியத்தில் விலைவாசி அதிகம் உள்ள நகராக லண்டன் தொடர்ந்து நீடிக்கிறது. 2001ஆம் ஆண்டு அது 5ஆவது இடத்தில் இருந்தது.

பாரிஸ் நகரம் இந்த பட்டியலில் 10ஆவது இடத்தில் இருக்கிறது. இதற்கு அடுத்த நிலையில் நியூயோர்க் நகரம் இருக்கிறது.

லண்டனைச் சேர்ந்த பொருளாதார புலனாய்வு குழு இந்த ஆய்வை நடத்தியது. (ம)




Study in CANADA

Experience the North American culture,enhance your career prospects, study at Computek

-Enterprise Network Engineering

-Software Engineering, Management Diploma

Interviews:

Jaffna :19 Jan, Sunday, 9am

Colombo : 27 Jan, Monday, 4pm

For appointments & Location contact by phone or e-mail:

Hotline : 0777-107476

Jaffna : 021-222 2325

Toronto : 001 416 441 2900

Scarborough : 001 416 285 9941

e-mail : tham@computek.edu



நீங்களும் கனடாவில் உயர் கல்வியைப் பெற விரும்பினால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Computek INSTITUTE OF TECHNOLOGY

www.computek.edu


# வேட்பாளரைத் தேடுகிறது அமெ. ஜனநாயகக் கட்சி

நியூயோர்க்,ஜன18

2004ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் அமெரிக்க அதிபர் தேர்தலில் தற்போதைய அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷை எதிர்த்துப் போட்டியிடக் கூடிய தகுதியான வேட்பாளர் ஒருவரைத் தேடும் பணியை ஜனநாயகக் கட்சி தற்போதே ஆரம்பித்துவிட்டது.

கடந்த தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் புஷ்ஷை எதிர்த்துப் போட்டியிட்ட முன்னாள் துணை அதிபர் அல் கோர், தேர்தல் களத்தில் இருந்து விலகிவிட்டார். எனவே, புஷ்ஷை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி பெறக்கூடிய தகுதியான வேட்பாளரைத் தேடவேண்டிய கட்டாயத்துக்கு அமெரிக்கா தள்ளப்பட்டுள்ளது.

தற்போதைய செனட்டர் ஜோசப் லிபர்மேன், வெர்மான்ட் மாநில ஆளுநர் பதவியிலிருந்து ஓய்வு பெறவிருக்கும் ஹோவர்ட் டீன், மசாசுசெட்ஸ் பகுதி செனட்டர் ஜான் கொரி, வடக்கு கரோலினா பகுதி செனட்டர் ஜான் எட்வர்ட் மற்றும் மிசௌரி பகுதியைச சேர்ந்த டிக் கெபார்ட் ஆகிய ஐந்து பேரில் ஒருவரை ஜனநாயகக் கட்சியின் சார்பில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்த ஆலோசனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. (ம)

## திறந்த பல்கலைக்கு புதிய நுழைவாயில்

திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலைய அலுவலகத்திற்கு சமுகமளிப்பவர்கள் பிறவுண் வீதிப் பக்கமாக புதிதாக அமைக்கப்பட்ட பிராந்திய நிலைய பிரதான நுழை வாயிலைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நீண்டகாலமாக யாழ்.தொழில்நுட பக் கல்லூரியின் நுழைவாயிலே திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந் திய நிலைய உள்நுழை வழியாக உபயோகிக்கப்பட்டுவந்தது. (எ-69)


### கச்சார்வெளிப் பிள்ளையார் ஆலயத்தின் பொதுக் கூட்டம் - 20.01.2003

எதிர்வரும் (20.01.2003) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மேற்படி ஆலய முன்றிலில் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளதால், அடியார்கள் அனைவரையும் சமுகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பூசகர்
கு.பஞ்சாட்சரசர்மா.

(C/26118)



Smart Prints (Pvt.) Limited.
ஸ்மாட் பிறின்ட்ஸ் (பிறைவெட்) லிமிட்டட்

அன்புடையீர்,
நிகழும் சுபமங்களகரமான சித்திரபானு வருடம் தை மாதம் 4ம் நாள் (18.01.2003) சனிக்கிழமை பகல் 11.30 மணிக்கு (ப.நே) யாழ்ப்பாணத்தில் Smart Prints எனும் அச்சகம் கே.கே.எஸ் வீதி 717 இலக்க கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளது. அத்தருணம் தாங்களும் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை மிக்க அன்புடன் அழைக்கின்றோம்.

புதிய உதயம் Smart Prints

☛ திருமண அழைப்பிதழ்கள், வாழ்த்துமடல்கள், சஞ்சிகைகள், புத்தகங்கள், அறிக்கைகள், பிரசுரங்கள் முதலிய உங்கள் அனைத்து அச்சுத் தேவைகளையும் பூர்த்தி செய்திடவும்...

☛ ஸ்கிறின் பிறிண்டர்ஸ் உட்பட அச்சுத் துறையினரும் விரும்பியபடி உங்கள் வேலைகளை கணனியில் சிறந்த முறையில் வடிவமைத்து பெற்றுக்கொள்ளவும்...

717, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
717, K.K.S ROAD, JAFFNA.
TP - 071 - 336767
Smart Prints


## நாரந்தனை சம்பவம்: ரெலோ உறுப்பினர் இருவர் சாட்சியம்

யாழ்ப்பாணம்,ஜன.18

2001ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் திகதி நாரந்தனையில் வைத்துத் தமிழ்க் கூட்டமைப்புப் பிரமுகர்கள் தாக்கப்பட்டமை தொடர்பான வழக்கில் நேற்றுமுன்தினம் ரெலோ உறுப்பினர்கள் இருவர் சாட்சியமளித்தனர்.

நேற்றுமுன்தினம் யாழ்.நீதிமன்றில் இவ்வழக்கு விசாரணைக்கென எடுக்கப்பட்டபோதே 2ஆம் மற்றும் 12ஆம் சாட்சிகள் சாட்சியமளித்தனர். யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ பிரமுகருமான எம்.கே.சிவாஜிலிங்கமும் நேற்றுமுன்தினம் சாட்சியமளிக்க இருந்தபோதும், சுகயீனம் காரணமாகத் தன்னால் மன்றுக்கு வரமுடியவில்லை என்று மருத்துவ அறிக்கையை அவர் அனுப்பியிருந்தார்.

இதனையடுத்து, அடுத்த மாதம் 27ஆம் திகதிக்கு வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார் நீதிவான் இ.த.விக்னராஜா.

(எ-10)

## விழிப்புலனற்றோருக்கு ஆலயத்தினால் கொடுப்பனவு

வட்டுக்கோட்டை,ஜன.18

இந்து கலாசார அமைச்சின் அனுசரணையுடன், வட்டுக்கோட்டை கணனகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய பரிபாலன சபையினால், விழிப்புலனற்றோருக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணபிள்ளை லக்ஸ்மி (வயது 52, சுழிபுரம்), கோவிந்தசாமி வரதராசா (வயது 22, சுழிபுரம்), கிருஷ்ணன் மாரியம்பிள்ளை (வயது 60, சுழிபுரம் மேற்கு), முருகேசு இராசரத்தினம் (வயது 52, சுழிபுரம்), சுப்பிரமணியம் ரவிச்சந்திரன் (வயது 25, சுழிபுரம் மேற்கு) ஆகியோருக்கு இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி விழிப்புலனற்றோருக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா வழங்கப்படும் என ஆலய பரிபாலன சபைத் தலைவர் க.விசுவநாதன் தெரிவித்தார். (எ-ரி)

## பாரத்தனை ஐயனார் ஆலய குதிரை வாகனம் திருட்டு

பண்டத்தரிப்பு, பாரத்தனை ஐயனார் ஆலயத்தில் இருந்து பழைமை வாய்ந்த குதிரை வாகனம் ஒன்று இரவு வேளையில் திருடப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமையன்று இரவு நடைபெற்ற இத்திருட்டுச் சம்பவம் பற்றி இளவாலை பொலீஸ் நிலையத்தில் ஆலய பரிபாலன சபையினர் முறைப்பாடு செய்துள்ளனர்.

அண்மையில் வலி.மேற்கு பகுதியில் சுழிபுரம் சம்பு நாததேஸ்வரர் ஆலயத்தில் 40 வருட பழைமை வாய்ந்த வெண்கலத்திலான அம்மன் சிலை, சுழிபுரம் பறாளாய் விநாயகர் ஆலயத்தின் 300 வருட பழைமை வாய்ந்த கலையம்சம் பொருந்திய தேரிலிருந்த மரச் சிற்பங்களும் திருட்டுப் போனமை தெரிந்ததே.

ஆலயங்களிலுள்ள பெறுமதி வாய்ந்த அரும்பெரும் கலைப் பொருள்களையும், விக்கிரகங்களையும், வாகனங்களையும் பேணிப் பாதுகாப்பதற்கு ஆலய நிர்வாகங்கள் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்து பொதுமக்கள் தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ளது.

சமூக நலன் விரும்பிகளும் இதில் அக்கறை செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-135)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது ஆசிரியையும் யாழ். கல்வி வலய முதன்மை ஆசிரியையும் கீதவாஹினி இசைக்கல்லூரி இயக்குநருமான

செல்வி
கிருஷ்ணவேணி மயில்வாகனம்
(Dip. in Music, Dip. in Edu. S.P.Tr.Music, சங்கீத கலாவித்தகர், பண்ணிசைக் கலாவித்தகர்)

அவர்கள் தம் சேவையில் வெள்ளிவிழாக் கண்டு தொடர்ந்தும் இசைப்பணி செய்துவரும் இவ்வேளையில், அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதிற் பெருமையும் மகிழ்ச்சியும் அடைவதோடு, மேலும் பணிசிறக்க இறையாசியையும் வேண்டுகின்றோம்.

கொழும்புத்துறை. கீதவாஹினி இசைக்கல்லூரி, ஆசிரியர்தரப் பழைய மாணவர்கள்.
(13344)


# சுவாமி இராமதாசர் அறக்கட்டளை உதவியுடன் கரந்தன் குழந்தைகள் இல்லம் அடிக்கல் நடும் வைபவம் (18.01.2003)

## குழந்தைகள் இல்ல வரலாறு

ஓம் ஸ்ரீராம் ஜெய்ராம் ஜெய் ஜெய் ராம்

கொழும்பு இராமகிருஷ்ணமிசன் தலைவர் சுவாமி ஆத்மகணானந்தா அவர்கள் இன்று (18.01.2003) சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் வருகிறார். இன்று மாலை 4.30 மணிக்கு நீர்வேலியில் – கரந்தனில் அமையவுள்ள குழந்தைகள் இல்லம் இரு மாடிக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டும் வைபவம் நடைபெறவுள்ளது.

சுவாமி ராமதாசர் அறக்கட்டளைமூலம் இந்தக் குழந்தைகள் இல்லம் (ஆண்கள்) அமைய இருக்கிறது. பெண் குழந்தைகளுக்கான இல்லமொன்றும் கந்தர்மடம் அரசடி வீதியில் இயங்க இருக்கிறது. இதற்கான காணியும் வீடும் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்டு, வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த அறக்கட்டளைமூலம் செய்யப்பட்ட முதற்பணி கொழும்பில் – பம்பலப்பிட்டி – கிறபரிகார்டன்ஸ்ஸில் 'ஆனந்தசாகர' என்ற பெயரில் 2001ஆம் ஆண்டு கட்டப்பட்ட ஓர் அழகிய இரு மாடிக்கட்டடத்தில் ஏற்படுத்திய ஓர் அமைப்பாகும். இந்தியாவிலுள்ள ஆனந்தாஸ்ரத்தின் ஸ்தாபகராகிய மகான் சுவாமி ராமதாசரின் நினைவாக இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இம்மகான் 1954இல் தனது உலக யாத்திரையின்போது இலங்கைக்கும் விஜயம் செய்தார். அவருடன் அன்னை கிருஷ்ணாபாய், சுவாமி சச்சிதானந்தா ஆகிய பிரதம சீடர்களும் வந்திருந்தனர். இலங்கையில் பல பாகங்களுக்கும் சென்றிருந்த சுவாமி, யாழ்ப்பாணத்திற்கும் வருகைதந்து பல அரிய உரைகள் ஆற்றியிருக்கிறார். இவருடைய உரைகள் யாவும் Swami Ramadas Speaks என்ற தலைப்பில் 5 தொகுதிகளாக புத்தகவடிவில் வெளிவந்துள்ளன. சுவாமி ராமதாசரிடம் உபதேசம் பெற்று, அவருடைய போதனைகளில் நாட்டம் கொண்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களாலேயே அறக்கட்டளையொன்று சுவாமி ராமதாசர் பெயரில் ஏற்படுத்தப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது. சுவாமியினுடைய போதனைகளை மக்களிடம் பரப்புவது, தர்மப் பணிகளை மேற்கொள்வது போன்றவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

போதனையென்று சுவாமி ராமதாசர் புதிதாக எதையும் சொல்லவில்லை. இறைநாம ஜபத்தை மகிமைப்படுத்துவதே அவரின் போதனைகளின் சாரமாகும். இறைநாம ஜபமொன்றையே சாதனையாகக் கொண்டு ஆத்மீக வாழ்வின் அதி உன்னத நிலையை அடைந்த மகான் அவர். தன்னை நாடிவந்த அடியவர்களுக்கு இறைநாம ஜபம் ஓர் இலகுவான சாதனையென அறிவுறுத்தி எல்லா


சுவாமி இராமதாசர்


அன்னை கிருஸ்ணாபாய்


சுவாமி சச்சிதானந்தர்

இடர்களையும் போக்கவல்ல அரு மருந்தென்றும் வலியுறுத்தினார். நாயன்மார்களும், ஆழ்வார்களும், வேறு பல மகான்களும் ஏன் – எல்லா மதங்களுமே இறை நாமத்தின் மகிமையைப் பேசுகின்றன. ஆகவேதான், ஆனந்தசாகராவில் தினமும் காலை, மதியம், இரவு ஆகிய மூன்று வேளைகளிலும் நாம ஜெபம் செய்யப்பட்டு பங்குபற்றும் அடியவர்களுக்கு 3 வேளையும் உணவு வழங்கப்படுகிறது. பணவசதி குறைந்த குடும்பங்களுக்கும், பணவசதியில்லாது கல்வியைத் தொடரமுடியாத பல மாணவர்களுக்கும் பண வசதிகுறைந்த சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள், கல்வி நிறுவனங்கள் போன்றவற்றிற்கும் இந்த அறக்கட்டளைமூலம் உதவிகள் வழங்கப்படுகின்றன.

"ஆனந்தசாகராவின் முதலாண்டு நிறைவையொட்டி ஆனந்தாஸ்ரமத்திலிருந்து சுவாமி முக்தானந்தா அவர்கள் 2002ஆம் ஆண்டு இலங்கை வந்திருந்தார். அவர் மட்டக்களப்புக்கு விஜயம் செய்து மயிலம்பாவடியில் பல ஏக்கர் நிலப்பரப்பில் சிறுவர் இல்லம் ஒன்றிற்கான இரு மாடிக் கட்டட நிர்மாணத்திற்காக அடிக்கல் நடப்பெற்று கட்டட வேலைகள் துரிதமாக முன்னேறிவருகின்றன. 2ஆவது வருடபூர்த்தியானபோது யாழ்ப்பாணத்தில் இராமகிருஷ்ணமிசன் தலைவர் சுவாமி ஆத்ம கணானந்தா அவர்கள் அடிக்கல் நாட்டி இன்னுமொரு பெரிய பணியைத் தொடக்கிவைப்பது இந்த அமைப்பின் வளர்ச்சியைக் காட்டுகிறது.

ஆன்மீகப் பின்னணியில் சிறுவர்களை உருவாக்கி நற்பிரஜைகளை நாட்டிற்கு அர்ப்பணிக்கவேண்டும் என்பதே இந்த அமைப்பின் நோக்கம். இந்த நல்நோக்கம் நிறைவேற அர்ப்பணிப்புடன் செயற்பட்டு உதவக்கூடியவர்கள் முன்வந்து இணைந்து கொள்வார்கள் என்ற திடமான இறைநம்பிக்கையுடன் இப்பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. எங்கள் ஆசான் அருளியவாக்கும் இறைநாமஜபத்தின் வலிமையும் இவ்வரியபணிகளை சிறந்தமுறையில் முன்னெடுத்துச்செல்லும் என நம்புகிறோம்.

ஓம் ஸ்ரீராம் ஜெய்ராம் ஜெய் ஜெய் ராம்

## இறைநாமமும் அதன் மகிமையும்

- சுவாமி ராமதாஸ் -

இறைவனும் அவரின் நாமமும் ஒன்றே. அவையொன்றிலிருந்து ஒன்று வேறுபட்டவையல்ல. நாமமே இறைவன். இறைவனே நாமம். நாமத்தை நினைத்த மாத்திரத்திலே இறைவனுடைய தோற்றத்தினால் எமது மனம் நிறைந்து விடுகிறது. இறைவன் மீது நமது சிந்தனையை ஒருமுகப்படுத்துவதற்கு இடைவிடாது இறைவனின் நாமத்தை உச்சரிப்பதைவிட இலகுவான ஆத்மீக சாதனை வேறெதுவுமே இல்லை. இறை நாமத்தை மீண்டும் மீண்டும் உரக்க உச்சரிக்கும் போது அன்பெனும் இன்பப்பெருக்கு நமது உள்ளத்தில் ஊற்றெடுப்பதை உணர்வோம். ஏனெனில் தெய்வீக நாமத்தின் ஒலியானது இதயத்தை விழித்தெழச் செய்து இறைவன்பால் பேரன்பினை தோற்றுவிக்கின்றது. வாயினால் இறைவனின் நாமத்தை சொல்வதை விட, மனதால் நினைப்பது பெரிதும் சக்திவாய்ந்ததாகக் கருதப்பட்டாலும் இறைவனின் நாமத்தை உரக்க உச்சரிப்பதனால் ஏற்படும் ஆனந்த அனுபவம் வேறு எதனுடனும் ஒப்பிட முடியாததொன்றாகும். நாம சங்கீர்த்தனத்தில் பக்தனின் இதயம் தீவிரமாக ஆழ்ந்திருக்கும் போது, அந்த நாமமே "பிரமம்" என்பதை அவன் உணர்கிறான்.

இறைவன் உருவமாகவும் அருவமாகவும் இருக்கிறான். இவை இரண்டினையும் நாமம் உள்ளடக்குகின்றது. எங்கும் நிறைந்த, அநாதியாகி, மாறுபாடில்லாது அமைதியும் நிலையான தன்மையுமுடையவனே அருவ இறைவன். நாம, ரூப அசைவு கொண்ட உயிர்கள், பொருட்கள் அத்தனையும் இறைவனின் உருவத்திருமேனி. இறைநாமம் அவனது அருவம், உருவம் அதற்கும் அப்பாலும் எல்லைகடந்த யாவற்றையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான உண்மைப் பொருளை குறிப்பதாகும். எனவே, இறைநாமம் அநாதியானதும், படைப்புகளுக்கு காரணமானதும் ஆகும்.

இறைநாமம் சகல பந்தங்களில் இருந்தும் மனிதனை விடுவிக்கவல்லது. அதியுயர்ந்த பூரணமான ஆத்மீக நிலைக்கு அழைத்துச் செல்லும் ஆற்றல் கொண்டது; அறியாமை என்னும் இருளை அகற்றி, உலகம் யாவற்றையும் தெய்வீகமாகக் காணும் அதி உன்னத காட்சியை அருளவல்லது; அதியுயர்ந்த ஞான நிலைக்கு ஒருவனை உயர்த்தவல்லது.

இறைநாமத்தின் சக்தி தோல்வியைக் காணாத ஒன்றாகும். அடக்க முடியாததெனக் கருதப்படும் மனதை அடக்கி, நெகிழவைத்து இறைவனின் சாந்தமான ஆதிக்கத்தின் கீழ் இட்டுச் செல்கிறது. நாமத்தின் சக்தியினால் மனமே கடவுளாக மாற்றம் பெற்று விடுகிறது. நாமத்திடம் சரணடைந்தவன் அற்புதங்களை நிகழ்த்தும் வல்லமை பெறுகின்றான். இயமன்கூட அவனை அணுக அச்சம் கொள்வான். இயற்கையின் சக்திகள் மேலாதிக்கம் செலுத்தி, மனித இதயங்களில் ஆத்மீக விழிப்புணர்வை ஏற்படுத்த அவற்றைப் பயன்படுத்துவான். எல்லையற்ற அன்பும் ஆனந்தமும் உருவெடுத்தது போன்ற தோற்றத்தை நாமம் ஒருவன்பால் ஏற்படுத்த முடியும். இறைநாமம் ஒருவனது அறியாமையை அகற்றி, அவனின் தெய்வீகத் தன்மையை வெளிக்கொணர்ந்து, அவனை இறைவனாகவே மாற்றிவிடுகிறது.

எங்கு இறைநாமம் சொல்லப்படுகிறதோ அங்கு தூய்மை, அமைதி, ஆனந்தம் நிறைந்து அன்பெனும் ஊற்று பெருக்கெடுக்கும்.

இறைநாமமே பூரணத்துவமானது. அதை உச்சரிப்பதே தியானமாகும். இந்த நிலையில் கிடைக்கும் பேரானந்தமே சமாதியாகும். நாமமே ஆற்றல், ஆனந்தம், ஞானஒளி எல்லாமாகவும் மிளிர்கிறது. ஒருவன் வேறு சாதனைகள் இன்றி இறைநாமத்தை இடைவிடாது உச்சரிப்பதனால் மட்டுமே இறைமயமான காட்சியை எங்கும் காணும் பேற்றையடைந்து, முடிவில்லா அன்புமயமான பேரானந்தக் கடலில் மூழ்கித் திளைக்க முடியுமென்பதை எனது சொந்த அனுபவத்தின் மூலம் உறுதிப்படுத்த முடியும்.

உதயன்

## நியாயமான நடவடிக்கை

பல தசாப்த காலமாக நாட்டை உலுப்பிவரும் இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் - பேச்சுகள் மூலம் - சமாதானத் தீர்வுகாணும் முயற்சிகள் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன.

தமிழர்கள் தரப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசுத் தரப்பில் அரசுக் குழுவினரும் இதற்கான பேச்சுகளில் ஈடுபட்டிருக்கின்றனர்.

தீர்வுக்கான மார்க்கத்தைப் பேச்சுவழியில் கண்டு பிடிக்கும் பொறுப்பு இந்த இருதரப்பினரிடமும் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

அதன் அர்த்தம், தீர்வை முடிவு செய்வதும், அங்கீகரிப்பதும் இந்த இரண்டு தரப்பினர் மட்டுமே என்பதல்ல. இந்த இருதரப்பினரும் தத்தமது மக்களின் பிரதிநிதிகளாக இப்பிரச்சினையைக் கையாள்கின்றார்கள் அவ்வளவே.

இவர்கள் கூடிப் பேசி இணக்கம் கண்டு அறிவிக்கும் தீர்வைப் பரிசீலித்து அதை ஏற்பதும் அங்கீகரிப்பதும் இந்த நாட்டு மக்களின் பொறுப்பு. அப்படி செய்யப்பட்டால்தான் அது நிலைத்து, நீடித்து, நிரந்தரத் தீர்வாக நின்று பிடிக்கும்.

இந்தச் சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றும் இருதரப்பினருமே இதனைத் தெட்டத்தெளிவாக எடுத்துக்கூறியுமுள்ளனர்.

"எமது மக்களினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய - அவர்களின் அபிலாஷைகளை நிறைவுசெய்யக்கூடிய - அமைதித் தீர்வுத் திட்டம் ஒன்று முன்வைக்கப்படுமானால் அதைப் பரிசீலிக்கத் தயாராக இருக்கின்றோம்" - என்றே பல வருடங்களாக விடுதலைப் புலிகளின் தலைமை கூறிவந்தது. அந்த அடிப்படையில்தான் இப்போது யுத்தத்தை நிறுத்திவிட்டு தீர்வுக்கான அமைதி முயற்சிகளில் புலிகள் இயக்கம் முழுமூச்சாக ஈடுபட்டிருக்கின்றது.

அதேபோல, தற்போதைய சமாதான முயற்சிகளின்மூலம் எட்டப்படும் இறுதித்தீர்வு வரைவு நாடாளுமன்றத்திலும், சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின்மூலம் மக்கள் முன்னிலையிலும் வைக்கப்படும் என்றும், நாடாளுமன்றம் மற்றும் மக்கள் ஆகிய இருதரப்பின் அனுமதியுடனேயே அது நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்றும் அரசுத் தரப்பும் அடித்துக் கூறிவருகின்றது.

ஆக, இப்போது சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கும் இருதரப்பினரும் எத்தகைய தீர்வு வடிவத்தைக் கண்டுபிடித்து முடிவுசெய்தாலும், அது தமிழர்களாலும் ஏனைய அனைத்து மக்களாலும் ஏற்று அங்கீகரிக்கப்படுவது அவசியம் என்பது தெளிவு.

ஆகவே, தீர்வு யோசனை குறித்து அரசும், புலிகளும் பேச்சுக்கள் நடத்தினாலும் அவை பற்றி அலசி ஆராய்ந்து அறிந்துகொள்ளும் கடப்பாடும், அவற்றின் நன்மை - தீமை குறித்து விவாதித்து முடிவுசெய்யும் பொறுப்பும் உரிமையும் இந்த நாட்டு மக்களுக்கு உள்ளன.

தமது அடுத்த சந்ததிக்காவது நிலையான சமாதானத்தை அவர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமானால், தமது தோளின்மீது சுமத்தப்பட்ட இந்தப் பொறுப்பை அவர்கள் வெறும் இனக்குரோத முறையில் அணுகாமல், பொறுப்போடு ஏற்று தீர்க்க தரிசனத்தோடு முடிவுகளை எடுக்கவேண்டியவர்களாகின்றனர்.

வெறுமனே தத்தமது பக்கத்தில் உள்ள இனவாதிகளின் இனத்துவேஷக் கருத்துக்களை மட்டும் உள்வாங்கிக்கொண்டு இறுதிமுடிவு ஒன்றுக்கு அவர்கள வருவார்களேயானால், சபிக்கப்பட்ட நிலையிலிருந்து இந்த நாட்டுக்கு மீட்சியே இல்லாமல் போய் விடும்.

எனவே, ஒரு தரப்பு மக்கள் மற்றைய தரப்பின் கருத்துக்களைச் செவிமடுக்கவும், உள்வாங்கவும், தீர்மானிக்கவும் வசதி வாய்ப்புச் செய்து கொடுக்கப்படுவது அவசியமாகின்றது; கட்டாயமாகின்றது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் 'புலிகளின் குரல்' வானொலி சேவைக்கு சட்டரீதியாக அனுமதி வழங்கியதையும், அவர்கள் புதிய உபகரணங்கள் பெறுவதற்கு இடமளித்ததையும் இந்த வகையில்தான் நியாயப்படுத்துகின்றார் அரசின் பேச்சாளர் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ். அவரது கூற்று முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டியது.

புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கப்பட்டு விட்டது. அரசுடன் சரியாசனத்தில் அமர்ந்திருந்து அவர்கள் பேச்சு நடத்துகின்றார்கள். எனவே, அவர்களது வானொலிச் சேவைக்கு சட்டரீதியான அங்கீகாரம் அளிப்பதில் தவறேதுமில்லை.

அவர்கள் பக்கக்கருத்தை - நியாயத்தை - மறுதரப்பில் உள்ள பெரும்பான்மைச் சிங்களவர்களும் அறிந்து உள்வாங்கிக் கொண்டால்தானே தீர்வு யோசனைகள் குறித்து திட்டவட்டமான முடிவுக்கு அவர்கள் வரமுடியும்!

# இயல்பு வாழ்க்கை உடனடியாகத் தேவை இல்லையேல் சமாதானம் பாதிப்படையும்

## உலக வங்கி உப தலைவரிடம் தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி,ஜன.18

வடக்கு-கிழக்கு மக்களின் இயல்பு நிலைக்குத் தேவையான நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்பட வேண்டும். இல்லாவிட்டால் சமாதான முயற்சிகளில் பாதிப்பு ஏற்படும்; அவை முடக்கநிலைக்குச் செல்லும்.

- இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

உலகவங்கி உப-தலைவருடன் நேற்றுமுன்தினம் பிற்பகல் நடந்த சந்திப்பிலேயே அவர் இப்படிக் கூறினார்.

கிளிநொச்சியில் உள்ள நடுவப் பணியகத்தில் நடந்த இந்தச் சந்திப்பு ஒரு மணி நேரம் இடம்பெற்றது.

தமிழ்ச்செல்வனுடன் ஜோய் மகேஸ்வரனும் புலிகளின் தரப்பில் கலந்துகொண்டார்.

உலக வங்கி உப-தலைவருடன் உலக வங்கியின் பிரதிநிதி பீற்றர் கரோல்ட், உலக வங்கி ஆலோசகர் நரேஷ் துரைச்சாமி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வடக்கு-கிழக்கில் உடனடி மனிதாபிமானப் பணிகளை ஆரம்பிக்க உலக வங்கி வழங்கவிருக்கும் பங்கு குறித்து அவர் தமிழ்ச்செல்வனிடம் எடுத்துக்கூறினார்.

தமிழ்ச்செல்வன் உலகவங்கிக் குழுவிடம் தெரிவித்திருப்பதாவது:-

சமாதான முயற்சிகள் வெற்றிகரமாக நகரவேண்டுமானால் வடக்கு-கிழக்கில் இயல்புநிலை ஏற்படவேண்டும்.

கடந்த 20, 25 வருடங்களாக தொடர்ந்த யுத்தத்தினால் சிதைந்துபோயுள்ள அடிப்படை கட்டுமாணங்கள் மீளமைக்கப்பட வேண்டும். அதன்மூலம் மக்களின் அவசர மனிதாபிமானப் பணிகள் முன்னெடுக்கப்படுவது அவசியம்.

உடன் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக மேற்கொள்ளப்படாவிட்டால் சமாதான முயற்சிகளில் பாதிப்பு ஏற்படும்; அவை முடக்கநிலைக்கும் செல்லும்.

இராணுவ நெருக்குவாரங்கள் நீங்கி மக்களின் மனிதாபிமானப் பணிகளுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும். இதுவே எதிர்காலப் பேச்சுக்களில் முதன்மை இடத்தைப்பெறும். அதன் பின்பே தீர்வுக்கான விடயங்களை ஆராயலாம் - என்றார்.

இதேவேளை - இலங்கைக்கான உதவி நிதியத்தை உலக வங்கி கையாளும் என்றும் -

அது தொடர்பாக சில திட்ட வரைவுகளை உலகை வங்கி தயாரித்துள்ளது என்றும் -

அவை விரைவில் இலங்கை அரசுக்கும் தமக்கும் சமர்ப்பிக்கப்படும் என்றும் -

பின்னர் அது பற்றி முடிவுசெய்து உடன்பாடுகள் கைச்சாத்திடப்படும் என்றும் - தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். (ம-3-8)

# இந்தியாவில் இருந்து அகதிகள் திரும்புவதை தாமதப்படுத்த விடுதலைப் புலிகள் கோரவில்லை

## அமைச்சர் பீரிஸ் கூறுகின்றார்

கொழும்பு,ஜன.18

அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை தீரும்வரை புலம்பெயர்ந்த மக்கள் இந்தியாவில் இருந்து தாயகம் திரும்புவதைத் தாமதப்படுத்தவேண்டும் என்று விடுதலைப் புலிகள் இயக்கம் கூறியிருப்பதாக வெளியான பத்திரிகைச் செய்தியை அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் நிராகரித்தார். அப்படியான நிலைப்பாடு எதையும் அரசுக்கு புலிகள் இயக்கம் அறிவிக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

இந்தச் செய்தி தொடர்பாகப் பேராசிரியர் பீரிஸிடம் பத்திரிகையாளர் சந்திப்பின்போது கேள்வி எழுப்பப்பட்டது. அப்போது அவர் கூறியதாவது:-

அரசும் புலிகள் இயக்கமும் பல விடயங்களில் முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டிருப்பது உண்மைதான்.

ஒரே மாதிரியான கருத்துக்களை இருதரப்பும் கொண்டிருந்தால் நாம் பேச்சு நடத்தவேண்டிய தேவையே இருந்திருக்காது.



மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பாக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அதற்காக எடுத்த எடுப்பில் மக்களைக் குடியமர்த்திவிடமுடியாது. அதற்கான சரியான சூழ்நிலையையும் நாம் ஏற்படுத்தவேண்டும். அல்லது அம்மக்கள் திரும்பிப்போய்விடும் நிலையே ஏற்படும் ,என்று பேராசிரியர் பீரிஸ் கூறினார்.

'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகை புலிகள் இயக்கத்தை விமர்சித்திருப்பது குறித்து அவரிடம் கேட்கப்பட்டது.

நடைபெற்று முடிந்த பேச்சுக்களின்போது இது குறித்து ஏற்கனவே விரிவாகப் பேசப்பட்டது. அடுத்தசுற்றுப் பேச்சுக்களிலும் இது குறித்துக் கவனம் செலுத்தப்பட்டு, பதிலளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அமைச்சர் பீரிஸ். (ம)

# அவசரப் பணிக்கான நிதியை வழங்க உலக வங்கி ஆயத்தமாகி வருகிறது

## அதன் உபதலைவர் தெரிவிப்பு



கிளிநொச்சி,ஜன.18

வடக்கு - கிழக்குப் பிரதேசத்தை மீளக்கட்டியெழுப்புவதற்காக உருவாக்கப்பட்டிருக்கும் நிதியத்திற்கான நிதியைக் கையாளும் பொறுப்பு கடந்தவாரம் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதியம்மூலம் அவசர பணிகளுக்கான நிதியை வழங்குவதற்கு உலக வங்கி ஆயத்தமாகி வருகின்றது.

உலக வங்கியின் உப - தலைவர் மக்கோ நிசிமிசு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சியில் வைத்து நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:-

"வடக்கு - கிழக்கைப் புனரமைக்க பல்வேறு நாடுகள் உதவ முன்வந்துள்ளன. ஆனால், உலகவங்கி இதற்கு நிதி வழங்கவில்லை. பல்வேறு நாடுகளும் வழங்கும் நிதியைக் கொணடு உருவாக்கப்படும் நிதியத்தைக்கையாளும் பொறுப்பை ஏற்குமாறு விடுதலைப் புலிகளின் தலைமையும் இலங்கை அரசும் கூட்டாக எங்களைக் கேட்டுக்கொண்டன.

"கடந்தவாரம் இக்கோரிக்கை எமக்குக் கிடைத்தது. பெரும் அதிர்ச்சி அடைந்தோம். பிறந்தநாள் பரிசுபோல் அதை ஏற்றுள்ளோம். நிதியைக் கையாளும் பணிகளை ஆரம்பித்து விட்டோம்.

எமது அலுவலக அதிகாரிகள் 24 மணிநேரமும் இந்தப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். ஞாயிற்றுக்கிழமையில் மட்டுமே அவர்கள் தமது குடும்பத்தவர்களைச் சந்திக்கின்றனர். அந்த அளவுக்கு அக்கறையுடனும், ஆர்வத்துடனும் அவர்கள் செயற்படுகிறார்கள். எவ்வளவு விரைவாக இந்தப் பணிகளை ஆரம்பிக்கமுடியுமோ அவ்வளவு விரைவாக ஆரம்பிக்க விரும்புகிறோம்.

"கடந்த மே மாதம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது ஏ-9 வீதி ஊடாக வன்னிக்கு வந்தேன். அப்போது எரிந்த மேற்பகுதியில்லாத தென்னை மரங்களையும் உடைந்த கட்டடங்களையும் கண்டேன். இன்று அந்தப் பகுதியூடாக வரும்போது திருத்தப்பட்ட வீடுகளையும் கடைகளையும் கண்டேன்.

கஷ்டமான சூழ்நிலையில் மக்கள் தமது வாழ்க்கையைச் சீராக்க முனைப்புடன் செயற்படுவதையிட்டுச் சந்தோஷம் அடைகின்றேன். இதற்காக மக்களுக்கு நன்றி கூறவிரும்புகின்றேன் - என்றார் அவர்.

(ம-3-8)

### நாளை

தை 05
ஞாயிற்றுக்கிழமை
(19.01.2003)
திதி : பிரதமை
பிற்பகல் 4.15 வரை.
நட்சத்திரம்: பூசம்
பிற்பகல் 4.44 வரை.
தைப்பூசம்
சுபநேரம் : 9.35 - 11.05
ராகுகாலம் : 5.05 - 6.35
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

இரவை இரவாகவும் பகலைப் பகலாகவும் செய்; நீ மகிழ்ச்சியுடன் வாழ்வாய்!

# கச்சாய் இந்து மயானத்தை பாவிக்க படையினர் தடை

## பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிப்பு

கொடிகாமம்,ஜன.18

கச்சாய் இந்து மயானம் கடந்த 7 வருடங்களாக மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்படாது படையினரால் தடைசெய்யப்பட்டுள்ளது.

கச்சாய் கடற்கரையோரமாக அமைந்துள்ள இந்த மயானத்தை மீசாலை, அல்லாரை, வெள்ளாம்போக்கட்டி, கச்சாய், பாலாவி, கெற்பேலி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் கடந்த பல வருடங்களாகப் பயன்படுத்திவந்தனர்.

தென்மராட்சி பகுதி படையினரின் கட்டுப்பாட்டில் வந்த காலம் தொடக்கம் கச்சாய் மயானம் பொதுமக்கள் பாவனைக்குத் தடைவிதிக்கப்பட்டது தெரிந்ததே.

இதேவேளை - கச்சாய் மயானம் பாவனைக்கு அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்து தென்மராட்சியின் பல்வேறு பகுதி மக்களும் கடந்த 7 வருடகாலமாக அல்லாரை கொப்புலோ மயானத்தையே பயன்படுத்தி வருகின்றனர்.

மேற்படி அல்லாரை கொப்புலோ மயானம் குடிமனைகள் சூழ்ந்த பகுதியில் அமைந்துள்ளது. இதனால் முன்னர் இது சடலங்களை அடக்கஞ்செய்யும் (இடுகாடு) இடமாகவே பயன்படுத்தப்பட்டு வந்தது.

சடலங்களை எரிக்கும் மயானமாக இது பயன்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மயானத்தைச் சூழவுள்ள மக்கள் பெரும் அசௌகரியங்களைச் சந்தித்து வருவதாகவும் -

பிணங்களை எரிக்கும்போது ஏற்படும் பிண வாடை காரணமாக அப்பகுதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடு உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் - கூறப்படுகிறது. (எ-74)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

SONY 21" T.V.கள் விற்பனைக்கு உண்டு. மொடல்கள் 2100 - 18,000/-, 2184 - 19,000/-, G21Q1 - 22,000/, R21 (இரட்டை ஸ்பீக்கர்) 23,000/-, 2020 - 11,000/-. தொடர்பு: R.S. மகேஸ்வரன், கே.கே.எஸ். வீதி, (R.D.S. சிறுவர் பூங்கா முன்பாக), மல்லாகம். (13050)

நிறை கூடிய புறொயிலர், கல்பேட் மொத்தமாகவும் சில்லறையாகவும் மற்றும் கிறேட்டக் 1வயது நிரம்பிய பெண் நாயும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 21/61, இராமநாதன் வீதி, கலட்டி (மிலேனியம் றெஸ்ரோறன்ற் முன்பாக). (13366)

நிறைகூடிய புறொயிலர் கல்பேட்ஸ் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் றோட், முடமாவடி (முடமாவடிச் சந்திக்கும் பூங்கனிச்சோலைக்கும் இடையில்). (13240)

## வீடு விற்பனைக்கு

ஐரோப்பிய மொடலில் கட்டப்பட்ட இரண்டு பல்கனிகளுடனும், கடையுடனும் கூடிய சகல வசதிகளும் உடைய புதிய மாடி வீடு விற்பனைக்கு உண்டு. வீட்டுத் தளபாடங்களும் விற்கப்படும். தொடர்பு: "ஆனந்தபவன்", மயிலு ஒழுங்கை, ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை (வெளிநாடுகளில் வசித்தவர்களுக்கு ஏற்றது). (13308)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

காவலுக்குரிய அழகான ஒரு சோடி Great Dane - Dobermann Pincher நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (13349)

## கோழிமுட்டை விற்பனை

தரமான சிவப்புக் கோழி முட்டைகள் சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (13297)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 23.01.2003 வியாழக்கிழமை மாலை விநியோகிக்கப்படும். 19.01.2003 இற்கு முன் பதிவுசெய்யவும். இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (13110)

## இறைச்சிக்கோழி

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். (13350)

அநேக பெற்றோரின் வேண்டுகோளில்
**Physics Centre**
**56, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**
Physics Classes.
ஆரம்பம்: 19.01.2003 6.00 a.m.
A/L 2003 அலகு ரீதியான துரித மீட்டல் (வாரநாளில்)
A/L 2004 Heat
A/L 2005 Mechanics
By: P.Vijayakumaran B.Sc.(Spl.)
நேரங்கள் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
பிரத்தியேக வகுப்புகள் பொருத்தமான நேரங்களில்.
(13369)

## வேலையாள்கள் தேவை

கோழிகள் பராமரிக்க வேலையாள்கள் தேவை. பண்ணையில் தங்கியிருக்கவேண்டும். ஊக்கமாய் வேலை செய்பவருக்கு சாப்பாடும், நல்ல சம்பளமும் தரப்படும். உடன் நேரில்வரவும்.
தொடர்பு:
K.தனபாலசிங்கம்,
நல்லூர் வீடியோ சென்ரர்,
19. முருகேசர் ஒழுங்கை,
முத்திரைச்சந்தையடி, நல்லூர். (13348)

## தவறிவிட்டது

இல.13, அரசடி ஒழுங்கை, தட்டாதெரு, வண்ணார்பண்ணையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை விஜயலட்சுமி என்பவருடைய தே.அ.அ. (இல.638121565V), வி.அ.அ.(இல. 0902022316) மற்றும் பெண்கள் கட்டும் மணிக்கூடு என்பன 12.01.2003 அன்று நாச்சிமார் கோயிலடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (13345)

## கோழித் தடுப்பு மருந்து

Raniket Gampara தடுப்பு மருந்துகள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணிக்கு வழங்கப்படும். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (13353)

## மணப்பெண்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர் 1969 B.Sc. மாஸ்ரர், 1967 றெயினிங் மாஸ்ரர், 1963 பட்டதாரிகள், 1970 டொக்டர். இவர்களுக்கு அழகிய மணப்பெண்கள் தேவை. தொடர்பு: கிருஷ்ணா திருமணசேவை, செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (13347)

## திறப்பு விழா

சண்டிலிப்பாய்,ஜன.18

யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனைக்கென நிர்மாணிக்கப்பட்ட மாடிக் கட்டடத்தின் திறப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் உமா சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள இத்திறப்பு விழாவில் சுகாதார, போஷாக்கு நலன்புரி அமைச்சின் செயலாளர் டாக்டர் ரெஜி பெரைரா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பணிமனைக் கட்டடத்தைத் திறந்துவைப்பார். (எ-117-135)

## காலாவதியான பொருள்கள் சாவகச்சேரியில் அழிப்பு

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் கடந்த செவ்வாயன்று சுகாதார திணைக்கள பொது சுகாதாரப் பரிசோதகர்களால் திடீர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டன.

அதேவேளை, மேற்படி பரிசோதனையின் போது கண்டு பிடிக்கப்பட்ட காலாவதியான உணவுப் பொருள்கள் அழிக்கப்பட்டன.

சாவகச்சேரி நகர பொது சுகாதாரப் பரிசோதகர் க.கர்ணன் தலைமையில் இந்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

சுகாதாரத்திற்கு பங்கமான நிலையில் காணப்பட்ட சிற்றுண்டி நிலையங்களின் உரிமையாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டனர். (எ-117)

# கண்ணீர் அஞ்சலி

எனது அன்புத் தங்கை

**திருமதி சுந்தரலிங்கம் பத்மாவதி**

**அவர்கள் பாசத்தின் இருப்பிடமாகவும், குடும்பவிளக்காகவும் வாழ்ந்து, 13.01.2003 திங்கட்கிழமை வவுனியாவில் இயற்கை எய்தினார்.**

**அன்னாரின் பிரிவால் துயரக்கடலில் மூழ்கி இருக்கும் அவரது கணவருக்கும் பிள்ளைகளுக்கும் எனது ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றேன். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக.**

*18, கதிரவேலு ஒழுங்கை, அரியாலை.* (13346)

**நோயாளியான அக்கா சரஸ்வதிப்பிள்ளையும் குடும்பத்தினரும்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் சீனியர் பாலசிங்கம்

**திதி: 18.01.2003**

**ஐயா! எமை விட்டுப் பிரிந்து**
**31 நாள்கள் ஆகிவிட்டதே.**
**நீங்கள் பேசிச் சிரிக்கும் முகம்**
**எம்மை விட்டு, என்றென்றும் செல்லாது.**

*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

**எமது இல்லத் தலைவரின் வீட்டுக்கிரியை நிகழ்வுகள் இன்று (18.01.2003) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். மேற்படி நிகழ்வுகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமவண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**

*நெட்டிலிப்பாய் லேன், குமரகோட்டம், கோண்டாவில்.* (13359)

**- குடும்பத்தினர்.**

# பிற்போடப்பட்டுள்ளது

"நியூ வீணா கானம்" இசைமன்றம் வேம்படி மகளிர் கல்லூரியில் 18ஆம், 19ஆம் திகதிகளில் நடத்த இருந்த **"இசைச் சங்கமம்"** நிகழ்வுகள் யாவும் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளன.

16/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்நகர். (13354)

நிர்வாகக் குழு, **நியூ வீணா கானம்.**


உ

## இணுவில் சிதம்பரேஸ்வர சிவநாச்சி அம்பாள் தேவஸ்தானம் மேற்படி ஆலய எழுந்தருளி மண்டப கும்பாபிஷேக விழா

மங்களகரமான சித்திரபானு வருடம் தை 5ஆம்நாள் (19.01.2003) ஞாயிற்றுக்கிழமை தைப்பூச நன்னாளில் அதிகாலை 6.00 மணி தொடக்கம் 9.00 மணிவரை நடைபெற அம்பாள் திருவருள் பாலித்திருப்பதால், அடியார்கள் அனைவரும் நிகழ்ச்சியில் கலந்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
**வைத்தியர்,**
**செல்லப்பா வைத்தியசாலை,**
**இணுவில் கந்தசுவாமி கோயிலடி.**

**தொண்டர் கொக்கையம்பதியார் நாடு செழிக்க அம்பாள் திருவருளை வேண்டுகிறார்.**



வாசித்துக் காணொணாதது; பூசித்துக் கூடொணாதது; வாய்விட்டுப் பேசொணாதது; நெஞ்சினாலே நெக்கி, நெக்கி உருக வைப்பது. எமது அம்பாள் பெருமையை எம் போன்றவர்களால் எழுத்தில் வடிக்க முடியுமா? சொல்லில் செப்ப முடியுமா?

முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகனைப் பெற்ற தாய். தமிழின் சுவையை அனுபவிப்பதற்காக நாத்திகசனைக்கூட மானசீக குருவாக ஏற்கப் பண்ணி அண்டமெல்லாம் புகழ் பூத்த தாய். என் நெஞ்சில் நிறைந்த தாய். கவிச்சக்கரவர்த்தி கம்பனின் நாவில் மாத்திரமல்ல; அபிராமிப்பட்டர் நாவில் மாத்திரமல்ல; தன்னை நினைந்துருகும் எல்லோரின் நாவிலும் நின்று நிலைக்கும் அம்பாளின் கருணையை வாழ்த்த ஆயிரம் வாய்களை அடியேனுக்குத் தந்தாலும் வாழ்த்தி முடியாது.

எத்தனையோ உயிராபத்துக்களிலிருந்து நொய்வுற்ற அடியேனின் உடலைத் தேறச் செய்து, தனது தாள் பணிவதற்காகவும் தன் மூத்த புதல்வனாம் விக்கினேஸ்வரப் பெருமானையும் நொச்சியம்பதி முருகப் பெருமானையும் தினந்தோறும் பணியும் பெருவாழ்வினைத் தந்த தாய். தலை சாயுங்காலத்தில் அடியேனுக்குச் சமயோசித புத்தியையும், துணிவையும், பணிவையும் தந்தருளும் தாய். உடல் தளரும் நேரத்திலும் அடியேனுக்கு உற்சாகத்தைத் தந்து கொண்டிருக்கும் தாய். சுருகச் சொன்னால் இந்தச் சிதம்பரேஸ்வர சிவநாச்சி அம்பாள் தமியேனைத் தனது தாள் பணியும் தொண்டனாக மாத்திரமல்ல, கலைஞர்கள், அறிஞர்கள் எல்லோரையும் தெய்வமாக வணங்கும் பெருமனம் தந்து, என்னை வழிநடத்திக் கொண்டிருக்கும் தாய். பல்லாயிரக் கணக்கான தொண்டர்களையெல்லாம் தன்னுடன் இணைய வைத்த இணு வையம்பதியில் கோயில் கொண்டெழுந் தருளிய தாய். ஈழமணித் திருநாட்டின் சரித்திரத்தில் முதன்முதல் பிரதமராகப் பதவியேற்ற பிரதமர் டி.எஸ்.சேனநாயக்காவை அவரின் அமைச்சரவையில் பொறுப்பு வாய்ந்த மந்திரியாக இருந்த ஜீ.ஜீ.பொன்னம்பலம் சகிதம் யோகர்சுவாமிகளின் திருவாக்கின்படி தன்னிடம் வரும்படியான சந்தர்ப்பம் வழங்கிய தாய். பல்லாயிரக்கணக்கான அடியவர்களுக்கு வாழ்வும் வளமும் அருளி, நோய் பிணி நீக்கி, அவர்கள்மூலம் தனக்குப் பெருந்தொண்டுகள் செய்ய வழிகாட்டியருளுகின்ற தாயை உண்மைத் தொண்டர்கள் வந்து தம்மாலியன்ற தொண்டுகள் செய்து எங்கும் சைவ மணங்கமழ எல்லோரும் உய்யும் பொருட்டு அம்பாளைப் பிரார்த்திப்போமாக.

தொண்டன்
கொக்கையம்பதியார்.

(13357)

# மரண அறிவித்தல்

## கந்தையா துரைராஜா *(இளைப்பாறிய சமைக்காய்வாளர்)*

கொக்குவில், பிரம்படி ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா துரைராஜா 16.01.2003 வியாழக்கிழமை மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆச்சிப்பிள்ளை - கந்தையா தம்பதிகளின் மகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அருளையா - அருளம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சீவரெட்டினம், ஞானபூரணம், லீலாவதி, நாகேஸ்வரி, நாகபூஷணி, நாகநாதன் ஆகியோரின் சகோதரரும் தியாகராசா (அப்பையா), பாக்கியம் ஆகியோரின் மைத்துனரும் சிவபதி, ஜீவேந்திரன், வருணகுலசிங்கம், பாலேந்திரன், சாந்தினி, புஸ்பாகரன், கீதாஞ்சலி, பிரேமினி, விஜயகரன் ஆகியோரின் பேரனும் பக்தவற்சலன், ரதகேசரம், காலஞ்சென்ற சகுணாவதி மற்றும் சரஸ்வதி, லோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் குகப்பிரியா (யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி - ஆசிரியை) அவர்களின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2003) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*72/9, பிரம்படி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.*

தகவல்:
திருமதி புவனேஸ்வரி துரைராஜா (மனைவி). (13351)




ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம நொச்சியம்பதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் துணை

# முதலாவது ஆண்டு நிறைவு விழா

இன்று (18.01.2003) சனிக்கிழமை

## ஸ்ரீ லக்சுமி ஜுவல்லறி



தனது சேவையில் ஒருவருட நிறைவை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவிப்பதில் பெருமிதம் கொள்கின்றது!
சிறந்த சிங்கப்பூர் நகைகளைத் தெரிவுசெய்து பெற்றுக்கொள்வதற்கு நாடவேண்டிய ஒரே இடம்:
ஸ்ரீ லக்சுமி ஜுவல்லறி
**Sri Luxumi Jewelary**
0777 038772

220A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
☆ நவீன நகை உலகின் அரங்கம் ஸ்ரீ லக்சுமி ஜுவல்லறி
N.ரமேஸ் - உரிமையாளர்.
(C/26115)

# அதிகார ஆசையின் அடிப்படையில் உருவாகும் அரசியல் கூட்டணி!

**ஐ.தே.முன்னணி அரசை முறியடிக்க பொ.ஐ.முன்னணியும் ஜே.வி.பியும் கூட்டுச்சேர்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கூட்டுச்சேர்ந்தாலும் கொள்கை அடிப்படையில் அவற்றால் நிலைத்திருக்க முடியுமா? என்பது குறித்து ஆராய்கிறார் கட்டுரையாளர் சுனந்த தேசப்பிரியா. 'ஞாயிறு லங்கா தீப' பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

ஜே.வி.பிக்கும் ஸ்ரீ.ல.சு கட்சிக்கும் இடையே அரசியல் இணைப்பை ஏற்படுத்தும் நோக்கில் மங்கள சமரவீர - அநுரா பண்டாரநாயக்க தரப்பினர் கடந்த சில காலமாக மேற்கொண்டு வந்த முயற்சிகள் தற்போது பலனளிக்க ஆரம்பித்துள்ளன. இவ்விரு கட்சிகளுக்கிடையேயான அரசியல் இணைப்பு பற்றிய கருத்துக்களை தெரிவிக்கும் ஊடகங்கள் இப்போது புதிய அரசொன்றை அமைப்பது தொடர்பான எதிர்பார்ப்பை கொண்டுள்ளன.

ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் ஜே.வி.பி. அரசியல் இணக்கமொன்றை ஏற்படுத்திக் கொள்ளத் தயாராயிருப்பதான கருததை தனது களுத்துறை விஜயத்தின் போது சோமவன்ச அமரசிங்க முதற்தடவையாக பகிரங்கமாகத் தெரிவித்தார். 1970ஆம் ஆண்டில் கூட்டு முன்னணியின் கொள்கைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஸ்ரீ.ல.சு. கட்சி உடன்படுமானால் தாமும் அவர்களுடன் இணைந்து போராடத் தயாராயிருப்பதாக அவர் அப்போது தெரிவித்திருந்தார். 1963 ஆம் ஆண்டில் ஸ்ரீ.ல.சு. கட்சியுடன் கூட்டுச்சேர்ந்திருந்த இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக்கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் சமதர்மக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டே 1970ஆம் ஆண்டில் கூட்டு முன்னணியின் கொள்கைத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

ஸ்ரீ.ல.சு. கட்சியின் அன்றைய கொள்கைக்கும் இன்றைய கொள்

**மாந்நார் தோட்டத்திலிருந்து...**

கைக்குமிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்படுகிறது. 1970இல் ஸ்ரீ.ல.சு. கட்சி, முதலாளித்துவத்தில் நம்பிக்கை கொண்ட ஜனநாயக போர்வையில் இயங்கும் கட்சியாக விளங்கியது. இன்று அம்முதலாளித்துவ உலக மயமாக்கலையும் திறந்த பொருளாதார கொள்கையையும் ஏற்றுக்கொண்டு முதலாளித்துவ போர்வையில் இயங்கும் கட்சியாகும்.

அதுபோன்றே ஜே.வி.பியின் அன்றைய கொள்கைக்கும் இன்றைய கொள்கைக்குமிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்படுகிறது. அதாவது, இன்றைய ஜே.வி.பி. மீண்டும் ஆயுதப்போராட்டங்களில் ஈடுபடுவதில்லையென உடன்பட்டு நாடாளுமன்ற ஜனநாயக வழி ஊடாக சமதர்மத்தை வழங்கும் நோக்கில் செயற்படுகிறது. அது கூட்டுப்பொருளாதார முறைமையைத் தன் அபிலாசையாகக் கொண்டுள்ளது.

ஆயினும், 2000ஆம் ஆண்டில் பொதுத் தேர்தலின்போது ஜே.வி.பி. தெரிவித்த 5ஆண்டு அபிவிருத்தித் திட்டத்தை அவதானிக்கும் எவருக்கும் ஜே.வி.பியினர் தாம் முன்னிலைப்படுத்திய லெனினிச பொதுவுடைமைக்கொள்கையில் நின்றும் தம்மை மாற்றிக் கொள்ளவில்லை என்பதை உணர்ந்து கொள்ள இயலும். அன்றிலிருந்து இன்றுவரை பொதுவாக ஜே.வி.பியினரிடம் காணப்பட்ட வலுவான கருத்து, அமெரிக்க ஏகாதிபத்தியம் பற்றிய கருத்தாகும். அது குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் அதன் அடிவருடிகளான சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றுக்கும் எதிரான கருத்தாகும். ஸ்ரீ.ல.சு. கட்சியின் கொள்கையோ இதற்கு முற்றிலும் வேறுபட்டதாகும்.

அன்றுபோலன்றி இன்று ஜே.வி.பியினுள் சிங்கள இனவாத போக்கு வளர்ச்சியடைந்து வருகிறது. அவர்கள் இன்று சிங்கள மக்களை மையமாகக் கொண்டே அரசியல் நடவடிக்கைகளில் தம்மை ஒட்டுமொத்தமாக இணைத்துக் கொண்டுள்ளனர். அவர்களது அரசியல் நடவடிக்கைகள் இன்று மக்களின் அபிமானத்துக்குள்ளாகின்றன.

ஜே.வி.பி.இன்றைய சமாதான முயற்சிகளை ஏகாதிபத்தியவாதிகளால் வைக்கப்பட்ட பொறியென எண்ணுகிறது. அது போன்றே சமாதான முயற்சிகளை தடுத்து நிறுத்துவோம் என பொதுமக்களுக்கு உறுதியளித்து வருகிறது. அதிகாரப் பகிர்வு நாட்டைத் துண்டாடுவதாக அமையும் எனக் கருதும் ஜே.வி.பி, 1987ஆம் ஆண்டில் மாகாண சபைத் திட்டத்தைத் தாம் எதிர்த்ததை நியாயப்படுத்தும் வகையில் கருத்துத் தெரிவித்து வருகிறது. சமஷ்டி ஆட்சி முறை ஒரு கொலைக்களம் போன்றதெனக்கூறி எதிர்க்கும் ஜே.வி.பி, 2000ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் பொ.ஐ.முன்னணி அரசால் முன்வைக்கப்பட்ட அரசமைப்பு நகலை அது சமஷ்டிக்கான மரணப்பொறி எனத்தெரிவித்தது.

பொ.ஐ.முன்னணியால் அவ்வாறு கொண்டுவரப்பட்ட அரசமைப்பு நகலில் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் தனியான அலகு கோரிக்கை பற்றி உடன்பாடு தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், ஜே.வி.பி. முஸ்லிம்களின் இக் கோரிக்கையை முற்று முழுதாக எதிர்த்தது. ஜே.வி.பியின் தலைமையில் உருவாக்கப்படவிருந்த அரசியல் கூட்டணியிலிருந்து பேரியல் அஷ்ரப்பின் தலைமையிலான நுவா குழு விலக நேர்ந்ததும் இக்காரணத்தினாலாகும்.

ஒருவரோடு ஒருவர் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டபோதும், சகல முஸ்லிம் பிரிவுகளும் இன்று சமாதான முயற்சிகளுக்கும், ஐ.தே. முன்னணி அரசுக்கும் ஆதரவளித்து வருகின்றன. ஜே.வி.பியை உள்ளடக்கிய அமைப்பொன்றில் பங்கேற்றுக் கொள்வதற்கு எந்தவொரு முஸ்லிம் தரப்பும் விரும்பாத அளவுக்கு கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் தனி அலகு கோரிக்கை தொடர்பான ஜே.வி.பியின் நிலைப்பாடு அமைந்துள்ளது.

முஸ்லிம் அரசியல் குழுக்களை இவ்வகையான அமைப்பில் சேர்த்



துக்கொள்ள வேண்டுமாயின் ஜே.வி.பி. கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் தனி அலகு கோரிக்கை தொடர்பான தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்யமுடியாத அளவுக்கு ஜே.வி.பி. தனது நிலைப்பாட்டை உருவாக்கியுள்ளது.

ஸ்ரீ.ல.சு. கட்சி - ஜே.வி.பி. ஆகிய கட்சிகளின் தலைமையில் உருவாக்கப்படும் தகுதிகாண் அரசு எதிர்கொள்ளவுள்ள சிரமமான பிரச்சினைகளுக்கு இது ஓர் உதாரணமாகும். சமாதான முயற்சிகளைத் தோல்வியுறச் செய்வதற்காகத் தான் எவருடனும் இணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளத் தயாராய் இருப்பதாக ஜே.வி.பி. கூறிவந்தது மட்டுமல்லாமல் தற்போதும் அவ்வாறே கூறி வருகின்றது. கடந்த காலம் முழுவதும் ஜே.வி.பியின் முக்கிய அரசியல் எதிர்பார்ப்பாக அமைந்த விடயம் இச்சமாதான நடவடிக்கையைத் தோல்வியடையச் செய்தலாகும்.

ரோகண விஜேவீரவின் அரசியல் மூலோபாயங்களுடன் பரிச்சயம் பெற்றதன் காரணமாக இன்று ஜே.வி.பி. சமாதான முயற்சிகளுக்கு கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதாவது ஸ்ரீ.ல.சு.கட்சியின் அரசியல் நடவடிக்கைகளைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் நோக்கத்தில் ஜே.வி.பி. பயணிக்கிறது. தனது பிரதான எதிரியான ஐ.தே.கட்சியைத் தோற்கடிப்பதற்கு அதன் பிரதான எதிர்க்கட்சியாக இப்போது விளங்கும் ஸ்ரீ.ல.சு.கட்சியை முதலில் தம் வசப்படுத்தி தோற்கடிக்கும் தந்திரோபாய மூலம் எதிரணியின் தலைமைத்துவத்தைத் தாம் கைப்பற்றத் திட்டமிட்டுள்ளது.

1988ஆம் ஆண்டு முதல் 1990 வரையான காலப்பகுதியில் ஜே.வி. பியினரால் இவ்விதமான அணுகுமுறையே கைக்கொள்ளப்பட்டது. அதன்படி முதலில் ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் இணக்கப்பாடொன்றைக் காண்பதுடன், தகுந்த தருணம் வரும்போது அவர்களைத் தாக்க ஆரம்பித்துள்ளது. தமது தலைமைத்துவத்துக்கு சவாலாக விளங்கும் எந்த அரசியல் தலைவராயினும், அவரைக் கொலை செய்து விடுவதற்கு ஜே.வி.பிமுன் வந்தமை இத்தந்திரோபாய அடிப்படையிலாகும். அதன்படி எதிரணித் தலைவர்களை ஒழித்துவிட்டு தாமே முக்கிய எதிர்க்கட்சியாவதே அவர்களது நோக்கமாகும்.

சந்திரிகா குமாரதுங்கவை கொலை செய்வதற்கான சரியான சந்தர்ப்பத்தை தீர்மானிக்க ஜே.வி.பியால் இயலாமற் போனமையே ஸ்ரீ.ல.சு.கட்சி தொடர்பான அவர்களது எதிர்ப்பார்ப்புகள் தவறாகிப் போனமைக்கான பிரதான காரணமாகும். ஜே.வி.பி அவ்விதம் சந்திரிகாவைக் கொலை செய்வதற்கு முடிவு செய்திருந்தால், அவர்களால் அதனை இலேசாக நிறைவேற்றியிருக்க முடியும். இதற்கு உதாரணமாக குருநாகல் பிரதேச ஸ்ரீ.ல.சு.கட்சி அரசியல் பிரமுகரான ஜேமிஸ் அதுகல கொலை செய்யப்பட்ட சமயம், கிராமப் புறமொன்றில் இடம்பெற்ற அவரது மரணச் சடங்கில் கலந்துகொள்வதற்காக சந்திரிகா தனியாகத் தமது பிக்கப் வாகனத்தைத் தாமே ஓட்டி வந்த சந்தர்ப்பத்தைக் குறிப்பிடலாம்.

ஸ்ரீ.ல.சு.கட்சிக்கோ அல்லது சந்திரிகா குமாரதுங்கவுக்கோ தற்போதைய சமாதான நடவடிக்கைகளைக் குழப்பி, மீண்டும் யுத்தத்தின் மூலம் தீர்வு காண்பது பற்றிச் சிந்திக்க வாய்ப்பு இல்லை. அவ்வாறான ஒரு நிலையால் ஏற்படும் இழப்புக்களையும், சோதனைகளையும் எதிர்கொள்ள ஸ்ரீ.ல.சு.கட்சியால் மட்டுமல்ல, வேறு எக்கட்சியினாலும் முடியாது. அதேபோல உலகமயமாக்குதலால் சிதறுண்ட அரசியல் மற்றும் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு ஸ்ரீ.ல.சு.கட்சியின் வர்க்க அரசியல் எவ்வகையிலும் இடமளிக்காது.

ஆனால், மற்றொரு புறம் ஜே.வி.பி., ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தமை முக்கியமாக இச்சமாதான நடவடிக்கைகளை எவ்விதத்திலும் நிறுத்திவிடும் நோக்கத்திலாகும். சமாதான நடவடிக்கைகளை முறிவடையச் செய்வதும், சமஷ்டி அரசமைப்பு உருவாகுவதைத் தடுப்பதுமே அவர்களது பிரதான அரசியல் குறிக்கோளாய் அமைந்திருக்கிறது.

அதேபோன்று அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கான எதிர்ப்பும், பொருளாதார மேம்பாட்டுக்கான வேலைத் திட்டங்களும் அவர்களது குறிக்கோள்களில் அடங்கியுள்ளன. இவ்விருவகைக் குறிக்கோள்களும் இல்லையாயின் ஜே.வி.பிக்கு என அடையாளம் எதுவும் எஞ்சியிருக்காது. ஆனால், சுயாட்சி முறையின் கீழான சமாதான நடவடிக்கைகள் என்ற விதத்திலேயே தற்போதைய சமாதானப் பேச்சுக்கள் மேற் கொள்ளப்படவேண்டும் என்பதில் பொ.ஐ. முன்னணி அக்கறை காட்டி வருகின்றது.



முதலில் தகுதிகாண் அரசு உருவாககப்பட்ட போது முற்றாக ஒரு வருடத்திற்கு தற்காலிக அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டது. ஆனால், தற்போது அவ்வாறான தகுதிகாண் நிலைக்கு இடமில்லை. விரிவான அரசியல் வேலைத் திட்டங்களின் அடிப்படையில், அரசியல் கூட்டு உருவாக்கப்படுவதே இன்று மேற்கொள்ளக் கூடியதாகும். அது அதிகாரத்தை அடையமுயலும் முயற்சியாக அமைந்தபோதிலும், நாட்டில் தோன்றியுள்ள சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு முயற்சியாய் அமைதல்வேண்டும். இவ்விரு கட்சிகளிடையே காணப்படும் பொதுவான ஒற்றுமை ஐ.தே.முன்னணி அரசைப் பதவியினின்றும் அகற்றி, தாம் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கம் கொண்டிருத்தலாகும்.

இவ்வாறான பொதுவானதொரு நோக்கத்தின் மூலம், இவ்விரு கட்சிகளும் இணைந்தாலும் மற்றைய அரசியல் பிரச்சினைகள் குறித்து ஆராயாமல் இருக்க முடியாது. முதலாவது தகுதிகாண் அரசு காலத்தை விட இரண்டாவது தகுதிகாண் அரசு காலத்தில் பலத்த எதிர்ப்பை நேர்கொள்ள நேரிடும் என இப்போதிருந்தே கணிக்க முடிகிறது. அவ்வாறான எதிர்ப்பைச் சமாளிக்க முடியாத அளவுக்கு அடிப்படையில் வேறுபாடுகள் உருவாகியுள்ளன. இவற்றைப் போக்கிக்கொள்ள வேண்டுமாகில், இவற்றில் ஒரு தரப்பினர் மற்றத் தரப்பை வெற்றி கொண்டாகவேண்டும். சர்வதேச அரசியலைப் போன்றே தேசிய அளவிலும் இன்றைய அரசியல் நிலைமையின்படி ஸ்ரீ.ல.சு.கட்சி பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் பிரிவுக்கே வெற்றிக்கான வாய்ப்பு உண்டு. ஆனால் ஜே.வி.பி., தம் நோக்கத்தில் வெற்றி பெறுவதான மனநிலையில் உள்ளது. அந்த எதிர்பார்ப்பை இப்போதும் வளர்த்துக் கொள்ளும் நிலையில் இயங்கி வருகின்றது. ஆனால் ஸ்ரீ.ல.சு. கட்சிக்கு இவை இரண்டுமே இல்லை.

இந்த நிலைமையில் உருவாகும் அரசியல் நிலைமைகளைக் கண்காணிக்கவும் அவை குறித்து விமர்சனங்களை மேற்கொள்ளவும் நல்லதொரு வாய்ப்பு உருவாகியுள்ளது.

**தமிழில்: வியெஸ்ரீ**

யாழ்.குடாநாட்டில் மக்கள்

# மீளக் குடியமர விரும்பும் இடங்களில் மிதிவெடிகளை அகற்ற முன்னுரிமை

## தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜன.18

குடாநாட்டில் மக்கள் மீளக்குடியமர விரும்பும் இடங்களில் புதையுண்டுள்ள கண்ணிவெடிகள் - மிதிவெடிகளை அகற்றுவதற்கு நாம் முன்னுரிமை அளித்துச் செயற்படவுள்ளோம்.

இதற்கு வசதியாக மீள் குடியமர்வோர் அவை தொடர்பான விவரங்களை விரைவில் எமக்குத் தந்துதவ வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணிப்பாளர் கே.பி.றெஜி.

கிளிநொச்சியில் உள்ள 'சிரான்' அலுவலகத்தில் கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற இலங்கைத் தமிழ் அகதிகளை இந்தியாவில் இருந்து அழைத்து வருவது தொடர்பான கலந்துரையாடலின் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் உரை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்ந்துவருகின்ற எமது மக்களிடம் இருந்து நிதியைப் பெற்றே இங்குள்ள மக்களுக்குத் நாம் சேவையாற்றி வருகின்றோம். எமது அமைப்பு இங்கு செயற்படுவதற்கு கடந்த அரசு அனுமதி வழங்கவில்லை.

ஆனால், தற்போதைய அரசு தாராளமாக அனுமதியை வழங்கியுள்ளது. இதன்மூலம் புதிதாக அலுவலகங்களைத் திறந்து நாம் மக்களுக்குச் சேவையாற்றி வருகின்றோம்.

கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபடுவோருக்கு வழங்குவதற்கு எம்மிடம் நிதி இல்லை. எனினும், மக்களிடம் இருந்தே அவர்களுக்கான நிதியையும் பெற்று வருகின்றோம். எதிர்காலத்தில் மக்களும் இப்பணியில் நேரடிப் பங்களிப்பினை வழங்குவார்கள் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

தற்பொழுது எமது அமைப்பினால் கண்ணிவெடி அகற்றப்பட்ட இடங்களில் மக்கள் மீளக்குடியமர்நது வருகின்றனர் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-10)

# சர்வதேச பௌத்த அமைப்பு வேண்டும் என்கிறார் பிரதமர்



கொழும்பு,ஜன.18

உலக சமுதாயம் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகளையும் தீர்க்கக்கூடிய சர்வதேச பௌத்த அமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை, பௌத்த மதத்தின் கருத்துக்களை அதன் யாப்பில் வலியுறுத்தியுள்ளது. மியன்மார், தாய்லாந்து ஆகிய நாடுகளும் இதனையே பின்பற்றி வருகின்றன. கம்போடியா, ஜப்பான், இந்தியா, வியட்நாம், லாகோஸ், சீனா ஆகிய நாடுகளும் உருவாக்கப்படவுள்ள சர்வதேச பௌத்த அமைப்பின் பின்னணியில் செயற்படவேண்டும் என்று பிரதமர் கேட்டுள்ளார்.

கொழும்பில் நேற்றுக்காலை சர்வதேச பௌத்த மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார். அப்போது பௌத்த மதத்தைப் போன்றே ஏனைய மதங்களும் மதிக்கப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

(ம-10)

# PX சிறந்த பூஸ்டர் நியாய விலையில்




- எந்தவொரு பலவீன சமிக்ஞைப் பகுதியிலும் பெறக்கூடியதாயுள்ள 35 உயர் பூஸ்டர் தொழிற்பாடு.
- மிகு நேர்த்தி நுட்பம் வாய்ந்த தாழ்வான ஓசை
- உங்கள் வீட்டின் உட்புறத்துடன் பொருந்தும் நீருட்புகா டியூலக்ஸ் உறை.

**TV சென்டர் (Pvt. Ltd.)**
4, கெய்ஸர் வீதி, கொழும்பு 11, தொ.பேசி: 434742
தொலைநகல் : 437687 மின் அஞ்சல்: tvcentre@eureka.lk

PX அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தாய்வான் தொழிற்சாலையால் உற்பத்தி செய்யப்பட்டது.


# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 10 - 05 - 1930
உதிர்வு 28 - 01 - 2002

அமரர்

## தம்பிஜயா நாகம்மா (பராசசிங்கம்)

திதி: தைபௌர்ணமி (18.01.2003)

ஆண்டு ஒன்று ஆயிற்றோ அந்தோ உமைப் பிரிந்து
மாண்டுநீர் போனதால் மனை செயலிழந்து போனதே
நூாண்டா மணி விளக்காய் துலங்கிய உமை நினைத்து
இங்கு தவிக்கின்றோம் நின் முகம் காணாது!

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்கள்.

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.* (13208)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

## குமாரசாமி சிவகுமாரன்

மலர்வு 26:11.1969 உதிர்வு 18.12.2002

18.12.2002 அன்று கொழும்பில் அமரத்துவம் எய்திய குமாரசாமி சிவகுமாரன் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (18.01..2003) சனிக்கிழமை நல்லூரில் நடைபெறும். அன்னாரின் மறைந்த செய்தி அறிந்து நேரில்வந்து உதவியவர்களுக்கும், தொலைபேசி, கடிதம்மூலம் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

V.T.குமாரசாமி குடும்பத்தினர்,
V.T.இரத்தினசாமி குடும்பத்தினர்,
திருமதி பா.இராஜேஸ்வரி குடும்பத்தினர் (கொழும்பு),
V.T.கந்தசாமி குடும்பத்தினர் (கனடா).

*230, டிக்கறிங்ஸ் றோட்,*
*கொழும்பு -13.* (13230)

## உயிரிழந்த இடத்தில் இறுதிச் சடங்கு

அநுராதபுரம், எப்பாவலைப் பாடசாலை ஒன்றில் கடந்த புதன் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் கொல்லப்பட்ட 5 பாடசாலை மாணவர்கள் உட்பட ஆறுபேரின் இறுதிச்சடங்குகளை பாடசாலை வளவிலேயே நடத்துவதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது.

குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற பாடசாலை பல வருடங்களாக மூடப்பட்ட நிலையிலுள்ளது. எனினும், அப்பகுதி மாணவர்கள் இந்த பாடசாலையில் மாலை நேரத்தில் விளையாடி வருகின்றனர். இவ்விதம் விளையாடிக் கொண்டிருக்கும்போது மாணவர்கள் குண்டு ஒன்றை எடுத்து பரீட்சித்தபோதே அக்குண்டு வெடித்ததாக அறிவிக்கப்படுகிறது. (ஐ-10)

முருகன் துணை

**இணுவில் கந்தசுவாமி கோயில்**

# தைப்பூசம் - மஞ்சத் திருவிழா

காலம் : நாளை (2003.01.19) ஞாயிற்றுக்கிழமை
பகல் ஆறுமுகப்பெருமானுக்கு 1008 சங்காபிஷேகமும் விசேட பூசைகளும் நடைபெறும்.
சண்முகர் அர்ச்சனையும் இடம்பெறும்.

மாலை : 4.00 மணிக்கு விசேட பூசைகளும் தீப அலங்காரமும் இடம்பெற்று, 5.00 மணிக்கு ஆறுமுகப்பெருமான் வள்ளி, தெய்வானை சமேதரராக வீதியுலா வருவார்.
அடியார்கள் அனைவரும் வருகைதந்து முருகப்பெருமானின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

இணுவில். (13293) -திருவிழா உபயகாரர்கள்.

உ

# புதுமனைப் புகுவிழா அழைப்பு

அன்புடையீர்,

சித்திரபானு வருடம் தை மாதம் 4ஆம் திகதி இன்று (18.01.2003) சனிக்கிழமை (பழைய நேரம்) பகல் 11.05முதல் 12.00மணிவரை வரும் புனர்பூச நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

## லக்ஷ்மி மஹால்

எமம் புதுமனையில் ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் திருவருளை முன்னிட்டு புக இருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.43/1, பூநாறி லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (13295)

*லக்ஷ்மி நாராயணா,*
*கன்னாதிட்டிச் சந்தி,*
*யாழ்ப்பாணம்.*

தங்கள் நல்வரவை நாடும்:
திரு. திருமதி செ.விக்னேஸ்வரன் - திலகவதி குடும்பத்தினர்.

# Jaffna College Institute of Technology Vaddukoddai


## நவீன முறையில் உலோக வார்ப்புப் பயிற்சிநெறி
## Certificate course in Foundry Practice

ஒரு வருட காலத்தில் சுயதொழிலாக ஈடுபட விரும்பும் அல்லது வெளிநாடுகளில் தொழில் வாய்ப்பைத் தேடிக்கொள்ள விரும்பும் G.C.E.O/L வரை படித்த மாணவர்களுக்கு ஏற்ற நவீனமுறையில் கற்கும் பயிற்சிநெறி.

நவீன இயந்திரங்கள்




**Muller**




**Aerator**

உற்பத்தி செய்யும் பொருள்கள்:

01. நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள்
Pump Casing, Impeller, Distance Piece, End Shield, Cooling Fan, Fan Cover.



02. சமையல் பாத்திரங்கள் (தாச்சி, தோசைக்கல் போன்றவை).



பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவம் எமது நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம். பயிற்சிநெறிகள் 22.01.2003 புதன்கிழமை ஆரம்பிக்கப்படும்.

செய்முறையில் விசேட சித்தி பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு வடபகுதியில் ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.

*Director,*
*Jaffna College Institute of Technology,*
*Vaddukoddai.*

(C/26107)

# நாகர்கோயில் அம்மனுக்கு படையினர் படைக்கும் 'கிரிபத்'

**நாகர்கோயில் கண்ணகையம்மன் ஆலய பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளரும் நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபையின் உப தலைவரும், மோட்டார் திணைக்கள யாழ்.பிராந்திய அதிகாரியுமான வ.பத்மநாதன் தலைமையிலான குழுவினர் பாதுகாப்பு வலயப் பகுதியில் உள்ள மேற்படி ஆலயங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டுத் திரும்பினர். அப்பயணம் குறித்து இங்கு விவரிக்கிறார் வ.பத்மநாதன்.**

நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபைத் தலைவரும், பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளருமாகிய முருகர் சிதம்பரப்பிள்ளை, செயலாளர் என்.நேசரத்தினம், பொருளாளர் சிவராசா, நிர்வாக சபை உறுப்பினர்கள் எஸ்.ஜேசுநேசன், ஜி.அம்பலவாணேசன், எஸ்.அரியரத்தினம், எம்.உதயகுமார், எம்.சிவானந்தம் ஆகிய ஒன்பது பேர் நாகர்கோயில் நாகதம்பிரான் ஆலயம், நாகர்கோயில் கண்ணகை அம்மன் ஆலயம் ஆகியவற்றை பார்வையிடுவதற்கும், சேதவிவரத்தை மதிப்பீடு செய்வதற்கும் சென்றிருந்தோம்.

இதற்கான அனுமதியை பலாலி படைத்தரப்பினரிடம் இருந்து இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் எமக்குப் பெற்றுக் கொடுத்திருந்தார். ஏறத்தாழ மூன்று வருடங்களின் பின் அப்பகுதிக்குச் சென்றுவர எமக்கு அனுமதி கிடைத்தது. இதன்படி கடந்த 10ஆம் திகதி காலை 9மணிமுதல் பிப.1மணி வரை அப்பகுதியில் நின்றுவர எமக்கு அனுமதி கிடைத்திருந்தது. குடத்தனை சோதனைச் சாவடியில் ஏற்பட்ட தடங்கல்கள் காரணமாக நண்பகல் 12 மணியளவில் படையினரின் இரண்டு வாகனங்களில் நாம் அழைத்துச் செல்லப்பட்டோம்.

அம்பனில் இருந்து நாகர் கோயில சந்திவரையான வீதி குண்டும் குழியுமாக பாவனைக்குதவாது பழுதடைந்திருந்தது. பெரும்பாலான பனை, தென்னை மரங்கள் தறிக்கப்பட்டும் வட்டுகள் அற்ற நிலையிலும் சேதமடைந்திருப்பதை அவதானிக்க முடிந்தது. நாகர்கோயில் ஆரம்பிக்கும் இடத்தில் இருந்த நான்கு, ஐந்து வீடுகள் தவிர நாகதம்பிரான் கோயில் வரையுள்ள அனைத்து வீடுகளும் முற்றாக அழிந்துள்ளன. நாகதம்பிரான் கோயிலின் முன்புறத்தில் இருந்த ஆலயப் பிரதம குருவின் வீடு பல நோ.கூ.சங்க கிளைக் கட்டடம், பேக்கறி, நெசவு நிலையம், கலாசார மண்டபம், மடங்கள், உபதபாற் கந்தோர், நாகர்கோயில் அ.மி.த.க.பாடசாலை, வீடுகள் என்பன முற்றாக அழிந்து போயுள்ளதை அவதானிக்க முடிந்தது. நாகர்கோயில் வடபகுதிக்கும், நாகர் கோயில் வீதிக்கு கிழக்குப் பக்கமும் செல்வதற்கு நாம் அனுமதிக்கப்படவில்லை.

நாகர்கோயில் பூர்வீக நாகதம்பிரான ஆலய மணிக்கோபுரம், கண்டாமணி, வசந்த மண்டபம், சுற்றுமதில்கள் என்பன முற்றாக சேதமடைந்துள்ளன. மூலஸ்தான தூபியும் ஆங்காங்கே சேதமடைந்துள்ளது. ஆலயத்தின் அனைத்துக் கதவுகளும் பூட்டப்பாது மூடப்பட்டிருந்தன. கதவினைத் திறந்து கொண்டு மூலஸ்தானம் வரை சென்றோம். மூலலிங்கம் அப்படியே இருந்தது. பரிவார மூர்த்திகளில் பெரும்பாலானவை மூலஸ்தான மண்டபத்திலேயே வைக்கப்பட்டிருந்தன. சிறிதளவு தளபாடங்கள் மூலஸ்தானத்திலும் அதனை அண்டிய மற்றைய மண்டபங்களிலும் காணப்பட்டன. களஞ்சிய அறைக்குப் பக்கத்தில் உள்ள மற்றொரு அறையில் முன்னர் இருந்த பெரிய மின்பிறப்பாக்கி காணாமற்போயிருந்தது. வாகனங்கள் பலவும் உள்ள போதும் அவையாவும் புனரமைப்புச் செய்யப்படவேண்டும். கட்டடங்கள், தளபாடங்கள் உட்பட சேதவிவரம் ஏறக்குறைய 40 லட்சத்துக்கு மேல் என நாம் மதிப்பிட்டுள்ளோம்.

பின்பு நாகர்கோயில் கண்ணகையம்மன் கோயிற் பகுதிக்குச் சென்றோம். அங்கு கோயில் சுற்றாடல் முழுவதையும் படையினர் மிகவும் சுத்தமாக வைத்துள்ளனர். அம்மனை பத்தினித் தெய்வம் (பத்தினி தெய்யோ) என பாற்சோறு (கிரிபத்) படைத்து வழிபட்டு வருவதாக அங்கு நின்ற படையினரில் சிலர் கூறினார்கள். இங்கும் கோயில் கதவுகள் பூட்டப்பாது மூடப்பட்டிருந்தன. கதவினைத் திறந்து கொண்டு மூலஸ்தானப் பகுதிக்குச் சென்றோம். மூலலிங்கம், அம்பாள், சிலம்பு என்பன அப்படியே இருக்கக் கண்டு வணங்கினோம். பரிவார மூர்த்திகள், எழுந்தருளி அம்மன விக்கிரகங்கள் யாவும் மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்தன. விநாயகர் விக்கிரகம் இருந்த இடத்தில் காணப்பட்டது. அங்கு படையினர் பூத்தட்டுக்கள் வைத்து வழிபட்டு வருவதை அவதானிக்க முடிந்தது. மூலஸ்தானப் பகுதியிலும் மற்றைய மண்டபத்திலும் ஆங்காங்கே சில தளபாடங்கள் காணப்படுகின்றன. களஞ்சிய அறை, மடப்பள்ளி என்பன முற்றாக சேதமடைந்துள்ளன. கட்டடம், தளபாடங்களுக்குரிய சேதவிவரம் 15 லட்சத்துக்கு மேலாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கோயில் உள்வீதி, கோயிலின் உட்பகுதி, மூலஸ்தானம் போன்ற இடங்களுக்குச் செல்வதற்கு எமக்குப் படையினர் எந்தவிதத் தடைகளையோ கட்டுப்பாடுகளையோ விதிக்கவில்லை. பூர்வீக நாகதம்பிரானின் வரலாற்றினையும், அங்குள்ள புனிதத்தன்மையையும் எம்மிடம் கேட்டு படையினர் அறிந்துகொண்டனர். அத்துடன், மேலும் இரண்டு மாத காலப்பகுதிக்குள் அப்பகுதிக்கு எமது மக்கள் வரமுடியும் எனவும், சமாதானம் நிலைக்கும் எனவும் அங்கு நின்ற படைத்தரப்பினர் கூறினர். சமாதானம் நிலைத்து நாடு முன்னேறும் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் இருப்பதை அறிய முடிகிறது. அன்றைய தினம் பிற்பகல் 3.30மணி வரை ஏறக்குறைய அப்பகுதியில் 3மணித்தியாலங்கள் வரை நின்றிருந்துவிட்டு திரும்பினோம்.

## பொது வேலைநிறுத்தத்துக்கு பொ.ஐ.முன்னணி தயாராகிறது

கொழும்பு,ஜன.18

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் பல தொழிற் சங்கங்களும் ஒன்றிணைந்து அடுத்த மாதத்தில் அடையாள பொது வேலைநிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றன. வாழ்க்கைச் செலவு உயர்வு, தனியார் மயமாக்கல், தொழிலாளர் உரிமைகள் பறிப்பு ஆகியவற்றுக்கு எதிராக மக்களின் எதிர்ப்பைக் காட்டவே இவ் வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பியுடன் தொடர்புடைய தொழிற்சங்கங்களையும் இவ்வேலை நிறுத்தத்தில் இணைத்துக்கொள்வது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ பேச்சு நடத்தி வருகிறார். (ம)

## சாய்ந்தமருது மாணவன் வெள்ளத்துக்குப் பலி!

காரைதீவு,ஜன.18

வெள்ளம் பார்க்கச் சென்ற 18 வயது மாணவன் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு மரணமானார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சாய்ந்தமருது - மாவடிப் பள்ளிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பரிதாபகரமாக உயிரிழந்த எஸ்.எம்.நளீம் என்ற இம்மாணவன் சாய்ந்தமருதைச் சேர்ந்தவர். கல்முனை சாஹிறாக் கல்லூரியில் உயர்தர வகுப்பில் படிப்பவர்.

வெள்ளத்தில் அவர் அள்ளுண்டு சுமார் 4 மணிநேரத்தின் பின்னரே சுழியோடிகளால் சடலம் மீட்கப்பட்டது. சம்மாந்துறைப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்ட பின் சடலம் உறவினரிடம் கையளிக்கப்பட்டது. (ம)

## சைவச்சிறுவர் இல்லம் மீண்டும் கைதடியில்!

யாழ்ப்பாணம், ஜன.18

யுத்த நிலைமைகளை அடுத்து இடம்பெயர்ந்து ஏழாலையில் இயங்கிய கைதடி சைவச்சிறுவர் இல்லம் நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் மீண்டும் கைதடியில் இயங்கவுள்ளது.

இதன் முன்னோடி நிகழ்வாக தற்போது ஏழாலையில் வைக்கப்பட்டிருக்கும் நடராஜப்பெருமானின் திருவுருவம், இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஏழாலையில் இருந்து ஊர்வலமாக கைதடிக்கு எடுத்துச்செல்லப்படும்.

மல்லாகம், சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன், உரும்பிராய், கோப்பாய் ஊடாக எடுத்துச்செல்லப்படும். மேற்படி நடராஜரது திருவுருவச் சிலை கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் - அதன் சொந்த இடத்தில் நிறுவப்படும்.

தொடர்ந்து நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு சைவச் சிறுவர் இல்லம் திறந்து வைக்கப்படும். (எ)

## பொலீஸ் பதவி உயர்வுகள்: சிபாரிசுகள் தூக்கி எறியப்படும்

கொழும்பு,ஜன.18

பொலீஸ் அதிகாரிகளுக்குப் பதவி உயர்வுகளைச் சிபாரிசு செய்து அரசியல்வாதிகள் அனுப்பும் கடிதங்களைக் கவனத்தில் கொள்ளாதிருக்க பொலீஸ் மா அதிபர் ஆனந்த ராஜா தீர்மானித்திருக்கிறார் என அறியப்படுகிறது.

இதேவேளை -

பொலீஸ் அதிகாரிகளுக்கு விசேட பதவியுயர்வுகளுக்கான சிபாரிசுகளை இனித் தெரிவிக்கவேண்டாமென பொலீஸ் மா அதிபர், பிரதேசங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபர்களிடமும் அறிவித்திருக்கிறார் எனவும் தெரிவிக்கிறது.

பொலீஸ் மா அதிபரின் இத்தீர்மானத்தையடுத்து, பொலீஸ் அதிகாரிகளின் பதவியுயர்வுகள் தொடர்பாகக் கிடைத்திருக்கும் நூற்றுக் கணக்கான சிபாரிசுக் கடிதங்கள் தூக்கி எறியப்படலாம் என பொலீஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

## அம்பாறையில் மீண்டும் வெள்ளம்; ஆயிரக்கணக்கான மக்கள் பாதிப்பு!

அம்பாறை,ஜன.18

அம்பாறை மாவட்டத்தில் மீண்டும் பெய்துவரும் அடைமழையினால் நான்காவது தடவையாக வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. இதனால், பல கிராமங்களையும் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதம் முதல் அவ்வப்போது அடைமழை பெய்து, இந்த மாவட்டத்தில் ஏற்கனவே மூன்று தடவைகள் வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது.

தற்பொழுது ஏற்பட்டுள்ள வெள்ளம் முன்னரைவிட மக்களை வெகுவாகப் பாதித்துள்ளது.

கடந்த மூன்று தினங்களாக அம்பாறை மாவட்டத்தில் பெய்யும் பெருமழையால் நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனை (தமிழ், முஸ்லிம்), அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோயில், சம்மாந்துறை, நாவிதன்வெளி, பொத்துவில், இறக்காமம் முதலான பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது.

மாவட்டத்தின் சில பிரதான வீதிகளுட்பட பல கிராமங்களின் உள்ளூர் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கல்முனைப் பிரதேச செயலாளர் பிரிவின் முஸ்லிம் பகுதியில் 709 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. எட்டு வீடுகள் முற்றாகச் சேதமடைந்திருக்கின்றன என்று பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.பளீல் தெரிவித்தார்.

கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகப் பிரிவில் 4 ஆயிரத்து 250 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் 11 வீடுகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. கிட்டங்கி தாம் போதியூடாக வெள்ளம் பாய்கிறது.

நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எம்.கோபாலரட்ணம், சவளக்கடையிலுள்ள பிரதேச செயலகத்திற்கு நேற்றுமுன்தினம் இத்தாம் போதியூடாகத் தோணிமூலமே சென்று கடமையாற்றினார். சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில் 4 ஆயிரத்து 300 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.முகம்மட் முஸ்தபா (மயோன்) சாய்ந்தமருது, மாளிகைக்காடு பகுதிகளில் வெள்ளப் பாதிப்புகளை நேரில் பார்வையிட்டார். சமூக சேவைகள் அமைச்சர் சமரவீரவுடன் தொடர்பு கொண்ட அவர், நிவாரண உதவிகளை வழங்குமாறும் கேட்டுக்கொண்டார். (ம)

### கல்வி மேம்பாட்டு பேரவைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.18

யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் பேரவைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பொதுச்சபை உறுப்பினர்களையும், உட்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பேரவைச் செயலாளர் பொ.கமலநாதன் கேட்டுள்ளார். (எ-5)

### வேதாகம கலாசாலை திறப்புவிழா

யாழ்ப்பாணம்,ஜன.18

சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியத்தின் வேதாகம குருகுல கலாசாலையை நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் திறந்து வைக்கவுள்ளார்.

யாழ்.பருத்தித்துறை வீதி, குருநாத சுவாமி கோயில் அருகே இக்கலாசாலை அமைந்துள்ளது. (ஒ)

### சிரமதானம்

சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலய பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் பிரதி நிதிகளும் பொதுமக்களும் இணைந்து இன்று காலை 8.30 மணிமுதல் பாடசாலை வளவில் சிரமதானப் பணியினை மேற்கொள்ளவுள்ளனர். (எ-117)

## எழுத்தாளர் பலர் உருவாகலாம்; எனினும் அவர்களின் சீரிய வாழ்வும், அதனூடான கருத்துமே சமூகத்தில் செல்வாக்கைப் பெற்றிருக்கும்

### சிறுகதை ஆய்வரங்கில் பேராசிரியர் சுப்பிரமணியன்

யாழ்ப்பாணம்,ஜன.17

எழுத்தாளர்கள் பலர் உருவாகலாம். எனினும் அவர்கள் சீரிய வாழ்க்கை வாழவேண்டும். அப்போதுதான் அவர்களது கருத்துக்கள் சமூகத்திலும் நீடித்த செல்வாக்கைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

-இவ்வாறு தெரிவித்தார் பேராசிரியர் நா.சுப்பிரமணியன்.

'தூண்டி' இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழகக் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளின் ஆய்வரங்கில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

நமது ஈழமண்ணில் போற்றத்தக்க பல எழுத்தாளர்கள் உருவாகியுள்ளனர். அதேவேளை தற்போதும் உருவாகிவருகின்றனர்.

எனினும் எழுத்தாளர்களின் ஆக்கங்கள் செல்வாக்குப் பெறுவதும், செயலிழந்து போவதும் தனித்தே அவர்களின் எழுத்தாற்றலால் மட்டுமல்ல அவர்களது வாழ்க்கையாலும் தான்.

எழுத்தாளன் சீரிய பண்புகொண்ட வாழ்க்கையைப் பின்பற்றுதல்வேண்டும். அப்போதுதான் அவனுடைய எழுத்துக்களும் செல்வாக்குப் பெறும்.

எழுத்தாளர்கள் மனிதர்களை மனிதர்களாக வாழ்த்துவதுண்டு. அதே நேரத்தில் தாமும் சீரான வாழ்க்கை முறையைப் பின்பற்றுதல் வேண்டும்.

அவ்வாறு எழுத்தாளன் சரியான நெறிமுறையில் வாழாதவிடத்து எழுத்து வேறு, வாழ்க்கை வேறென்றாகிவிடும். வாழ்க்கை தெளிவாகினால தான் இலக்கியமும் தெளிவாகும். உண்மையில் நல்ல மனிதனிடத்திலிருந்தே நல்ல ஆக்கபூர்வமான எழுத்துருவாக்கங்கள் தோன்றுகின்றன.

நல்ல சிறுகதைகள் எனப்படுபவை முன்வெளிவந்த சிறுகதைகளிலும் பார்க்க வேறுபட்ட கருப்பொருள், கருத்துநடை என்பனவற்றினைப் பொறுத்து அமையும். குறிப்பாகக் காலத்துக்குப் பொருந்தும் சிறுகதைகளே அதிகம் விரும்பத்தக்கதாகும்.

குறிப்பாக அந்தந்தக் காலத்திற்குரிய தகுந்த இடத்தில் நின்றுகொண்டு சிறுகதைகளினூடாக எழுத்தாளன் தனது கருத்துக்களைக் கொண்டு செல்லுதல்வேண்டும்.

1970களில் உருவான சிறுகதைகள் அதிகம், இரண்டு வேறுபாடுகளுக்குள் நகர்ந்துசென்றதனைக் காணலாம், ஒன்று எழுத்தாளனின் அனுபவப்பகிர்வு மற்றது எழுத்தாளனின் பட்டறிவு என்பதாகும்.

இன்று பல்வேறு விடயங்களின் அடிப்படையில் எழுத்தாளர்கள் தமது கருத்துக்களைக் கூறுவதற்கு முன் வந்துள்ளார்கள்.

ஓர் எழுத்தாளன் அரசியல் சார்புடையவனாகவோ அல்லது அரசியல் சார்பற்றவனாகவோ இருக்கலாம். உண்மையில் அவன் அநுபவத்தினூடாக சில விடயங்களை முன்வைக்கும்போது அவை சிறுகதைக்குரிய தகுதியைப் பெற்றுவிடுகின்றன.

சில எழுத்தாளர்களின் திறமையால் போராட்டத்தை வெறுப்போர் கூட அதன் தாற்பரியத்தை உணர்ந்து போராட்டத்துடன் தமது வாழ்க்கையை இணைத்துவிடுகின்றனர். அத்தகைய ஓர் ஆற்றல் அதாவது தன் கதையின் மூலம் கூறவந்த விடயத்தினை வெளிப்படுத்தும் திறனும், அக்கருத்துக்குள் மக்களை உள்வாங்கிக் கொள்ளும் திறனும் எழுத்தாளனுக்குத் தேவை - என்றார் அவர்.

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, சுந்தரம் (நந்தி) உட்பட எழுத்தாளர்கள், அறிவாளர்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் உரையாற்றினர். (எ-12-149)

## ஆன்மீக எழுச்சி விழா

சுவாமி விவேகானந்தரின் ஜயந்தியையொட்டிய ஆன்மீக எழுச்சி விழா இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் உபஅதிபர் க.சிவராமலிங்கம் தலைமையில், நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக கொழும்பு இராமகிருஷ்ணமிசன் தலைவர் தவத்திரு.சுவாமி ஆத்மகணானந்தா கலந்துகொள்ளவுள்ளார்.

ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளும், விசேட உரைகளை சுவாமி சித்ரூபானந்தா, இ.இராஜமகேந்திரம், சுவாமி ஆத்மகணானந்தா ஆகியோரும் நிகழ்த்துவர்.

கவியரங்கு, பட்டிமண்டபம் ஆகியன சிறப்பு நிகழ்வுகளாக இடம் பெறும். (எ-10)

# கைதடியில் இன்று மகா பூஜை

யாழ்ப்பாணம்,ஜன.18

ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் வருடாந்த மகாபூஜை இன்று சனிக்கிழமை காலை 6.00 மணிமுதல் கைதடி சச்சிதானந்தா ஆச்சிரமத்தில் இடம்பெறவுள்ளது.

ஸ்ரீ சச்சிதானந்தா ஆச்சிரமத்தின் தலைவர் இகுழந்தைவடிவேலு தலைமையில் நடைபெறும் இந்நிழ்வில் காமகோடி காயத்திரி பீடாதிபதி சுவாமி ஸ்ரீ ராஜ்குமார் ஆசியுரை வழங்குவார்.

தொடர்ந்து 'சுவாமிகளின் ஆச்சிரம பணிகள்' என்ற தலைப்பில் நா.திருச்செந்திநாதனும், 'சுவாமிகளின் பெருமை' என்ற தலைப்பில் வைத்திய கலாநிதி வ.சின்னப்புவும், 'ஆச்சிரம வளர்ச்சி' என்ற தலைப்பில் வைத்திய கலாநிதி கே.ரி.எஸ்.சபாநாதனும், 'இளைஞரும் துறவறமும்' என்ற தலைப்பில் சுவாமி ஸ்ரீ ராஜ்குமாரும் உரைநிகழ்த்துவர்.


இறுதியில் பாலர் பாடசாலை, அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை உபகரணம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (எ-5)

## உயர்புள்ளி பெற்றோருக்கு பீடாதிபதி அழைப்பு

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பித்து, விசேட ஏற்பாட்டில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் உயர்புள்ளியை உடையவர்களை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு வருகைதருமாறு பீடாதிபதி தி.கமலநாதன் கேட்டுள்ளார்.

உயர்புள்ளியை உடைய மாணவர்கள் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு தமது விண்ணப்பத்தை உறுதிசெய்வதுடன் பிரதம ஆணையாளரின் கையொப்பம் இடப்பட்ட கடிதத்துடன் சமுகமளிக்க வேண்டும் என்றும் - அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-ரி)

## சேவை நலன் பாராட்டு



எழுதுமட்டுவாழ், நாகர்கோவில் வீதியைச் சேர்ந்த

### சங்கரப்பிள்ளை தில்லைநாதன்

என்பவர் 17.11.1969இல் பஸ்நடத்துநராக நியமனம் பெற்று வ.பி.போ. சபை (பருத்தித்துறை) இதே சாலையில் முப்பத்திநான்கு வருடங்கள் சேவையாற்றி சேவை மூப்பினாலும் தொழிற்சங்க நடவடிக்கையாலும் தரம்VIIஇல் சாலைப்பரிசோதகராகப் பதவி உயர்வு பெற்று தமது அகவை அறுபதில் 18.01.2003இல் ஓய்வுபெறுகிறார்.

இவரது சேவையைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

*பருத்தித்துறை சாலை,*
*பருத்தித்துறை.* (13330)

வடபிராந்திய போக்குவரத்துச் சபை
ஊழியர்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 15 - 03 - 1935

இறப்பு 19 - 12 - 2002

அமரர்

### சின்னக்குட்டி வல்லிபுரம்

(ஓய்வுபெற்ற வைத்தியசாலை ஊழியர், சாவகச்சேரி)

*அன்பும் அறமும் கொண்டு - எம்மை*
*பாசமாய் வழிநடத்தி - தாங்கள்*
*பார்போற்ற வாழ்ந்தீர்கள் - நாங்கள்*
*பாங்குடனே பிரார்த்திக்கின்றோம் - அடைக*
*சாந்தி உங்கள் ஆத்மாவென்றே.*

இன்று (18.01.2003) சனிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மட்டுவில் கிழக்கு,*
*வங்களாவடி,*
*சாவகச்சேரி.* (13322)

- குடும்பத்தினர்.

## தையற்காரர் தேவை

ஆண்களுடைய ஆடைகள் தைககத் தெரிந்தவர்களும், பெண்களுடைய ஆடைகள் தைக்கத் தெரிந்தவர்களும், தையல் பயிலவிரும்புபவர்களும் தேவை.

*நேரில் வரவும்.*

No.89, கண்டி வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (13319)

## தேவை

யாழ்ப்பாண உணவுவகைகள் திறம்படச் சமைக்கக்கூடிய 40 வயதுக்கு மேற்பட்ட பெண் சமையலாள், மலசல கூடம் சுத்திகரிப்பவர், பூந்தோட்டம் பராமரிப்பவர் தேவை.

தொடர்பு: இல.40, கண்டி வீதி,
சுண்டுக்குளி
(இலங்கை செஞ்சிலுவைச் சங்க முன்னால்),
யாழ்ப்பாணம். (13187)

## கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை

*(பாதுகாப்பு அமைச்சில் அங்கீகாரம் பெற்றது)*

**வெற்றிடங்கள் - கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்**

1. கல்வித் தராதரம்:- க.பொ.த. (சா.த.) சித்தி.
   (இளைப்பாறிய பொலீஸ்/படை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
2. உயரம்:- 5'4"
   மார்பு:- 32"
   வயது:- 22 வயதுக்கு மேல்.
3. நல்ல தேகாரோக்கியமும், கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.
4. நேர்முகப் பரீட்சை:- இன்று (18.01.2003) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கீழ்க்குறிப்பிட்ட ஆவணங்களுடன் பிரசன்னமாயிருக்கவும்.
   I. கிராம அதிகாரியின் நற்சான்றிதழ் (06 மாதங்களுக்கு உட்பட்டது)
   II. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.
   III. கல்வித் தராதரம்.
   IV. தே.அ.அ., வி.அ.அ. (போட்டோ பிரதி)
5. கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் சலுகைகள்:-
   (E.P.F - E.T.F, Attendance Bonus + Allowance etc.)

*இல.43, கல்லூரி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C-26106) - பணிப்பாளர்.

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 03 - 03 - 1931

உதிர்வு 03 - 02 - 1996

### திருமதி அன்னலட்சுமி இராசையா

திதி:18.01.2003 சனிக்கிழமை
(தை பௌர்ணமி)

தன்பிள்ளை போல் ஊர்ப்பிள்ளைகளை வளர்த்தவரே!
உம் பிள்ளைகள் நாம் ஏங்குகிறோம் - உமை நினைத்து
ஆதரிக்க எத்தனையோ உறவிருந்த போதும்
அரவணைக்க அன்பான நட்பிருந்த போதும்
அன்பு காட்டி ஆறுதல் கூறத்தான் நீங்களில்லையே?
தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த
தெய்வத் திருமகளே! ஆண்டுகள் ஏழு சென்றாலும்
அழியாதம்மா என்றும் உம் நினைவு.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக இன்று (18.01.2003) சனிக்கிழமை காலை 10.30மணிக்கு வல்வெட்டி வேவில் வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெறும் விசேட பூசையிலும் அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00மணிக்கு ஆலயத்தில் நடைபெறும் அன்னதான நிகழ்ச்சியிலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மாத்திரா வளவு,*
*வல்வெட்டி,*
*வல்வெட்டித்துறை.*
*T.P: 021 - 2263302* (13294)

அன்புக்கணவர்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



ஓம் குருப்யோ நம

## உபநயன சுபமுகூர்த்த அழைப்பு

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் தை மாதம் 5 ஆம் நாள் நாளை (19-01-2003) ஞாயிற்றுக்கிழமை பூசநட்சத்திரமும் பிரதமைத் திதியும், சித்தயோகமும், மகர லக்கினமும் கூடிய காலை 6.00 மணி 30 நிமிடம் முதல் 8.00 மணி 09 நிமிடம் வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

அராலியூர்
*சிவஸ்ரீ ச.முத்துக்குமாரசாமிக்குருக்கள் -*
*சோமாவதி அம்மா தம்பதிகளின்*
பௌத்திரனும்

சுழிபுரம்
*சிவஸ்ரீ ந.பத்மநாபசர்மா -*
*விமலாதேவி தம்பதிகளின்*
தௌஹித்திரனும்

எமது சீமந்த புத்திரனுமாகிய

### சிரஞ்சீவி ஜனார்த்தன சர்மாவுக்கு

திருவருளும் குருவருளும் ஒன்றுசேர பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி தேவஸ்தான திருச்சந்நிதியில் யஞ்ஞோபவீத தாரண பிரம்ம உபதேசம் நிகழ்த்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதனால் அத்தருணம் எமது உற்றார், உறவினர் அனைவரையும் தங்கள் இஷ்டமித்திர் குடும்ப சஹிதமாக வருகைதந்து யஞ்ஞோபவீதனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

உபநயன பிரம்ம உபதேச குரு
பிரதிஷ்டா வித்வத் ஜோதி, வைதீகசாகரம் பிரதிஷ்டா ரத்தினம்
**த.இ.சுப்பிரமணியக்குருக்கள்** - சித்திவிநாயகர் தேவஸ்தானம், அரியாலை



மாலை 5 மணிக்கு இன்னிசைக் கச்சேரி
நிகழ்த்துபவர்
*இந்திய சங்கீத வித்வசபை மட்டுநகர் விபுலானந்த*
*இசை நடனக் கல்லூரி விரிவுரையாளர்*
**சோ.உமாரமணக்குருக்கள் - சுன்னாகம்**



இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:
மு.பாஸ்கர (ரவி)க் குருக்கள் - பத்மஜா தம்பதிகள்
விசவத்தனை முருகமூர்த்தி தேவஸ்தானம். பண்ணாகம்

(13323)

# புத்தாண்டில் உங்கள் பலன்கள்

## கடகம்

(புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயில்யம் முடிய)

மற்றவர்களின் மனமறிந்தும், குணமறிந்தும் பேசுவதில் வல்லவர்களாக விளங்கும் கடக ராசி வாசகர்களே!

நீங்கள் யாரையும் எளிதில் நம்ப மாட்டீர்கள். நம்பியவர்களை நாளும் கைவிட மாட்டீர்கள். எப்படிப்பட்ட பிரச்சினை வந்தாலும் அதற்காக எள்ளவும் கலங்கமாட்டீர்கள். ஆயுதங்கள் இல்லாமல் உங்கள் பேச்சையே ஆயுதமாக்கி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள்.

வைராக்கிய மனம் பெற்ற நீங்கள் முன்வைத்த காலை பின் வைக்க மாட்டீர்கள். பணபலம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் உங்களைச் சுற்றி ஒரு படைபலம் எப்பொழுதும் இருக்கும். பொது நலத்தில் ஈடுபாடு கொண்ட உங்களை மக்கள் போற்றிக் கொண்டாடுவர். வயது கூட, கூட உங்கள் வாழ்க்கை வளம் பெருகும். வாழ்வில் மிக வேகமாக முன்னேற வேண்டும் என்ற ஆவலில் மின்னல் வேகத்தில் செயற்படுவீர்கள். இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த குணங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த புத்தாண்டு, எண்ணங்களை எளிதில் ஈடேற்றி வைக்குமா? எடுத்த காரியத்தை முடிக்க உறுதுணை புரியுமா? என்றெல்லாம் நீங்கள் சிந்திக்கலாம். ஆண்டின் தொடக்கத்திலேயே ஏழரைச் சனி வலம் வருவதால் எப்படி இருக்குமோ? என்று நீங்கள் மனம் மயங்க வேண்டாம். சனி, வாழ்க்கையில் சந்தோஷத்தை தான் கொடுப்பார்.

### சனிப் பெயர்ச்சிக் காலம்.

இது வரை உங்கள் ராசிக்கு 11ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான் இனி 22.5.2003 அன்று விரயச்சனியாக வலம் வர தொடங்குகிறார். இதனால், எண்ணற்ற விரயம் வருமே என்று நீங்கள் இதயம் குமுற வேண்டாம். வரப்போகும் விரயத்தை சுப விரயம் ஆக்கிக்கொள்வது உங்களின் புத்திசாலித்தனம் அல்லவா!

எனவே வீடு கட்டும் பணி இருந்தால் தொடருங்கள். விழிப்புணர்ச்சியோடு செயற்படுங்கள். நாடுவிட்டு நாடு செல்லும் வாய்ப்பிருந்தால் அதை உபயோகப்படுத்திக்கொள்ளுங்கள். மங்கையருக்கும், தங்கையருக்கும் மணம் முடிக்க ஏற்பாடு செய்யுங்கள்.

இனிஉங்கள் வாழ்க்கையினில் இடர் எல்லாம் விலகிவிடும் இரண்டாம் சுற்று என்றால் எள்ளளவும் கவலையில்லை. உருண்டுவரும் துயரெல்லாம் ஒளிந்துகொள்ள இடம் தேடும் என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

எனவே, தொழில் உத்தியோகத்தில் திடீர் மாற்றங்களை வழங்கும். பண வசதி பெருகும்.

### குரு பெயர்ச்சிக் காலம்

23.7.2003 அன்று சிம்ம ராசியில் குருவும் சஞ்சரிக்கப் போகிறார். குடும்ப குருவாகி குதூகலத்தை அல்லவா வழங்கப்போகிறார். தனஸ்தான குருவால் நிதி நிலை உயரும். நிம்மதி கிட்டும். வங்கிகளில் வைப்பு நிதி வளர்ந்து வசந்தகாலத்தை உருவாக்கப் போகிறது.

### ராகு - கேது பெயர்ச்சிக் காலம்

16.8.2003இல் ராகு கேதுக்களின் பெயர்ச்சியால் இல்லத்திலும், தொழிலிலும், உத்தியோகத்திலும் எதிர்பார்த்த மாற்றங்களை நீங்கள் காணப்போகிறீர்கள்.

தாயின் உடல் நலம் தேறும். வாகன வசதி கூடும். வாழ்க்கைத் துணையால் வருமானம் வந்து சேரும்.

### பெண்களுக்கு

இந்த ராசியில் பிறந்த பெண்களுக்கு எந்த ஆண்டும் இல்லாத அளவு முன்னேற்றம் இந்த ஆண்டு கிடைக்கும்.

பெற்றோர் வழி ஒத்துழைப்பு கூடும். பிரிந்திருந்த சகோதரர்கள் மீண்டும் வந்து சேருவர். வாழ்வில் இதுவரை போராட்டங்களையே சந்தித்து வந்த நீங்கள் இப்போது சீரோடும் சிறப்போடும் வாழச் செல்வந்தர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

பிடிவாதக்குணம் மிக்க நீங்கள் அண்டை வீட்டாருடன் போட்ட சண்டை சச்சரவுகள் அடிச்சுவடு தெரியாமல் மாறும்.

குறிப்பாக குரு பார்வையின் பலனாக வருடத்தின் பிற்பாதியில் விரும்பியபடியே வாழ்க்கைத் துணைவரைத் தேர்ந்தெடுத்து, வருங்காலத்தை வளப்படுத்திக் கொள்வீர்கள். ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். குல தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றி குடும்ப ஒற்றுமையை பலப்படுத்துவீர்கள்.

### விழிப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டிய காலங்கள்

செவ்வாய் வக்ர காலம் மட்டும் கவனமுடன் செயற்பட வேண்டிய காலமாகும். அக்காலத்தில் குடும்ப பிரச்சினைகள் அதிகரிக்கும். குதூகலங்கள் குறையும். பூமி விற்பனையும் பொருள் இழப்புகளும் கூட ஒரு சிலருக்கு ஏற்படலாம்.

### வளம் சேர்க்கும் வக்ர காலம்

குருவும் புதனும் வக்ரகதியில் இயங்கும்பொழுது நினைக்க இயலாத ராஜயோகத்தை உங்களுக்கு வழங்க போகிறார்.

### ஜனவரி

புதன்கிழமையும் கேட்டை நட்சத்திரமும் இணைந்து பிறக்கிறது. பொருளாதார நிலை போதுமானதாக அமையாது. இருப்பினும் வக்ர குருவால் வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் உறுதுணை புரிவர்.

இடம், பூமி சம்பந்தப்பட்ட வகையில் லாபம் கிட்டும். அரசு அனுகூலம் உண்டு. நாடாளும் நபர்களின் நட்பால் நல்ல காரியம் ஒன்றை நடத்திக் காட்டுவீர்கள். திடீர் இடமாற்றங்கள் தவிர்க்க முடியாததாக அமையும். ஜென்ம குருவால் சிறப்புகளை அடைய தென்முக கடவுளை வழிபட்டு வாருங்கள்.

### பெப்ரவரி

இம்மாதம் சனிக்கிழமையும், திருவோணம் நட்சத்திரமும் இணைந்து பிறக்கிறது. குதூகலம் கூடும். கொண்டாட்டங்கள் அதிகரிக்கும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். சுக்ரனால் எதிர்பாராத தனலாபம் இல்லம் தேடிவரும். மங்கையர் வழி பிரச்சினைகள் தீரும். சனி வக்ர நிவர்த்தி ஆவதால் தொழிலில் ஏற்பட்ட தடைகள் அகலும். கும்பத்தில் சஞ்சரிக்கும் சூரியனால் அரசு வழி தொல்லைகளை சந்திக்க நேரிடலாம்.

நவக்கிரகத்தில் உள்ள குருவையும், சந்திரனையும் வழிபட்டு வாருங்கள்.

### மார்ச்

சனிக்கிழமையும் திருவோணம் நட்சத்திரமும் இணைந்து பிறக்கிறது.

தொடர்ந்து பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும். தொட்ட காரியம் வெற்றி அடையும். மாற்று மருத்துவ சிகிச்சைகளால் ஆரோக்கியம் சீராகும். தங்கம், வெள்ளி, பொன் பொருள் சேர வாய்ப்புண்டு. தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல் மறையும். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும். இம்மாதம் தெற்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டு தித்திக்கும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுங்கள்.

### ஏப்ரல்

செவ்வாய்க்கிழமையும் உத்தரட்டாதி நட்சத்திரமும் இணைந்து பிறக்கிறது.

குருசந்திரயோகம் உங்களோடு இணைந்துவருகிறது. குரு வக்ர நிவர்த்தி ஆவதால் புண்ணிய காரியங்கள் எளிதில் செய்ய முன்வருவீர்கள். குடும்பத்தில் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். மாதத்தின் பிற்பகுதியில் உச்ச சூரியனின் பலத்தால் புது ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். கட்டடப் பணியை தொடங்குவீர்கள். மதிப்பு, புகழ் கூடும் மாதம் இது. சனீஸ்வரரை வழிபட்டு வரவும். இதோடு சனிக்கிழமை விரதம் இருப்பதும் உத்தமம்.

### மே

வியாழக்கிழமையும் அசுவதி நட்சத்திரமும் இணைந்து பிறக்கிறது. லாபம் குவியும். எடுத்த காரியத்தை இனிதே முடித்து வெற்றி காண்பீர்கள். இல்லத்தில் மங்கல ஓசை கேட்கும். சூரிய பலத்தால் உறவினர்களின் துக்க செய்தி ஒன்று வந்து சேரலாம். எலும்பு, நரம்பு, சம்மந்தப்பட்ட வகையில் இருந்த தொல்லைகள் நீங்கும். சூரியவழிபாடும்,பின் பதினைந்து நாள்களில் சனீஸ்வர வழிபாடும் செய்து வருவது நல்லது.

### ஜூன்

ஞாயிற்றுக்கிழமையும், மிருக சீர்ஷம் நட்சத்திரமும் இணைந்து பிறக்கிறது.

ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும். கல்வித் தடை அகலும். பிள்ளைகள் வழியில் பிரச்சினைகள் ஏற்பட்டு விலகும். சகோதர வகையில் அலைச்சலும் செலவுகளும் அதிகரிக்கும். திடீரென பூமி விற்பனையும் உருவாகலாம். செயல்களில் தேக்கம் ஏற்படும். கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. அங்காரகனை செவ்வாய் தோறும் வழிபட்டு வருவது நல்லது.

### ஜூலை

இம்மாதம் செவ்வாய்க்கிழமையும், புனர்பூசம் நட்சத்திரமும் இணைந்து பிறக்கிறது. வீண் விரயங்கள் ஏற்படும் மாதமிது. மருத்துவச் செலவு கூடும். சிம்மத்தில் குரு சஞ்சரித்த பிறகு மிகப்பெரிய மாற்றங்களை காணப் போகிறீர்கள். எதிரிகள் சரணடைவர். சிநேகிதர்களால் வந்த சிக்கல்களும் அகலும். விநாயக பெருமானையும் ஆஞ்சநேயரையும் ஒரு சேர வழிபட்டு வருவது நல்லது.

### ஓகஸ்ட்

வெள்ளிக்கிழமையும் பூரம் நட்சத்திரமும் இணைந்து பிறக்கிறது.

இம்மாதத்தில் ஏழரைச் சனி தொடங்கிவிட்டது. எனவே, பயணங்கள் அதிகரிக்கும். பக்க பலமாக இருந்த நண்பர்களிடம் கருத்து வேறுபாடு கூடும். கொடிகட்டி பறந்த நீங்கள் குழப்பத்திற்கு ஆளாக நேரிடலாம். இரண்டாவது சுற்று ஏழரைச் சனி நடப்பவர்கள் இம்மாதம் ஏற்றம் பெறுவர். பதவி வாய்ப்புகள் தேடிவரும். புதிய சொத்துகள் வாங்கும் சூழ்நிலை உண்டு. குடும்பத்தில் சுபகாரிய பேச்சு கை கூடும். செவ்வலரி மாலை அணிவித்து துர்க்கையை வழிபட்டு வரவும்.

### செப்ரெம்பர்

இம்மாதம் திங்கட்கிழமையும் சுவாதி நட்சத்திரமும் இணைந்து பிறக்கிறது.

உடல் நலம் அடிக்கடி பாதிக்கப்படலாம். தெய்வ பிரார்த்தனைகளில் மனம் ஈடுபடும். பொருள்களை அடமானம் வைத்து பொருளாதாரத்தை சரி செய்யும் சூழ்நிலைகள் உருவாகலாம். குடும்ப சுமை கூடும். சகோதர வழியில் சில சங்கடங்கள் வந்து சரியாகும். கடலை தானம் கொடுத்து குருவை வழிபட்டு வருவதாலும் கவலைகள் தீரும். கை நிறைய பொருள் குவியும்.

### ஒக்ரோபர்

புதன்கிழமையும் கேட்டை நட்சத்திரமும இணைந்து பிறக்கிறது. பணவரவு திருப்தி தரும். பக்க பலமாக நண்பர்கள் ஒத்துழைப்புச் செய்வர். தடைகளை எளிதில் அகற்றி விடுவீர்கள். திடீர் பயணங்கள் வந்து சேரும். 5ஆம் திகதியே செவ்வாய் வக்ர நிவர்த்தியாகிவிடுவதால் வாகனங்களில் கவனமுடன் செல்வது நல்லது. குருவின் பார்வை பலத்தால் குரு மங்களயோகம் உருவாகிறது. எனவே குடும்பத்தில் நடைபெற இருக்கும் சுபகாரியத்தை துரிதமாக பேசி முடிப்பது நல்லது. மேற்கு நோக்கிய துர்க்கையை செவ்வாய்க்கிழமை தோறும் வழிபட்டுவர மிகச்சிறந்த பலன் கிடைக்கும்.

### நவம்பர்

சனிக்கிழமையும் உத்தராடம் நட்சத்திரமும் இணைந்து பிறக்கிறது. எண்ணற்ற தடைகள் ஏற்படும். அரசு வழி தொல்லைகளுக்கு ஆளாக நேரிடலாம். பொருளாதார நிலை திருப்தியளித்தாலும் விரயம் இரு மடங்காகும். சுற்றுப்பயணங்கள் கூடும். குடும்பத்தில் ஏற்பட்ட மனக்கசப்பு அகலும். திடீர் பயணத்தால் பழைய நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். வெளிநாட்டு அனுகூலம் கிட்டும். நிலவை வழிபட்டால் நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிக்கலாம்.

### டிசெம்பர்

திங்கட்கிழமையும் சதயம் நட்சத்திரமும் இணைந்து பிறக்கிறது. எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி பெறுவீர்கள். உடல் நலம் சீராகும். கூட்டாளிகளின் ஒத்துழைப்போடு புதிய தொழிலைத் தொடங்க முன்வருவீர்கள். பூமி யோகம் உண்டு. பண வரவு திருப்தியளிக்கும். விரயச் சனி வக்ரம் பெற்று விளங்குவதால் வீண் விரயம் குறையும். சந்திராஷ்டமத்தோடு தொடங்கும் இம் மாதத்தில் சந்தோஷம் ஏற்பட செந்தில் வடிவேலனை வழிபட்டு வாருங்கள்.

### எண்கணிதப் பலன்

புத்தாண்டு 2003 என்பது 5 என்ற புதன் ஆதிக்க ஆண்டு ஆகும். இந்த ஆண்டு ஒளிமயமானதாக இருக்கும். உங்களுக்குரிய யோக எண்: 2 என்றாலும், இந்த ஆண்டு தொட்டது துலங்க வைக்கும் எண்;3

உங்களுக்கு மோதிரம் முத்து என்றாலும் இந்த ஆண்டைப் பொறுத்தவரை சந்திர காந்தகல், நீள் வட்ட வடிவில் அல்லது நாற்கோண வடிவத்தில் பட்டை தீட்டப்படாத சிவப்பு ரூபியை அணிந்து கொண்டால் பலன்கள் பன்மடங்காக கிடைக்கும் செல்வச் செழிப்பை வழங்கும் சிறப்பு வழிபாடு.

(மிகுதி நாளை)

---

# கந்தரோடையில் இப்போது விகாரை தேவையா?

## யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு மகஜர்

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து நடைபெற்றுவரும் பேச்சுக்களால் சமாதானம் கிட்டும் என்ற பெரும் எதிர்பார்ப்புடன் வாழும் எமது மக்களுக்கு கந்தரோடையில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் விகாரை அமைக்கும் முயற்சி பெரும் விசனத்தையும், சமாதானம் பற்றிய சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

- இவ்வாறு வலி.தெற்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது. இது குறித்து அந்த அமைப்பு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்தது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பேச்சு நடைபெறும் இக்காலகட்டத்தில் அமைதிக்கு பங்கம் ஏற்படும் வகையில் எமது மக்கள் செயறபாடுகளையோ, போராட்டங்களையோ நடத்துவதைத் தவிர்க்கவேண்டும் என்று தங்கள் குழுவினர் எம்மத்தியில் பல தடவைகள் அறிவுறுத்தல் வழங்கி வந்திருக்கிறீர்கள்; வருகின்றீர்கள்.

ஆனால், எமது மக்களின் அமைதியையும் புரிந்துணர்வையும் சிதைக்கும் வகையில் - சிங்களக் குடியிருப்போ, பௌத்த குடிமகனோ இல்லாத ஒரு சிறிய கிராமத்தில், புராதன வழிபாடுகள் அங்கு இருக்கின்றமையை சாட்டாக வைத்து - விகாரை அமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளமை அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் அடாவடித்தனம் என்பதைத் தாங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகின்றோம்.

நாம் பௌத்தத்திற்கு எதிரானவர்கள் அல்லர்; பௌத்த தத்துவத்தைப் புரிந்துகொள்ளாதவர்களும் அல்லர். பொருத்தமற்ற நேரத்தில் பேரினவாதிகள் மத்தியில் மத உணர்வுகளை ஏற்படுத்தி பேச்சுக்களை குழப்பியடிக்கக் கூடிய ஒரு மறைமுகமான சூழலை உருவாக்கி வைத்திருக்க அரசு மேற்கொள்ளும் சதித்திட்டத்தின் ஓர் அங்கமே இச்செயற்பாடு என நாம் கருதுகின்றோம்.

தென்னிலங்கையில் உருவாகிவரும் பௌத்த சிங்களப் பேரினவாதமே சமாதானப் பேச்சுக்களை குழப்பியடிக்கக்கூடிய சக்தி என்பதனை யாவரும் அறிவர். கடந்த 50 ஆண்டுகளாக ஈழத் தமிழ் மக்கள் நடத்தி வரும் விடுதலைப் போராட்டங்களின் போது அரசுகளோடு அவ்வப்போது செய்துகொண்ட சமாதான ஒப்பந்தங்

(14ஆம் பக்கம் பார்க்க)

விவசாயிகளே!

உங்களுடைய



மிளகாயில் – இலைச்சுருட்டியா?
தக்காளியில் – வெட்டுப் புழுக்களா?
கோவாவில் – இலையரிப் புழுக்களா?
கத்தரியில் – காய் துளைப்பான்களா?

கவலையை விடுங்கள்!




இவற்றைக் களைக்கிறேனென வருகிறது

கல்க்ரொன் 500 ml.மி.

புரோபெனோபொஸ் உள்ளடங்கிய சக்திவாய்ந்த கிருமிநாசனி

விவரங்கள் கொள்கலனின் வெளிப்புறத்தில்

கிருமிநாசனிகள் ஆபத்தானவை; அவதானமாகப் பயன்படுத்தவும்

ஹரிசன்ஸ் கெமிக்கல் (பிறைவேற்) லிமிடெட்,
இல.7, பிறே புறுக் பிளேஸ்,
கொழும்பு - 02.

கிடைக்கும் இடம்:–

முன்னணி வாய்ந்த விவசாய இரசாயன விற்பனை நிலையங்கள்

யாழ். தொடர்புகளுக்கு

தொழில்நுட்ப விற்பனைப் பிரதிநிதி
இல.235, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-26214)


# கல்வியியற் கல்லூரிக்கு மேலும் 90பேர் அனுமதி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு மேலும் 90 மாணவர்கள் இந்த கல்வியாண்டுக்கு அனுமதிக் கப்படவுள்ளனர்.

மனிதவள அபிவிருத்தி, கல்வி கலாசார அமைச்சின் கல்வியியற் கல்லூரிக் கிளையின் பிரதம ஆணையாளர் ஏ.சி.எம்.இப்ராகிம் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.

ஆரம்பக்கல்வி - 60 பேர், நூலக விஞ்ஞான தொழில்நுட்ப கற்கை நெறி - 17 பேர், சங்கீதம் - 13 பேர் ஆகியோரே இவ்வாறு அனுமதிபெற வுள்ளனர். (எ-ரி)


மேசை ரெலிபோன் பொருத்திக் கொடுக்கப்படும்

குறைந்த விலையில் உங்கள் வீடுகளுக்கு மேசை ரெலிபோன் பொருத்திக் கொடுக்கப்படும்.

தொடர்பு:

துவாரகை தொலைத் தொடர்பு நிலையம்

லூர்து மாதா கோயிலடி, தும்பளை, பருத்தித்துறை.
(12255) 070 213074, 777 182369


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 24 - 08 - 1914

மறைவு 20 - 12 - 2002

அமரர்

**சந்தியாப்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை**

(இளைப்பாறிய அதிபர்)

எங்களினை இப்புவியில் ஏற்றமுற வைத்தவரை
திங்களொன்று சென்றிடின் மறப்பதோ – பரகதியில்
பங்கமுறா வாழ்வுபெற கர்த்தரிடம்
உங்களுக்காய் வேண்டுகிறோம் நன்றியுடன்.

13/1, புதுமை மாதா கோயில்
கிழக்கு வீதி, யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(13356)


கனடா, ஐக்கிய ராட்சியம், அவுஸ்திரேலியா, அமரிக்கா போன்ற நாடுகளுக்கு ....

குடிபெயர, கல்வி கற்க, சுற்றுப்பயணம் மேற்கொள்ள விரும்புகின்றீர்களா?

இது தொடர்பான இலவசக்கருத்தரங்கு
எதிர்வரும் 18/01/2003,
சனி, பி.ப. 3.00 மணிக்கு
Jaffna M.P.C.S. Auditorium (கேட்போர் கூடம்) 127, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம் என்ற இடத்தில் நடைபெறும்.

கனடா செல்லுங்கள்

உயர்தரக் கல்லூரிகளில் பின்வரும் கற்கை நெறிகள்

சான்றிதழ், டிப்ளோமா, பட்டப்படிப்பு

கணக்கியல், தொழில் நுட்பவியலாளன்,
ஹோட்டல் முகாமைத்துவமும் சுற்றுப்பயணவியலும்,
கணனி, புரோக்ராமர், எனலைஸர்,
மின் பொறியியல்,
பி.ஏ. தகவல்கள்,
ஆசிரியர் கற்கை நெறி.

E-Commerce Program

* தொழில் நுட்ப வியல் முகாமைத்துவம்
* நுண்ணியல் கணனி வியாபார வலைப்பின்னல்
* தகவல் மிகைத் தொழில்நுட்பம்
* இன்ற்றரெக்டிங் கேம்ஸ் டிசைன்
* கணனி எனலைஸ். * கணனி அனிமேஷன் ஸ்பெஷலைஸ்
* வாடிக்கையாளர் கோவையாளர் புரோக்ராம். * வெப் வெளியீடும் கற்கைப் படுத்தலும்

ஆகக் குறைந்த கல்வித் தகைமை க.பொ.த சா/த மட்டுமே

இது ஒரு வெளிநாட்டு வேலை வாய்ப்பு அல்ல

கடந்த 7 வருடமாக வாழ்க்கைத்தரத்தில் 1ம் நிலையில் கனடா இருந்து வருகிறது

கனடா நியூசிலாந்தில் தொழில் தன்மை:-

முழுநேரக்கல்வியை பின்பற்றும் வெளிநாட்டு மாணவர்கள் கற்கும்போதே தொழில் புரிவதற்கான அனுமதியைப் பெறுவர். குறிப்பிட்ட சில தகைமைகள் குறிப்பிட்ட சில பிரதேசங்களுக்குத் தேவைப்படுவதால் வெளிநாட்டு மாணவர்கள் அந்தந்தப் பிரதேசங்களின் சட்ட விதிகளுக்கேற்ப நிரந்தர வதிவிட அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம்.

தற்போது சட்டங்கள் தளர்த்தப்பட்டுள்ளன
புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன
வருடந் தோறும் நியூசிலாந்திற்கு 50,000 விசாக்கள்
வருடந் தோறும் அவுஸ்திரேலியாவுக்கு 85,000 விசாக்கள்
வருடந் தோறும் கனடாவுக்கு 285,000 விசாக்கள்

IEMC Global Group (PVT) LTD
No.7, Eashwary Road, Colombo 6.
Tel No. 366780, 559767, 559766
☎ 0777 743370, 0777 711444,
Fax. 074 513161
E.mail: iemcsp@sltnet.lk



(மூ)த்த தளபதி கேணல் கிட்டுவின் நினைவுதினமான நேற்றுமுன்தினம் நல்லூரில் கிட்டு பூங்காவிலும் நல்லூர் ஆலய வீதியிலும் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.
(படங்கள் : ரமணன், வசந்தன்.

# ஆஸி.ரசிகர்கள் வாயை மூடவேண்டும் இல்லையேல் இங்கு ஆட வரமாட்டேன்!

## முரளி கவலையுடன் தெரிவிப்பு



ஆஸ்திரேலிய கிரிக்கெட் ரசிகர்கள் ஒழுங்கீனமானவர்கள் என இலங்கையின் நட்சத்திர பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் குற்றஞ் சுமத்தினார்.

முரளியின் பந்து வீச்சுப் பாணியில் தவறில்லை என ஐ.சி.சியினால் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்நிலையிலும், ஆஸி.ரசிகர்கள் இன்னும் தம் மீது குற்றஞ் சுமத்துகின்றனர் என முரளிதரன் கூறுகிறார்.

1995, 1998 ஆம் ஆண்டுகளில் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற போட்டிகளின்போது முறையற்ற விதமாக பந்தை எறிகிறார் என முரளிதரன் குற்றஞ்சுமத்தப்பட்டார்.

தற்போது ஆஸ்திரேலியாவில் நடைபெறும் வீபி. கிண்ணத் தொடரிலும் முரளி பந்து வீசுவதற்காக ஓடி வரும்போது அவரை ஆத்திரமூட்டும் விதமாக ரசிகர்கள் கூச்சலிட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரேலிய செய்திச் சேவையொன்றுக்கு அளித்த பேட்டியில் தனது அதிருப்தியைத் தெரிவித்துள்ளார் முரளி.

ஆஸ்திரேலிய ரசிகர்கள் தமது வாயை மூடிக்கொள்ள வேண்டும் என நான் கருதுகிறேன். ஆனால், இவர்கள இன்னும் நான் பந்தை எறிகிறேன் என்று கூறுகின்றனர். இது முறையற்றது. ஏனெனில் நான் அப்படிச் செய்யவில்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஓரிரு தடவைகள் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டால் அது பரவாயில்லை. ஆனால், கடந்த 7 வருடங்களாக இது தொடர்கிறது.

இந்நிலைமை நீடித்தால் இனிமேல் இங்கு வந்து போட்டிகளில் பங்குபற்றமாட்டேன் என்பதை ரசிகர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

கடந்த இரவு (புதனன்று) நான் காயமடைந்தபோது அவர்கள் சிரித்தனர். பிற வீரர்கள் காயமடைந்தால் அவர்கள் சிரிக்கமாட்டார்கள் - இவ்வாறு முரளிதரன் கூறினார்.

(ஒ-5)

# உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் ஒலிம்பிக் பாணியில் ஆரம்பவிழா

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கு ஒலிம்பிக் பாணியில் ஆரம்ப விழா நடைபெறவுள்ளது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் அடுத்த மாதம் 8ஆம் திகதி தென்னாபிரிக்காவில் ஆரம்பமாகவுள்ளன. இந்தப் போட்டிக்கான ஆரம்ப விழா கேப்டவுனில் நடைபெறவுள்ளது. ஆரம்ப விழாவிற்கான ஒத்திகை முடிவுற்றது. இதன்மூலம் ஆரம்ப விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன.

ஆரம்பவிழாவின்போது நடைபெறும் நிகழ்ச்சிகளை அமெரிக்காவைச் சேர்ந்த நிபுணர் டக்ஜாக் வடிவமைத்துள்ளார். அட்லாண்டா, பார்சிலோனா, சிட்னி ஆகிய இடங்களில் நடைபெற்றுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஆரம்ப விழாவில் ஜாக் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்பவிழாவில் 5200இற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு கலைநிகழ்ச்சிகளை நடத்த உள்ளனர். உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின முதல் போட்டியில் போட்டிகளை நடத்தும் தென்னாபிரிக்காவும், மேற்கிந்திய தீவுகள் அணியும் மோதுகின்றன.

ஆரம்ப விழாவிற்கான டிக்கெட்டுகள் விற்றுத் தீர்ந்துவிட்டன. ஆரம்ப விழாவிற்கான இறுதி ஒத்திகை அடுத்த மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. உலகக் கோப்பைக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், அடுத்த வாரம் முதல் சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன.

(ம)

# இங்கிலாந்துடனான போட்டியிலிருந்து பொன்ரிங், ஹைடன், பிரெட் லீ நீக்கம்

வீ.பி.கிண்ணத் தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள போட்டிக்கான ஆஸ்திரேலிய அணியிலிருந்து அணித்தலைவர் ரிக்கி பொன்ரிங், ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மத்தியூ ஹைடன், வேகப் பந்துவீச்சாளர் பிரெட் லீ ஆகியோர் ஒதுக்கப்பட்டுள்ளனர் என ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை நேற்று அறிவித்தது. தொடர்ச்சியான போட்டிகளிலிருந்து இவ் வீரர்களுக்கு ஓய்வளிப்பதே இதன நோக்கமாகும்.

ஞாயிறன்று அடிலெய்ட்டி நகரில் நடைபெறவுள்ள இப்போட்டியில் ஆஸ்திரேலியாவுடன் இங்கிலாந்து அணி மோதவுள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் இவ் வீரர்கள் தொடர்ச்சியாக போட்டிகளில் பங்குபற்றி வருகின்றனர். இதனால் வீ.பி.கிண்ண இறுதிப் போட்டிகள் மற்றும் உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு உள, உடல் ரீதியில் புத்துணர்ச்சியுடன் தயாராகுவதற்காக இவர்களுக்கு ஓய்வு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ம)

# டெரன் லெஹ்மனுக்குக் கடும் எச்சரிக்கை; இனவாதமாகத் திட்டினாரென குற்றச்சாட்டு

இலங்கை அணியுடனான போட்டியின்போது இனவாதமாகத் திட்டியமைக்காக ஆஸி.கிரிக்கெட் வீரர் டெரன லெஹ்மனுக்கு கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த புதனன்று நடைபெற்ற இப்போட்டியில் லெஹ்மன் 38 ஓட்டங்களைப் பெற்றார். அதன்பின் அவரை இலங்கை வீரர் ரஸல் ஆர்னோல்ட்ரன் அவுட் முறையில் ஆட்டமிழக்கச் செய்தார்.

ஆட்டமிழந்த பின் லெஹ்மன் வீரர்களின் அறைக்குத் திரும்பும்போது ரஸல் ஆர்னோல்டை இனவாதமாகத் திட்டினார். வீரர்களின் அறையிலிருந்த இலங்கை அணி முகாமையாளருக்கும் இது தெளிவாகக் கேட்டது.

இலங்கை அணி முகாமையாளர் அஜித் ஜயசேகர இது குறித்து போட்டி மத்தியஸ்தர் கிளைவ் லொயிட்டிடம் புகாரிட்டார்.

இது குறித்து விசாரணை நடத்திய லொயிட், லெஹ்மனை கடுமையாக எச்சரித்தார்.

இதையடுத்து, உடனடியாக வாய் மூலமும் எழுத்து மூலமும் இலங்கை அணியினரிடம் மன்னிப்புக் கோரினார் லெஹ்மன்.

இலங்கை அணியினர் கருணை காட்டியதால் போட்டியொன்றில் பங்கு பற்றுவதற்குத் தடை விதிக்கப்படுவதிலிருந்து லெஹ்மன் தப்பினார்.

ரஸல் ஆர்னோல்டை திட்டியபோது லெஹ்மன் என்ன கூறினார் என்பதைத் தெரிவிப்பதற்கு இலங்கை அணி முகாமையாளர் அஜித் ஜயசேகர மறுத்துவிட்டார்.

(ம)

# இலங்கை அணி மீண்டும் தோல்வி



சிட்னி,ஜன.18

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் வி.பி.கிண்ணத்துக்கான ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று இடம்பெற்ற இலங்கை அணியுடனான ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 19 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டி[illegible] ஓவல் மைதானத்தில் நடை[illegible] நாணயச் சுழற்சியில் வெ[illegible]ங்கிலாந்து அணி முதலில் [illegible]டியது.

அந்த அணி [illegible]பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 7விக்கெட் இழப்பிற்கு 279 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிக் நைற் 88 ஓட்டங்களையும் த்ரெஸ் கோதிக் 39 ஓட்டங்களையும் அலக்ஸ் ருவார்ட் 51 ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கை அணியின் சார்பில் சமிந்தவாஸ், லக்ஸிதகமகே, தில்ஹார பெர்னாண்டோ ஆகியோர் தலா இரண்டு விக்கெட்களைக் கைப்பற்றினர்.

280 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணி 49.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 260 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

அணித்தலைவர் சனத் ஜெயசூரிய 99 ஓட்டங்களையும் குமார் சங்கஹார 56 ஓட்டங்களையும் ரசல் ஆர்னோல்ட் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

இங்கிலாந்து பந்து வீச்சாளர் அன்ரூ ஹடிக் 4விக்கெட்டுகளையும் அன்டர்சன் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக அன்ரூஹடிக் தெரிவு செய்யப்பட்டார்.

காயம் காரணமாக முரளி இந்தப் போட்டியில் விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-5-10)

# ஆலயப் பிணக்குகளைத் தீர்த்து வைக்க இந்துமதபீட உறுப்பினர் அடங்கிய குழு

## தேவையென்கிறார் நல்லை ஆதீனமுதல்வர்

யாழ்ப்பாணம்,ஜன.18.

ஆலயங்கள் தொடர்பாக எழும் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு இந்துமதபீடங்களின் உறுப்பினர் களைக் கொண்ட குழு ஒன்று நிறு வப்படவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனகுரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.

இந்து ஆலயங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் இந்துசமயப் பேரவையின் தலைமையகத்தில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுவாமிகள் தமது உரையாடலில் மேலும் தெரிவித்ததாவது:-

இந்து ஆலயங்களில் எழும் பிரச்சினைகள் சமயப் பெரியார்களால் தீர்த்து வைக்கப்படாத காரணத்தால் அவை நீதிமன்றம்வரை செல்லவேண்டி ஏற்பட்டுள்ளது. இன்று நீதிமன்றங்களில் பெரும் எண்ணிக்கையான வழக்குகள் ஆலயங்கள் சம்பந்தமானவையாகவே காணப்படுகின்றன. இந்த நிலை மாற்றப்படவேண்டும்.

இன்று நடைபெறும் கூட்டத்தில் இந்துகுருமார் ஒன்றியத் தலைவரும், குருபீடாதிபதியுமான சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்களும், இந்துசமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சி.விநாசித்தம்பியும் நாமும் ஏனைய இந்துமத முக்கிய பிரமுகர்களும் கலந்து கொள்வது எமக்கு பெரு மகிழ்ச்சியை தருகின்றது. இதனைப் பயன்படுத்தி ஆலயங்களில் எழும் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு இந்து மத பீடங்களின் உயர்குழுவொன்றை அமைத்துக் கொள்ளவேண்டும். இதற்கு இங்கு வருகை தந்திருக்கும் இந்துமத முன்னணி அமைப்புக்கள் பரிபூரணமான ஒத்துழைப்பை நல்க வேண்டும். இந்துசமயப் பேரவை கடந்த போர்க்காலச் சூழ்நிலையில் துணிந்து நின்று ஆற்றிய பணிகள் எமக்கும், எமது மதத்திற்கும் பெருமையைத் தேடித்தந்துள்ளன. இவ்வமைப்பே ஆலயப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கும் அனைவரினதும் ஒத்துழைப்பையும் பெற்றுச்செயற்பட வேண்டும் என்றார்.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள் தமதுரையில், ஆலயங்களில் எழும் கிரியை சம்பந்தமான பிணக்குகளையும் வேறு பிணக்குகளையும் எமது இந்துகுருமார் ஒன்றியம் தீர்ப்பதற்கு முற்பட்டது. அனைத்து அமைப்புக்களும சேர்ந்து இப்பிணக்குகளை தீர்க்க முன்வராத காரணத்தால் அதற்கு பரிபூரணமான வெற்றி கிடைக்கவில்லை.

இன்று இந்துசமயப்பேரவை மேற்கொண்டுள்ள இந்த முயற்சியை முழுமனதுடன் வரவேற்பதுடன் இதற்கு இந்து குருமார்களும் நாமும் பரிபூரணமான ஒத்துழைப்பை வழங்க தயாராக உள்ளோம். சுவாமிகள் கூறியதுபோல நாம் இந்துமத உயர் பீட குழுவொன்றை அமைப்பதே சாலப் பொருத்தமானதாகும்.

ஆலயங்களில் எழும் பிரச்சினைகளை முதற்கட்டமாக கிராம அலுவலர்களும், பிரதேச செயலர்களும் உள்ளூர் சமயப் பிரமுகர்களும் தீர்த்து வைக்க முற்படவேண்டும். இவை தீர்க்கமுடியாத பட்சத்தில் அரசாங்க அதிபர்மூலம் எம்மிடம் இப்பிணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டால் அது சம்பந்தமான நடவடிக்கைகளை நாம் சுலபமாக மேற்கொள்ளமுடியும். மேலும் இப்பிணக்குகளை தீர்ப்பது சம்பந்தமான விதிமுறையொன்றையும் நாம் தயாரித்துக்கொள்ளவேண்டும் - என்றார்.

இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ.விநாசித்தம்பி உரை நிகழ்த்துகையில், சுவாமிகளதும், பீடாதிபதியினதும் கருத்துக்களை வரவேற்பதுடன், இது சம்பந்தமான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அதேவேளை, இப்பிணக்குகளைத் தீர்ப்பதற்கு தனி அலகு ஒன்றை எமது அலுவலகத்தில் இயக்க பேரவை முழு ஒத்துழைப்பையும் வழங்கும் - என்றார்.

கலந்துரையாடலின் இறுதியில் ஆலயப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கென நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், சர்வதேச இந்துமதகுரு பீடாதிபதி சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள், இந்து சமயப் பேரவைத்தலைவர் அருட்கவி சீ.விநாசித்தம்பி, பட்டப்பின்படிப்புகளின் பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஸ்ண ஐயர், இந்துசமயப் பேரவையின் செயலாளர் சி.சக்திகிரீவன் ஆகியோர் அடங்கியகுழு நியமனம் செய்யப்பட்டது.

(எ)

## கந்தரோடை....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் யாவும் பௌத்த சிங்கள பேரினவாதத்தால் கிழித்தெறியப்பட்டமையே வரலாறாகும். அதற்குத் தீனி போடும் அரசின் இச்செயற்பாட்டை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

எமது மக்கள் எமது மண்ணிலேயே வழிபாட்டு உரிமையை இழந்து நிற்கின்றார்கள். பாதுகாப்பு வலயமென்றும், இராணுவ வதிவிடமென்றும் கூறிக்கொண்டு எமது புண்ணிய ஸ்தலங்களை, குல தெய்வங்களைச் சென்று வழிபடும் உரிமை இதே அரசாங்கத்தினால் மறுக்கப்படுகின்றது. இந்த அடிப்படையில் மனித உரிமையே அற்ற அடிமைகளாக வாழும் எம்மத்தியில் வந்து இவ்விகாரையை அமைப்பது எம்மை இழிவு படுத்துவதாகவே அமைகின்றது. விகாரை நிறுவப்படும் இடத்தை சார்ந்த மக்கள் மனச் சஞ்சலத்தோடும், பதற்றத்தோடும் பயபிராந்தியத்தோடும் வாழுகின்றார்கள்.

இன்றைய நிலையைப் பயன்படுத்தி ஒவ்வொரு மதத்தினரும் இத்தகைய செயல்களில் ஈடுபட்டால் இனப் போராட்டத்துடன் மதப் போராட்டமும் இணைந்துகொள்ளும் துர்ப்பாக்கிய நிலை உருவாகும். எனவே, சமாதான நடவடிக்கைகளை அரசு இதய சுத்தியோடு மேற்கொள்வதை உறுதிப்படுத்தும் வகையில் இவ்விகாரை அமைக்கும் செயற்பாட்டை உடனடியாகக் கைவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் பிரதமர், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர், யாழ்.அரச அதிபர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.




உ

**காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்**

விநாயகர் அடியார்களே!

அடியார்களுக்கு வாரி வாரி வழங்கும் வாரிவளவு கற்பக விநாயகப் பெருமானுக்கு நிகழும் மங்களகரமான சித்திரபானு வருஷம் தைத்திங்கள் 5ஆம் நாள் நாளை (19-01-2003) ஞாயிற்றுக்கிழமை சித்தயோகமும் பூச நட்சத்திரமும் கூடிய பகல் 10.06மணி முதல் 11.36 மணிவரையுள்ள மீனலக்கின சுபவேளையில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நிகழத்திருவருள் பாலித்துள்ளது.

அடியார்கள் கிரியா காலங்களில் ஆசார சீலர்களாக பங்கு கொண்டு எம்பெருமானின் திருவருளுக்கு பாத்திரமாகும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்

*வாரிவளவு,*
*காரைநகர்.* (C/26120) ஆலய நிர்வாகஸ்தர்.



**தையல் வேலையாள்**

**தேவை**

தையல் வேலையில் அனுபவம் உள்ள ஆண்கள் உடன் தேவை.

குமார் தையல் அகம்,
*கே. கே. எஸ். வீதி,*
*தாவடி, கொக்குவில்.*
(13371)


## கல்வி குறித்த கருத்தரங்கு

ஐ.ஈ.எம்.சி. குளோபல் குறூப் பிரைவேட் லிமிற்டெட் ஏற்பாட்டில் நடைபெறும் வெளிநாட்டுக்கல்வி மற்றும் தொழில்துறைசார் கல்வி ஆகியன குறித்த இலவசக் கருத்தரங்கு இன்று பி.ப.3 மணிக்கு யாழ்.பலநோ.கூ. சங்க கேட்போர் கூடம், 127, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நடைபெவுள்ளது.

மேற்படி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் பல்வேறு வகையான சேவைகள் குறித்து இந்தக் கருத்தரங்கில் விளக்கமளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ)

## மக்கள் முகம்




கடந்த 42 வருடங்களாக பொது எழுதுவினைஞர் சேவையில் எழுதுவினைஞராக பல அரச திணைக்களங்களில் பணிபுரிந்து வந்த இ.கிட்ணமூர்த்தி 30.12.2002 முதல் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

இவர் தனது சேவையினை கண்டி, நுவரேலியா கல்வித் திணைக்களத்திலும் பின்னர் பருத்தித்துறை மதுவரி அலுவலகத்திலும், பொதுத்திறைசேரியிலும், கடந்த 20 வருடகாலமாக யாழ். விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திலும் பிரதம எழுதுநராக இருந்து நிர்வாகக் கடமைகளை நிறைவேற்றி வந்துள்ளார்.

விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தில் கடமையாற்றிய போது அதன் நலன்புரிச் சங்கத்திலும், இந்து மன்றத்திலும் பல பதவிகளை வகித்து சேவை புரிந்துள்ளார். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவனான இவர் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானுமாவார். (எ)


☆ ☆ ☆



றக்கா வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராசு.தர்மகுலசிங்கம் யாழ்.மாவட்ட நீதி நிர்வாகத்திற்கான சமாதான நீதவானாக நீதியமைச்சினால் நியமிக்கப்பட்டு 03.01.2003 அன்று யாழ்.மாவட்ட, நீதிபதி இ.த. விக்னராசா முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துள்ளார்.

இவர் கந்தர்மடம் பழம் வீதியைச் சேர்ந்த சமாதான நீதவான் சி. இராசு அவர்களின் சிரேஷ்ட புதல்வனும், கந்தர்மடம், ஞானசோதி சனசமூக நிலைய முன்னாள் தலைவரும், ஞானவைரவர் ஆலய பரிபாலன சபை உறுப்பினரும், யாழ்ப்பாணம் பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் மேற்பார்வையாளரும் ஆவார். இவர் யாழ். பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவரும் ஆவார். (எ)

☆ ☆ ☆



நாட்டியப் பேராசான் கலைஞர் வேல் ஆனந்தன் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் 'ஆளுநர் விருது' வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

நெடுந்தீவைச் சேர்ந்த கலைஞர் வேல் ஆனந்தன் கொக்குவிலைச் சேர்ந்த ஏரம்பு சுப்பையா, சங்கீதபூசணம் எஸ்.பாலசுந்தரம் ஆகியோரிடம் முறையே நாட்டிய, சங்கீத ஞானத்தை ஆரம்பத்தில் பெற்றுக் கொண்டவர். பின்னர் கலாநிதி கோபிநாத், உண்ணிவாரியார், பத்மஸ்ரீ சுந்தர நாராயணன், பந்தணை நல்லூர் சுப்பராயப்பிள்ளை ஆகியோரிடம் நடனக்கலையைக் கற்றுக்கொண்டார்.

நாட்டிய நாடகத்தில் கைதேர்ந்தவரான இவர், குடாநாட்டின் பல்வேறு பாடசாலைகளிலும் நடன ஆசிரியராகப் பணியாற்றி பின்னர் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் கடந்த பல வருடங்களாக அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார். (எ)


**வரவேற்பு உபசார அழைப்பு**



எமது கிராம அலுவலர்
(J/102)
**திரு.வ.சந்திரசேகரம்**

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக அரசினால் நியமிக்கப்பெற்றமையை வாழ்த்தி வரவேற்று உபசரிக்க கந்தர்மடம் வடமேற்கு கிராம அபிவிருத்திச் சங்கமும் (RDS) ஆத்திசூடி கலைமகள் சனசமூக நிலையமும் இணைந்து 19.01.2003 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நடத்த உள்ளது. கந்தர்மடம் -J/102- அன்பர்களை வருகைதந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

வரவேற்பு ஊர்வலம் ஆத்திசூடி அருள்மிகு சித்திவிநாயகர் ஆலயத்திலிருந்து மாலை 5 மணிக்குஆரம்பமாகும்.

கிராம அபிவிருத்திச்சங்கம்,
கலைமகள் சனசமூக நிலையம்

(13364) *தனிப்பட்ட அழைப்பு இல்லை.*



**RAMCO CEMENT**

**ராம்கோ சிமெந்து**

*இலங்கையில் மட்டுமா? இல்லை!*

*இந்தியாவில் மட்டுமா? இல்லவே இல்லை!*

S.L.S. 107 அங்கீகாரம் பெற்றது.
I.S.O. 9002 தரம் பெற்றது.
B.S.S. 12-1991 தரத்திற்கு அமைவானது.

ஆசியாவில் முதலாம்தர (நம்பர் 1) தொழிற்சாலையாகத் தெரிவுசெய்யப்பட்ட தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் **RAMCO** சிமெந்து (கோபுரம் மார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தற்பொழுது ராம்கோ சிமெந்து பகுதித்துறை இறங்குதுறையில் இறக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. முன்கூட்டியே பதிவுசெய்பவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நேரடியாக விநியோகிக்கப்படும்.

ராம்கோ சிமெந்து ஏக இறக்குமதியாளர் :

*ஈஸ்வரபகவான் & கொம்பனி*
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
*T.P. : 021 2222350*
(C/26119)



**மரண அறிவித்தல்**

**வேலுப்பிள்ளை முத்துக்குமாரு**

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் பழைய வீதி, கோப்பாய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட வே.முத்துக்குமாரு நேற்று (17.01.2003) வெள்ளிக்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - நாகமுத்து தம்பதியினரின் கனிஷ்டபுத்திரனும் மற்றும் பரிமளத்தின் பாசமிகு கணவனும் திருமதி ஏ.றஞ்சிதமலர், திருமதி நா.அற்புதமலர் (ஜேர்மனி), திருமதி சி.யோகமலர், மு.தவயோகராசா (பிரான்ஸ்), மு.சுகுணராசா (சென்னை) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற வே.தம்பையாவின் அன்புத் தம்பியும் வைத்திலிங்கம் இளையபிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் எஸ்.கே.ஏ.ஆனந்தன், ஐ.நகேஸ்வரன் (ஜேர்மனி), ம.சிறிவிஜயநாதன் (உதயன் நாளிதழ் அச்சகப்பகுதி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோப்பாய், பழைய வீதியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (18.01.2003) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சுாந்தன்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய வீதி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.* (13373)

தகவல்:
மு.பரிமளம் (மனைவி),
ம.சிறிவிஜயநாதன் (மருமகன்).

# நூல் வெளியீட்டு விழா அழைப்பு

கணனி உயர்நிலை மொழியான சி++
தமிழ் மொழியில் நூலாக வெளியிடப்படுகிறது.

*இடம்* : நாவலர் கலாசார மண்டபம்,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
*காலம்* : இன்று (18.01.2003) சனிக்கிழமை மாலை 3.30மணி
*பிரதம விருந்தினர்* : பேராசிரியர் R. குமாரவடிவேல்
(விஞ்ஞான பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)
*தலைமை* : K. விக்கினேஸ்
(இயக்குநர், IIS, யாழ்ப்பாணம்)
*ஆசிரியர்* : ந.செல்வகுமார்

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*நூல்வெளியீட்டாளர்*
IIS கணனிக்கல்வி நிலையம். (C/26121)

---

## நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில் - நயினாதீவு

# தைப்பூசத்திருவிழா

**19.01.2003 ஞாயிற்றுக்கிழமை தைப்பூசத்திருவிழா சிறப்பாக இடம்பெறவுள்ளது. பகல் அம்பாள் திருமஞ்சத்தில் ஆரோகணித்து வரும் அலங்காரக் காட்சியும் இடம்பெறும். அடியார்களுக்கான போக்குவரத்து வசதிகள், அன்னதானம் என்பன விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.**

**அறங்காவலர்சபை**
நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில் - நயினாதீவு. (13380)

---

# இந்திய ஜோதிடர் யாழ்.விஜயம்

ஸ்ரீ சோடா நிகரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப் பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ்.வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத் தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!

**மணிசாமி P.T.R.**
யாழ்.உல்லாசப் பயணிகள் விடுதி
இல.54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்).
பார்வையிடும் நேரம்: காலை 9.00 மணிமுதல் மாலை 4.00மணிவரை
(வியாழக்கிழமைகளில் விடுமுறை) (13377)

---

# மரண அறிவித்தல்கள்

## ஐயம்பிள்ளை தங்கம்மா

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் 4ஆம் வட்டாரம், புங்குடுதீவை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை தங்கம்மா நேற்று (17.01.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை மற்றும் மருதப்பு, பரமானந்தம், உலக நாதன், கமலாம்பிகை, சிறிதரன், பரமேஸ்வரி ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (18-01-2003) சனிக்கிழமை காலை 10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*32/9, மூத்த விநாயகர் வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*
(13385)
தகவல்:
ரஞ்சன் (பேரன்)

## கந்தையா இராஜேந்திரன்

*(ஓய்வுபெற்ற நிலஅளவையாளர்)*

பருத்தித்துறை தம்பசிட்டியைச் சேர்ந்த கந்தையா இராஜேந்திரன் கடந்த மாதம் 12ஆம் திகதி (12.12.2002) சவூதி அரேபியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வாரித்தம்பி கந்தையா மற்றும் நாகமுத்து ஆகியோரின் சிரேஷ்ட மகனும் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை மற்றும் நாகம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கஜேந்திரன் மற்றும் சுஜேந்திரன் (அவுஸ்திரேலியா), ஜெயஜேந்திரன் (ரஷ்யா) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்ற பொன்னம்மா மற்றும் வேலும் மயிலும் (லண்டன்), மகேந்திரன் (மதுவரித் திணைக்களம் - வவுனியா), சபாரட்ணம் (ஜேர்மனி), நாராயணசாமி (தேசிய நீர்வழங்கல் சக வடிகால் அமைப்புச்சபை, யாழ்ப்பாணம்), உதயமூர்த்தி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சிவச்செல்வம் மற்றும் பாக்கியலட்சுமி (கொழும்பு), யோகலட்சுமி (அவுஸ்திரேலியா), விஜயலட்சுமி (நோர்வே), செல்வஜோதி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.01.2003 அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2 மணிக்கு நல்லடக்கத்திற்காக கருகம்பன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C/26123)
தகவல்:
சுஜேந்திரன் (மகன்)

## திருமதி ஞானமணி துரைசிங்கம்

*(ரஞ்சி ரீச்சர்)*

கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி ஞானமணி துரைசிங்கம் நேற்றுமுன்தினம் (16.01.2003) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற J.D.குணரட்ணம் தம்பதியினரின் புதல்வியும் ஆய்யாத்துரை சிறில்துரைசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் றோயட் தயாளராஜன் (கொழும்பு), சிறில்துரைராஜன் (கச்சேரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் பூமணி, நேசமணி, குணசீலன், ஜெயசீலன், தவசீலன், அதிசயமணி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற நேசதுரை மற்றும் ரதி, தேவா, பாலச்சந்திரன் (மணி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (18.01.2003) சனிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'ஞானபதி',*
*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*
(13341)
தகவல்:
துரைசிங்கம் (கணவர்)

---

## திட்டப் பணிப்பாளராக சுந்தரம்பிள்ளை நியமனம்

யாழ்ப்பாணம்,ஜன.18

யாழ்.செயலகத்தின் புதிய திட்டப் பணிப்பாளராக முன்னாள் தென்மராட்சி பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை நேற்று முன்தினம் பதவியேற்றுள்ளார்.

கடந்த சிலமாதங்களாகத் திட்டப பணியாளராகக் கடமையாற்றிவந்த சமுர்த்தி உதவி ஆணையாளர் என்.சிவபாதசுந்தரம் இனி உதவிப் பணிப்பாளராகப் பணியாற்றுவார். (எ-10)

## சமய அறிவுப் பரீட்சை திட்டமிட்டபடி நாளை நடைபெறும்

யாழ்ப்பாணம்,ஜன.18

யாழ்.மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு நடத்தும் 2002ஆம் ஆண்டுக்கான சமய அறிவுப் போட்டிப பரீட்சை முன்னர் அறிவித்தபடி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பாடசாலைகளில் நடைபெறும் என சைவசமய விவகாரக் குழுவின் செயலாளர் இ.இரத்தின சிங்கம் அறிவித்துள்ளார். (ஒ-8)

## புதிய மின்மாற்றி மூலம் மின் விநியோகம் ஆரம்பம்

ஈவினை, அச்செழு பகுதிகளுக்கு மின் விநியோகிப்பதற்கென புதிதாக அமைக்கப்பட்ட மின்மாற்றியிலிருந்து கடந்த வாரம் மின் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் இப்பகுதிகளில் நிலவிவந்த வலுக்குறைந்த மின் விநியோகம் தற்போது சீரமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-69)

## சமய சந்நிதியில்

சாவகச்சேரி, நுணாவில்குளம் திருவருள்மிகு ஸ்ரீ முருகப் பெருமான் ஆலய புனராவர்த்தன சம்புரோட்சண பஞ்சகுண்டபஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை பகல் 9 மணிக்கும் பகல் 11 மணிக்கும் இடையில் நடைபெறவுள்ளது. (எ-69)

## கருத்துரை

யாழ்ப்பாணம்,ஜன.18

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது மணிமண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு கலாபூஷணம் பாஷையூர் தேவதாசன் 'நாட்டுக் கூத்துப் பிரதியாக்கமும் மதிப்பீடும்' என்ற தலைப்பில் கருத்துரை வழங்குவார். (எ)

## கற்கைநெறி ஆரம்பவிழா

யாழ்.பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்படும் மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறியின் புதிய கல்வி ஆண்டுக்கான ஆரம்பவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கற்கை நெறிக்குத் தெரிவாகிப் பதிவுகள் மேற்கொண்ட அனைத்து மாணவர்களையும் குறிப்பிட்ட தினத்தன்று காலை 8.30மணிக்கு தவறாது சமுகமளிக்குமாறு கடல்வள அபிவிருத்தி நிலைய இணைப்பாளர் பேராசிரியர் கா.சித்திரவடிவேலு கேட்டுள்ளார். (எ-10)


**ராஜா** யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு,




காட்சிநேரம்: 10.30, 1.30, 6.30, 9.30
ரிக்கற்றுக்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்

**நிறைஞ்சனாஸ்** சங்கானை



ஜெயசூர்யா, காவ்யா நடித்த
**என்மன வானில்**
கா.நே. - 11.00, 2.30, 6.00 (புதிய நேரம்)
ஸ்பைடர் மான்
8.45 சனி, ஞாயிறு

**நாகம்ஸ்** சுன்னாகம்.
பிரசாந், சினேகா, நாசர் நடித்த
**விரும்புகிறேன்**



(புதிய வெளியீடு) (ரீலஸ்)
காட்சிகள் : 11.00, 2.00, 6.30 (புதிய நேரம்). (13320)


---

# நன்றி நவில்கின்றோம்

**எமது இல்லத்தலைவி அமரர் நவநீத சௌந்தரநாயகி (நவம்) விஸ்வரட்ணம் அவர்களது மறைவுச்செய்தி கேட்டு உடன் வந்து பிரிவுத்துயரில் பங்கேற்றவர்களுக்கும், நேற்றையதினம் (17.01.2003) நடைபெற்ற இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு உதவிய உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

*ஜயனார் வீதி,*
*பருத்தித்துறை.*
(C/26124)
தகவல்:
வி.தயாளன்
(மகன்)

---

# மரண அறிவித்தல்கள்

## செல்வன் மகேஸ்வரன் நிரோஜன்

*(சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலை மாணவன்)*

சுதுமலை தெற்கைச் சேர்ந்த மகேஸ்வரன் நிரோஜன் 16.01.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரன் (மானிப்பாய் பரிஸ் ப.நோ.கூ.ச.கிளை முகாமையாளர்) - கோமதி தம்பதிகளின் பாசமிகு புத்திரனும் மோகன் (சிந்மய பாரதி வித்தியாசாலை), கஜந்தா (சிந்மய பாரதி வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் இராசகுட்டி, பூபதி, சிவலிங்கம் (ஜேர்மனி), தவமணிதேவி ஆகியோரின் அன்புப் பேரனும் சுப்பிரமணியம், மனோகரன், யோகராஜா, பரமேஸ்வரன் (ரவி - கனடா), சிறிமதி, செல்வமதி, வித்யா ஆகியோரின் அன்புப் பெறாமகனும் தவமலர், தவராசா, அண்ணாத்துரை (சுவிஸ்), பொன்ராசா, செல்வன் (டோகா), அமிர்தராஜா ஆகியோரின் பாசமிகு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2003) சனிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தாவடி மயானத்தில் தகனஞ்செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*எச்சாட்டி வைரவர் கோவிலடி,*
*சுதுமலை தெற்கு,*
*மானிப்பாய்.*
(13381)
தகவல்:
தவராசா (மாமன்)

## திருமதி செல்லையா செல்லமுத்து

துன்னாலை கிழக்கு, கலிகைச் சந்தியைச் சேர்ந்த திருமதி செல்லமுத்து அவர்கள் கடந்த (09-01-2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பு தம்பதிகளின் அருமை மகளும் செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற புஷ்பராசா மற்றும் ஜெயராஜா (பிரான்ஸ்), தெய்வேந்திரராஜா (ரவி - பிரான்ஸ்), ரமேஸ்வரராஜா (ஜேர்மனி), றெஜினா (நியூஸிலாந்து), சஜீதா (கிளிநொச்சி), துஷிதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் பூமணி, இரெட்ணம், மகேந்திரம் (அமெரிக்கா), திரவியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அம்பிகா (பிரான்ஸ்), கவிதா (பிரான்ஸ்), இந்திரா (ஜேர்மனி), விநாயகமூர்த்தி (நியூஸிலாந்து), றேபேட் (ஜேர்மனி), உதயன் (கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும் துஷாந், ஷிராணி, கௌசி (பிரான்ஸ்), துர்க்கா, பிரியங்கா (பிரான்ஸ்), நிஷாந்தி, நிஷாந்த், நிரோஷா, நிரோஷாந் (ஜேர்மனி), கஜேந்தி, சுபேந்தி, வினோத் (நியூஸிலாந்து), துஷாந்தி, பிரசாந்தி, துஷ்யந்தி, உஜேந்தி, வினேஸ், தர்ஸன், பிரவு (கிளிநொச்சி), மேரி அஷாரியா, மார்பின், மாக்ஸ் (ஜேர்மனி) ஆகியோரது அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-01-2003) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கரவெட்டி வேரெண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலிகை,*
*துன்னாலை கிழக்கு,*
*கரவெட்டி.*
(13376)
தகவல்:
குடும்பத்தினர்
க.புஷ்பராசா (பெறாமகன்)

## வையாபுரி தனபாலசிங்கம்

**(ரேடியோ மாஸ்ரர்)**

*(உரிமையாளர் - மாஸ்ரர் எலக்ரோனிக்ஸ் சென்ரர், சங்கத்தானை)*

இத்தியடி, சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த வையாபுரி தனபாலசிங்கம் அவர்கள் நேற்று (17.01.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சறோஜாவின் அன்புக் கணவரும் பாலேஸ்வரி, பாலகிருபா (உரிமையாளர் - கிருபா எலக்ரோனிக்ஸ் சென்ரர், பருத்தித்துறை), பாலவினோதா, பாலசெந்தூரன், பாலபரணீதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரதீபன், மைக்கல், கார்த்திகா (கவிதா), தர்சினி ஆகியோரின் மாமனாரும் ஸ்ரீராம், கீர்த்தனா, அபிராமி, ஜெயராம், ரகுராம் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2003) சனிக்கிழமை பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லாரை கொற்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இத்தியடி,*
*சங்கத்தானை,*
*சாவகச்சேரி.*
தகவல்:
கிருபா (மகன்)
(கிருபா எலக்ரோனிக்ஸ் சென்ரர், பருத்தித்துறை) (13378)

## பிரம்மஸ்ரீ

## பஞ்சநாதீஸ்வரக்குருக்கள் இரகுநாதசர்மா

*(முன்னாள் பாலாவோடை அம்மன் கோயில் அர்ச்சகர்)*

காரைநகர், களபூமி, பாலாவோடையைச் சேர்ந்த பஞ்சநாதீஸ்வரக் குருக்கள் இரகுநாத சர்மா 16-01-2003 வியாழன் இரவு சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கமலாம்பிகை அம்மாவின் அன்புக் கணவரும் பரமேஸ்வரக் குருக்கள், இராகினிதேவி, யாழரசி, உலகேஸ்வரக் குருக்கள், யோகமலர், புஷ்பராச சர்மா, கலாராசக் குருக்கள் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தேவகி, இராமச்சந்திர சர்மா, நகுலேஸ்வரக் குருக்கள் செண்பகவல்லி, ஜெயராமக் குருக்கள், சிவசக்தி, மோகனாம்பிகை ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரதீபா, கபிலேஸ்வரன், ஜெகத், ஜெனனி, பிரதீப சர்மா, ஜெகதாரணி, ஜெகதர்சினி, கஜநேச சர்மா, கஜேந்தினி, கஜப்பிரிய சர்மா, கர்ணிகா, சிந்துஜா, தபாஸ்கர சர்மா, பானுஜன், கீர்த்தனா, கிருஷாஞ்சனா, அரவிந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17-01-2003 வெள்ளிக்கிழமை மாலை பிரான்பற்று இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முருகமூர்த்தி கோவில்,*
*பிரான்பற்று,*
*பண்டத்தரிப்பு.*
(13374)
தகவல்:
இ.உலகேஸ்வரக் குருக்கள்
(மகன்)

# ஆறுபேரைப் பலிகொண்ட வெடி குண்டை பாடசாலை வளவுக்குள் வைத்தவர் யார்?

## மூன்று விசேட பொலீஸ் குழுக்கள் விசாரணை

கொழும்பு,ஜன.18

அநுராதபுரம், எப்பாவலையில் ஐந்து சிறுவர்கள் உட்பட ஆறு பேரை பலிகொண்ட குண்டு எந்த ரகத்தைச் சேர்ந்தது என்பதைக் கண்டுபிடிப்பதற்கான விசாரணையை பொலீஸார் மேற்கொண்டிருக்கின்றனர். அந்தக் குண்டைப் பாடசாலை வளாகத்துக்குள் கொண்டு வந்து வைத்தவர் யார் என்பது குறித்துப் பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இவ்விசாரணைகளில் 3 விசேட பொலீஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன என்று வடமத்திய மாகாணப் பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஆனந்தஜெயசேகர தெரிவித்திருக்கிறார்.

குண்டு எந்தரகத்தைச் சேர்ந்தது என்பதைக் கண்டுபிடிக்கும் ஒரு முயற்சியாக கொல்லப்பட்ட 6 பேரினதும் சடலங்கள் எக்ஸ் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. சம்பவ இடத்தில் இருந்த ஆறு பேருமே கொல்லப்பட்டு விட்டனர் என்பதால் அந்த இடத்தில் என்ன நடந்தது என்பதைக் கேட்டறிய எந்த ஒரு சாட்சியுமே இல்லாத நிலையிலேயே பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

இராணுவத்தை விட்டு விலகிய ஒரு சிப்பாய் அல்லது சேவையில் உள்ள சிப்பாய் இக்குண்டை அங்கு கொண்டு போய்ப்போட்டிருக்கலாம் என்று பொலஸார் சந்தேகிக்கின்றனர். (ஒ)

## நிவாரண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்படும் பொருள்கள் எடுத்துவரப்பட்டுள்ளன. கடந்த செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை இறங்குதுறை வந்து சேர்ந்த சஜிந்த கப்பலில் இருந்த பொருள்கள் லொறி உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் காரணமாக இறக்கப்படவில்லை.

நேற்று வியாழக்கிழமை பருத்தித்துறை இறங்குதுறைக்கு வந்த யாழ்.செயலக புனர்வாழ்வு பிரதி உதவித் திட்டப் பணிப்பாளர் கப்பலில இருந்த அரிசி மூடைகளிலிருந்து மாதிரிகளை எடுத்து பரிசோதனை செய்தார். இதில் எடுத்துவரப்பட்ட அரிசி தரமானதாக உள்ளதென முடிவுசெய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இக்கப்பலில் இருந்து பொருள்களை இறக்க அதிகாரிகள் அனுமதியளித்துள்ளனர். (ஒ-173)

## எதிரணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோப்பு போன்ற இடங்களுக்கும் இக்குழு சென்று நிலைமைகளை நேரில ஆராயும். நெடுந்தீவில் ஈபிடிபியினரை வெளியேறக் கோரி போராட்டம் நடத்தும் பொதுமக்களுடனும், யாழ்ப்பாணத்தில் கைதாகிக் காணாமற் போனோரின் பாதுகாவலர் சங்கத்தின் பிரதிநிதிகளுடனும் இக்குழு உரையாடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அரசுத் தரப்பினதோ, படைத்தரப்பினதோ ஒத்துழைப்பு பெறாமல் சுயாதீன ஏற்பாட்டில் இக்குழு யாழ். வரத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நயினாதீவுக்கும் இக்குழுவினர் செல்வர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

குறைந்தது பத்து முக்கிய பிரமுகர்கள் இக்குழுவில் இடம் பெறக்கூடும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ)

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கங்கள், நிறுவனங்களுடன் பேச்சுக்கள் நடத்திய பின்னர் தனியார்துறைகளில் தொழில் புரிபவர்களுக்கான சம்பள அதிகரிப்புக்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

முன்னைய அரசினால் நியமிக்கப்பட்ட சம்பள ஆணைக்குழுக்களின் சிபாரிசுகள் கவனத்திற்கு எடுக்கப்பட மாட்டாது. ஏனெனில், அந்த ஆணைக் குழுக்கள் ஊழியர்களின் சேவைகளை நிறுத்துவதற்கான பிரேரணையைத் தெரிவித்துள்ளன.

பாவனைப் பொருள்களின் விலையுயர்வு தொடர்பாக ஆராய்வதற்கு சிரேஷ்ட நிர்வாக உத்தியோகத்தர் கே.எச்.ஜே.விஜயதாச தலைமையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குழு ஒன்றை நியமித்துள்ளார்

- இவ்வாறு நிதியமைச்சர் கே. என்.சொக்ஸி தெரிவித்தார்.

## பொங்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் இணைந்து எழுச்சிப் பாடல்களைப் பாடினார்கள். அதன்பின்னர் மட்டக்களப்பு, திருமலை, வவுனியா, மன்னார் மற்றும் வன்னி மாவட்ட மக்களின் சார்பில் நிகழ்வில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் உரையாற்றினர்.

மக்கள் பிரதிநிதிகளால் தயாரிக்கப்பட்ட பொங்குதமிழ் செய்தியை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் எஸ்.கஜேந்திரன் வாசித்தார்.

நிகழ்வின் முடிவில் தமிழினத்தின் குரலாக 'எமதுநிலம் எமக்கு வேண்டும்' எனும் கோஷத்தை, நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் சேர்ந்து உரத்து எழுப்பினர். நிகழ்வில் பல்கலைக் கழகத் துணைவேந்தர், விரிவுரையாளர்கள், விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள், பொது அமைப்புக்களின் பிரமுகர்கள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வையொட்டி அப்பகுதி எங்கும் மஞ்சள், சிவப்பு நிறத்திலான கொடிகள் கட்டப்பட்டிருந்தன. அத்துடன் பல்கலைக்கழக மாணவர் பொதுத் அறையில் தமிழர் வரலாறு தொடர்பான கண்காட்சியும் இடம்பெற்றது. (ஒ-10-5)

# புலிகளிடம் சரணடைந்த சிப்பாய் மீண்டும் இராணுவ முகாம் திரும்பினார்

கொக்கட்டிச்சோலை,ஜன.18

விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த இராணுவச் சிப்பாய் மீண்டும் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டார். செங்கலடி இராணுவ முகாமில் பணியாற்றும் நிக்கவரெட்டியவைச் சேர்ந்த சமிரசந்திரதாஸ (வயது-28) என்ற இராணுவச் சிப்பாயே விடுதலைப் புலிகளிடம் சரணடைந்து நேற்று முன்தினம் மீண்டும் முகாம் திரும்பியவராவார்.

விடுதலைப் புலிகளின் வந்தாறுமூலை அலுவலகத்தில் தனது ஆயுதத்துடன் இவர் சரணடைந்திருந்தார். தனக்கு இராணுவத்தில் பணியாற்ற விருப்பமில்லையென்றும் - வைத்திய சிகிச்சைக்காக விடுமுறையில் செல்லக்கூட தனக்கு இராணுவம் அனுமதி தரவில்லை என்றும் - இதன் காரணமாகவே விடுதலைப் புலிகளின் உதவியைத் தான் நாடியதாகவும் - அவர் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி த.ரமேஷ், நிர்வாகப் பொறுப்பாளர் பொ.ரெஜினோல்ட் ஆகியோர் வவுணதீவில் வைத்து இராணுவ உயரதிகாரியிடம் அந்தச் சிப்பாயை ஒப்படைத்தனர். (ஒ)

## 34 இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழகத்தின் பல்வேறு அகதி முகாம்களில் இலங்கையின் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த பல பல்லாயிரக்கணக்கான தமிழ் அகதிகள் வாழ்ந்து வருகின்றனர். தற்போது அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்று வரும் அமைதிப் பேச்சுக்களை அடுத்து அவர்கள் தாயகம் திரும்புவதாகக் கூறப்பட்டது. (ஒ)

## விலை உயர்வு குறித்து ஆராய குழு நியமனம்

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் வெகுவேகமாக அதிகரித்து வருவது குறித்து ஆராய அரசு விசேட குழு ஒன்றை நியமித்திருக்கிறது. சிரேஷ்ட நிர்வாகத்துறை அதிகாரி கே.எச்.ஜே.விஜேதாச இக்குழுவுக்குத் தலைமை தாங்குகிறார்.

குழுவின் அறிக்கையை அடுத்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமென நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்திருக்கிறார்.

## வடக்கு...

தலைமைத்துவத்தின் கீழ் அணிதிரண்டுள்ளது என்பதை சிங்கள தேசத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் இந்த எழுச்சிநிகழ்வு எடுத்துக் கூறும்.

இதேவேளை -

மக்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் குறித்தும் ஆராய்ந்துவருகிறோம். அவர்களின் எண்ணங்களை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்காட்ட 'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வுகள் தொடர்ந்து பயன்படுத்தப்படும்.

என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர் (ஒ-5-10)

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்

எமது ஆலயத்தில் 2003.01.19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பின்வரும் நிகழ்வுகள் கண்ணன் இல்லத்தில் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

1. நூலகம் ஆரம்பித்தல்.
2. அறநெறிப் பாடசாலை ஆரம்பித்தல்.
3. ஏகாதசி புராணநூல் வெளியீடு.
4. பாடசாலை மாணவர் நூறு (100) பேர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கல்.
5. திருப்பாவைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவருக்குப் பரிசில் வழங்கல்.

### திருப்பாவைப் போட்டி முடிவுகள் - 2003

**கீழ்ப் பிரிவு**

செல்வி தர்சிகா சிறிதரன் (யா/விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி.)
செல்வி மதுசூதனா சாந்தகுமார் (யா/வட. இந்துமகளிர் கல்லூரி, பருத்தித்துறை.)
செல்வி தர்மினி பாலச்சந்திரன் (யா/வட. இந்துமகளிர் கல்லூரி, பருத்தித்துறை.)

**மத்திய பிரிவு**

செல்வி சுகிர்தா சந்திரமோகன் (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை.)
செல்வி சர்மிளா தர்மராசா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை.)
செல்வி இந்திகா தங்கராசா (யா/நெல்லியடி ம.ம.வித்தியாலயம், கரவெட்டி.)

**மேற் பிரிவு**

செல்வி தர்சிகா நாகேந்திரன் (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை.)
செல்வன் நந்தபாலன் இரஞ்சிதபாலன் (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.)
செல்வன் ச.சசிக்குமார் (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.)

திருப்பாவைப் போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் பரிசில்கள் வழங்கப்படும்.

மேற்படி நிகழ்வுகளில் பல பிரமுகர்களும் சமயப் பெரியார்களும் கலந்துகொள்ளவுள்ளனர். மாயவன் அடியார்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து மாயவன் அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

*துன்னாலை வடக்கு, புலோலி.* (13382) தலைவர், அறங்காவலர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசதுரை கனகாம்பிகை

மாதனை, பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி இராசதுரை கனகாம்பிகை புதன்கிழமை (15-01-2003) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி - பாக்கியத்தின் அன்பு மகளும் இராசதுரையின் அன்பு மனைவியும் கிருபானந்தன், கஸ்தூரி, சசிதரன், வித்தியானந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவநங்கன், தர்சா ஆகியோரின் மாமியாரும் சயன்ந், விதுசா, கோபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-01-2003) சனிக்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் பிற்பகல் 2மணியளவில் தகனக்கிரியைக்காக கோரியடி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*மாதனை, பருத்தித்துறை.* (C/26125) தகவல்: பிள்ளைகள், சகோதரர்கள்

## வெற்றிவேலு திருநாவுக்கரசு

தாவடியைப் பிறப்பிடமாகவும் தாவடி வடக்கு, மாரியப்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேலு திருநாவுக்கரசு நேற்று (17.01.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வெற்றிவேலு - பொன்னம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பையா - முத்துப்பிள்ளையின் மருமகனும் காலஞ்சென்ற சொர்ணம்மாவின் அன்புக் கணவரும் செல்லத்தம்பியின் (வடிவேலு) மைத்துனரும் பொன்னம்பலம், கமலாதேவி, சுந்தரலிங்கம், நகுலேஸ்வரன், முருகதாஸ் (கனடா), சண்முகதாஸ் (கனடா), மதுரைநாயகி (கனடா), கௌரி, சோதி (தாவடி)ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மாலை 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாவடி வடக்கு, (மாரி தோட்டம்), கொக்குவில்.* (C/26126) தகவல்: சு.நகுலேஸ்வரன் (முருகையா - மருமகன்)

யாழ் மாவட்ட மீனவர்களுக்கு ஓர் மகிழ்ச்சிகரமான செய்தி!
Royal Ice Industries
Manufactures, Dealers in Ice Block
கோலாகலமான திறப்பு விழா
அன்புடையீர்!
மங்களகரமான ஆரம்ப விழா இன்று (18.01.2003) சனிக்கிழமை பகல் 11.47 மணி தொடக்கம் 12.17 மணி வரையுள்ள சுப வேளையில் யாழ்ப்பாணம் பிரதான வீதி, இல: 149ம் இலக்க கட்டடத்தில் நடைபெறவுள்ளது. இவ் வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
றோயல் ஐஸ் இன்டஸ்ரீஸ்
149, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
'உங்கள் தேவையே எங்கள் நோக்கம்'
149, Main Street, Jaffna. T.P: 0777563056 E-mail: royai@yahoo.com

தாமதியாது இணைந்து கொள்ளுங்கள்!
A/L 2004
LOGIC
★ பகுதி II (விஞ்ஞானமுறை)
★ குறியீட்டு அளவையியல்
எஸ்.எஸ்.மனோகரன்
ஆரம்பம் : 19.01.2003 காலை 8 மணி
BEACON
யாழ்நகர் (வெலிங்டன் சந்தி)

புதிய அனுமதிகள்
தரம் 1 முதல் O/L. வரை
ஜனவரி 20 மு.ப. 8 மணி
I.B.S. சுண்டுக்குளி
I.B.S. நல்லூர்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.1.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.